கோகுலம்

GOKULAM

பிப்ரவரி '84 ரூ.2





கவியரசி சரோஜினி தேவி

பிறந்தநாள்-பிப்ரவரி.13

கோகுலம்

மலர்—2 இதழ்—1 1984 பிப்ரவரி மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

த ப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

அன்புள்ள சிறுவர் சிறுமியர்க்கு

கோகுலம்

உங்கள் வீடுகளிலே பால் பொங்கியிருக்கும். உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கியிருக்கும். என்றும் நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்; மேன்மேலும் நல்ல முயற்சிகளில் ஈடுபட வேண்டும்; வெற்றிமேல் வெற்றி பெறவேண்டும் என்பதே எங்கள் ஆசை.

பொங்கல் வாழ்த்து அனுப்பிய இளம் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த இதழில் 16 பக்க வண்ணப் படக்கதை— வில் விஜயனை, நீங்கள் காண்கிறீர்கள். அர்ஜுனனின் அஞ்சா நெஞ்சத்தையும், அரும் செயல்களையும் பார்த்தும் படித்தும் நிச்சயம் பரவசம் அடைவீர்கள். பேராசிரியர் 'கல்கி' அவர்களின் அருமைப் புதல்வி திருமதி ஆனந்தி அவர்கள் உங்களுக்கெல்லாம் இக்கதை மூலம் ஆனந்தம் அளிக்க முன்வந்திருக்கிறார்.

ஏவி. எம். தங்கப் பதக்கம் பெற்ற 'கருணை விழிகள்' தொடர்கதையும் இந்த இதழில் ஆரம்பமாகிறது. இக்கதையை எழுதும் திருமதி ஆர். பொன்னம்மாள் அவர்கள், உங்களுக்காகப் பல சிறுகதைகளையும், பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியவர். ஏற்கெனவே குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் சிறு கதைக்கான பரிசைப் பெற்றவர். இவர் 'கருணை விழிகள்' என்று தலைப்புக் கொடுத்திருக்கிறாரே, அந்த விழிகள் யாருடையவை என்று உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா, பாருங்கள்! தொடர்ந்து படிக்கப் படிக்க இந்தக் கேள்விக்கு விடை கிடைக்கும்.

- அழ. வள்ளியப்பா



மின்மினிக் கதைகள்

நினைத்ததும் நடந்ததும்!



ஒரு கிராமத்தில் ஒரு சாது பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். வழியிலே அவர் ஒரு செம்மறி ஆட்டைப் பார்த்தார்.

அது அவர் அருகிலே வந்ததும், பின்னால் இரண்டடி சென்றது; அவருக்கு நேராக நின்று தலையைத் தாழ்த்தியது.

''ஆஹா! இது எவ்வளவு அறிவுள்ள பிராணி! நான் மதிக்கத் தக்கவன் என்பதைத் தெரிந்து கொண்டு என்னை வணங்கப் போகிறது'' என்று நினைத்தார் சாது.

ஆனால், செம்மறி ஆடு என்ன செய்தது?

'டங், ...ங்' -பலமாக ஒரு முட்டு முட்டி அவரைக் கீழே தள்ளியது.

தம் மீது பாய்வதற்குத்தான் அது பின்னால் போனது என்பதை, பாவம், அந்தச் சாது அப்போது தான் உணர்ந்தார்!

கடிகாரத்திற்கு ஓய்வா?



அந்தக் குடியானவன் வீட்டுக் கூடத்திலே ஒரு சுவர்க் கடிகாரம் இருந்தது. அது அவனுடைய பாட்டன் காலத்தில் வாங்கியது. 150 ஆண்டுகளாகியும் அது ஒழுங்காக, சரியாக, வேலை செய்தது. ஒரு நாள்கூட அது நின்றதில்லை.

அந்தக் குடியானவன் காலையில் எழுந்ததும் கடிகாரத்தின் அருகிலே செல்வான். சரியாக அது ஓடுகிறதா என்று பார்ப்பான்.

வழக்கம்போல், அன்று காலையில் அவன் பார்க்கும்போது, கடிகாரம் அவனிடம் ''நான் 150 ஆண்டுகளாக இடைவிடாமல் ஒழுங்காக உழைத்திருக்கிறேன். சரியான நேரத்தையே காட்டி வந்திருக்கிறேன். இதுவரை ஓயாமல் உழைத்த நான், சிறிதுநேரம் 'டிக்... டிக்' ஒலியை நிறுத்திவிட்டு ஓய்வு எடுக்க விரும்புகிறேன்'' என்றது.

குடியானவன் மிகவும் கெட்டிக்காரன். அவன் உடனே, ''என்ன! உனக்கு ஓய்வு வேண்டுமா? நீதான் ஒவ்வொரு 'டிக்... டிக்' ஒலிக்கும் இடையிலே ஒரு விநாடி ஓய்வு எடுத்துக் கொள்கிறாயே! மறந்து விட்டாயா?'' என்று கேட்டான்.

இதைக்கேட்ட கடிகாரம் ஒருகணம் யோசித்தது. பிறகு, எதுவுமே நடக்காதது போல், 'டிக்...டிக்' சப்தத்துடன் வேலையைத் தொடர்ந்தது!

உழைப்பவனுக்கு விருந்தா?



அரேபியாவில் ஹாதிம்தாய் என்று ஒருவர் இருந்தார். அவர் பெரிய செல்வந்தர். தாராள மனம் உடையவர். பல பரிசுகளை வழங்குபவர்.

அவரிடம் ஒருநாள் அவருடைய நண்பர்கள், ''உங்களைவிடச் சிறந்த ஒரு மனிதரை நீங்கள் எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்கள்.

''ஓ, பார்த்திருக்கிறேனே! ஒரு தடவை நான் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தேன். அந்த விருந்துக்கு யார் வேண்டுமானாலும் தாராளமாக வரலாம் என்றும் அறிவித்திருந்தேன். அப்போது ஒரு விறகு வெட்டியைச் சந்தித்தேன். அவன் விறகுகளை வெட்டி, கட்டிக் கொண்டிருந்தான்.

''ஏழையாகிய அவனிடம் சென்று, 'ஏனப்பா, ஹாதீம்தாய் எல்லோருக்கும் விருந்து கொடுக்கிறாரே, அதற்கு நீ செல்லவில்லையா??' என்று கேட்டேன்.

''அதற்கு அவன், 'என் உணவுக்குத் தேவையானதை என்னால் உழைத்துச் சம்பாதிக்க முடியும். என்போல் உழைத்துச் சம்பாதிப்பவர்களுக்கு ஓசிச் சாப்பாடு தேவையில்லையே!' என்றான். அதைக் கேட்டு நான் அவன் பெருமையை உணர்ந்தேன்!'' என்று கூறினார் ஹாதீம்தாய்.

இந்நிகழ்ச்சியைக் கேட்டு அவரது நண்பர்கள் வியப்படைந்தார்கள்.



அழுது வடியும் வியாபாரி

பாரசீக தேசத்தில் ஒரு பெண் கடைத்தெருவிலே தேன் வியாபாரம் செய்து வந்தாள். அவள் எப்போதும் மலர்ந்த முகத்துடனே இருப்பாள். இனிமையாகப் பேசுவாள். எப்போதும், அவளது கடையைச் சுற்றி வாடிக்கையாளர் கூட்டம் இருக்கும்.

அவளது வியாபாரம் நன்கு நடைபெறுவதையும், அவள் நல்ல லாபம் அடைந்து வருவதையும் கண்டான் ஒருவன். அவனும் தேன் வியாபாரத்தில் இறங்கினான்.

அவன் எப்போதும் எதையோ பறிகொடுத்தவன் போல் இருப்பான். அழுது வடியும் அவனுடைய முகம். சிரிக்கவே மாட்டான். ஆகையால், அவன் கடைக்கு யாருமே வருவதில்லை. ஈகூட வராது.

பொழுது மறையும் நேரம் வந்தது. அதுவரை ஒருகாசுக்குக் கூட விற்பனை ஆகவில்லை!

அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த ஒரு பெண்மணி, அவளுடைய கணவனிடம் சொன்னாள்: ''இந்த ஆளைப் பாருங்கள். இவன் முகத்திலுள்ள கசப்பு, தேனிலும் இறங்கி விடப்போகிறது!''



கண்ணீரின் காரணம்?

கிராமத்திலிருந்த ஒருவர், தம்முடைய மகனைக் காசிக்கு அனுப்பி அங்கிருந்த ஒரு பண்டிதரிடம் கல்வி கற்க ஏற்பாடு செய்தார். அவன் 12 ஆண்டுகள் காசியில் இருந்தான். பிறகு வாலிபனாகக் கிராமத்திற்குத் திரும்பி வந்தான்.

அவன் காசியில் 12 ஆண்டுகள் படித்ததால், பெரிய அறிஞனாக இருப்பான் என்று அந்தக் கிராமத்தில் இருந்தவர்கள் நினைத்தார்கள். ஒருநாள், ஒரு சமஸ்கிருதப் புத்தகத்தை அவனிடம் கொடுத்து, ''கல்வியில் சிறந்தவரே; எங்களுக்கு இதில் உள்ளதைப் படித்து விளக்கிக் கூற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.





அவன் அந்தப் புத்தகத்தைப் புரட்டினான். பக்கங்களை உற்று உற்றுப் பார்த்தான். அவனுக்கு எதுவுமே புரியவில்லை.

தமிழிலே 'அ, ஆ' என்று ஆரம்ப வகுப்பிலே படித்தோமே, அப்படி சமஸ்கிருதத்தில் சில எழுத்துக்களைக் குண்டு குண்டாகக் கரும்பலகையில் எழுதிப் போட்டுக் காசியிலே அவனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தார்கள். அவற்றை மட்டுமே அவன் கற்றுக்கொண்டிருந்ததால், அதற்கு மேல் எதுவும் தெரியாது.

புத்தகத்திலுள்ள எழுத்துக்களை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது.

'புத்தகத்தில், உள்ளத்தை உருக்கும் ஏதோ ஒரு பகுதியைப் படித்துவிட்டார் போலிருக்கிறது! அதனால் தான் இப்படிக் கண்ணீர்விடுகிறார்' என்று நினைத்து, ''நீங்கள் படித்த பகுதியை எங்களுக்கும் சொல்லக் கூடாதா?'' என்று கேட்டார்கள் சுற்றி இருந்தவர்கள்.

''ஐயோ! இந்த எழுத்துக்கள் காசியிலே எவ்வளவு பெரிதாக, குண்டு குண்டாக இருந்தன! இங்கே இந்தப் புத்தகத்தில் இப்படி இளைத்துப்போய் விட்டனவே!'' என்று கூறிக் கண்ணீர் விட்டான் அந்த வாலிபன்!

இரண்டும் சமம்!



ஒருசமயம் முகமது நபி ஒரு பெரிய திட்டத்தை மேற்கொண்டார். அந்தத் திட்டம் நிறைவேறப் பலர் பலவகையிலும் உதவினார்கள்.

சிலர் தங்களிடமிருந்த செல்வத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கொடுத்தார்கள். சிலர், பாதியைக் கொடுத்தார். ஒருவர் தன் செல்வம் முழுவதையுமே கொடுத்து விட்டார். பணமும், கருவிகளும், மிருகங்களுமாக வந்து குவிந்தன.

அப்போது ஓர் ஏழைப் பெண் மூன்று பேரீச்சம் பழங்களையும், ஒரு ரொட்டித் துண்டையும் கொண்டு வந்து முகம்மது நபியிடம், தன் காணிக்கையாகக் கொடுத்தாள்.

அதைக் கண்டு அங்கிருந்தவர்கள் கேலியாகச் சிரித்தார்கள்.

ஆனால், முகம்மது நபி பிறகு ஒருநாள் இதைப் பற்றி என்ன சொன்னார் தெரியுமா?

''நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் தேவதைகள் தராசு ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். தராசின் ஒரு தட்டிலே அந்த ஏழைப் பெண் தந்த மூன்று பேரீச்சம் பழங்களையும் ஒரு ரொட்டித் துண்டையும் வைத்தார்கள். இன்னொரு தட்டிலே இதுவரை நான் பெற்ற மற்ற எல்லாப் பொருள்களையும் வைத்தார்கள். இரண்டு தட்டுக்களும் சமமாக இருந்ததைக் கண்டேன்'' என்றார்.

உண்மையான அன்புடன் எதைக் கொடுத்தாலும், அதற்கு மிகுந்த மதிப்பு உண்டு என்பதையே அவர் நன்கு உணர்த்தினார்.

-ஸ்ரீ அன்னை

எழுதி, சென்னை, 'அரவிந்தர் கல்விக் கழகம்' வெளியிட்டுள்ள 'சாசுவதக் கதைகள்' என்ற புத்தகத்தில் காணப்படும் சில கதைகளே இங்கு திரும்பக் கூறப்பட்டுள்ளன.

இந்த இதழ் எழுத்தாளர்கள்



எஸ். ரங்கநாதன்



திருச்சி வாசுதேவன்



பூவை அமுதன்



தஞ்சை ஞானவாசகன்



எஸ். மாதவன்

வண்ண அட்டைப்படம்: வித்யாவ்ரதா


பாம்பாட்டி

திருச்சி வாசுதேவன்

தலைப்பாகை வைத்திருந்தான்;
தாடி, மீசை வளர்த்திருந்தான்
மலைப்பாம்பைக் கழுத்தினிலே
மாலை போலப் போட்டபடி
வந்தான் பாம்பாட்டி—தெருவில்
வந்தான் பாம்பாட்டி!

மகுடியிசை ஊதி வந்தான்;
தகரக் குவளை குலுக்கிவந்தான்;
நகராமல் வீடுகளில்
நாலு காசு வாங்கியபின்
நடந்தான் பாம்பாட்டி—அசைந்து
நடந்தான் பாம்பாட்டி!





'கன்கார்ட் அதிசய விமான'த்தைப் பற்றிய விஷயங்கள் யாவும் எங்களைப் பிரமிக்க வைத்தன. தொடர்ந்து இதுபோன்ற அறிவை வளர்க்கும் விஷயங்களைத் தர வேண்டும்.

—என். விக்னேஷ், சிதம்பரம்.

சிறுவர் — சிறுமியர்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் 'கோகுலம்' ஓராண்டை வெற்றியுடன் நிறைவேற்றியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. மாதம் இரு முறையாக மாற்றினால், அதிகப் பயனுள்ளதாக இருக்கும்.

—இமயன், பெங்களூர்—53.

'விஞ்ஞான விளையாட்டு' மூலம் நான் மிகுந்த பயனடைந்து வந்தேன். இப்போது, தணிகை உலகநாதனின் பயனுள்ள கதை அமைப்புடன் கூடிய கட்டுரையையும் கண்டு இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். பலரிடத்தில் 'கோறுகிறேன்' என்று எழுதுவது தவறு எனக் கூறித் திருத்தியும் விட்டேன்.

—எம். எச். சாதிக் பாட்சா, நீடூர்.

'ஜில்ஜில் பூனை சென்றது எங்கே?' நெடுங்கதையின் இடைஇடையே, உலகிலேயே பெரிய கடிகாரம், மீன் மழை, தவளை மழை போன்ற பொது அறிவுச் செய்திகளையும் கதாசிரியர் தங்கமணி கூறிக் கதைக்குச் சுவை கூட்டியிருக்கிறார்.

—சி. ஆர். நாகராஜன், வளவனூர்.

'இளமையில் இவர்கள்' பகுதியில், இளமையில் அவர்கள் கடைப்பிடித்த பண்புகளையும், அவர்கள் உயர்ந்த விதத்தையும் மிகவும் தெளிவாக அறிகிறோம்.

—ந.மணிகண்டன் (682),கோனேரிராஜபுரம்.

இந்த மாதம் வெளிவந்த 'புகைப்பட ஆல்பம்' அனைத்தும் அருமை. அப்படியே கிழித்து, என் புகைப்பட ஆல்பத்தில் சேர்த்து விட்டேன்.

கிரிக்கெட் சீசனுக்குக் கிரிக்கெட்டைப் பற்றி வெளியிடாமல், மல்யுத்தம் பற்றி வெளியிட்டிருக்கிறீர்களே!

—எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

[சென்ற அக்டோபர் இதழைப் பார்க்கவில்லையா? கிரிக்கெட்டைப் பற்றி அப்போதே வெளியிட்டு விட்டோமே! —ஆசிரியர்.]

மின்மினிக் கதைகள் படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் கண்மணிக் கதைகளாகத் திகழ்கின்றன.

—ஜி. கௌசல்யா, ஸ்ரீரங்கம்.

ஹை! அடுத்த இதழில் டபுள் போனஸா! தொடர்கதை, வண்ணப்படக் கதை இரண்டையும் படிக்க இப்போதே ஆர்வமாயிருக்கிறேன்.

—ஏ.எம். முஹம்மது நிஜாமுத்தீன், நீடூர்.

'ஜவான் ஓர் அசடு' என்பதை 'ஜவான் ஓர் அரடு' என்றும், 'வெற்றிவேல் வீர வேல்' என்பதில் 'விரவேல்' என்றும் ஓவியர்கள் எழுதியதைச் சரிபார்க்காமல் வெளியிட்டு விட்டீர்களே!

—கா. சுப்பிரமணியன், ஏம்பலம்.

[தவறுதான். இதுபோல் பலர் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எல்லோருக்கும் நன்றி. —ஆசிரியர்.]

'பழைய கதை; புதிய பாடல்' மிகவும் சுவையாக உள்ளது; தொடர்ந்து தாருங்கள்.

—வி. சாருமதி, நாகப்பட்டினம்.

'அதே 111' என்ற படக்கதையும், 'பொங்கலோ பொங்கல்' கவிதையும் தெவிட்டாத இன்பம் தந்தன. 'பிருந்தாவனம்' பக்கங்களை அதிகப்படுத்தக் கூடாதா?

—வெ. விஜேந்திரன் (4992), ஈரோடு—3.

கேள்வி நேரத்தில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற பாடலை அப்பர் பாடியதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பாடலைப் பாடியவர் தாயுமானவர் என்பதைப் பல புத்தகங்களில் படித்திருக்கிறேனே!

—து. ரமா (4055), நெய்வேலி—2.

[அப்பர்தான். தாயுமானவர் என்றிருந்தால் அது சரியன்று —ஆசிரியர்.]

யாமறிந்தஇதழ்களிலே'கோகுலம்'போல் இனிதாவது எங்கும் காணோம். உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

—மூ. தொல்காப்பியன், சுந்தரப்பெருமாள் கோயில்.

நம்ம ஊர் தெனாலிராமன், பீர்பால் ஆகியோரின் கதைகளுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல நாசருதீன் ஹோஜா கதைகளும்! மேலும் அவரது கதைகளைக் கோகுலத்தில் எதிர்பார்க்கலாமா?

—விஜயா ரங்கநாதன், டோம்பிவிலி.

காப்பி அடித்துக் கதை, துணுக்கு எழுதுகிறார்களே, அவர்கள் பெயர்களை வெளியிட்டால், திருந்த வழி ஏற்படுமே!

—சி. பானுமதி, மதுரை—21.

[இந்த இதழில் வந்துள்ள 'கேசவன் கதை எழுதுகிறான்' கதையை அவர்கள் படித்தாலே போதும்; திருந்தி விடுவார்கள். —ஆசிரியர்.]

பழைய கதை; புதிய பாடல்

ஏமாந்த கரடி!

காட்டு வழியில் வேலன் செல்ல,
  கரடி கண்டது.
ஓட்டம் ஓட்ட மாக வந்தே
  'உர்உர்' என்றது.

''இன்று நீயும் சிக்கிக் கொண்டாய்
  என்னி டத்திலே!
உன்னை அடித்து, உடலைக் கிழித்தே
  உண்பேன்'' என்றது.

கரடி சொல்லைக் கேட்டு வேலன்
  'கலகல' வென்றே
சிறிதும் அச்சம் இன்றிச் சிரித்துச்
  செப்ப லாயினன்:

''நன்கு குறிகள் பார்க்கும் ஒருவர்
  அன்றே கூறினர்,
இன்று அல்ல; நாளைக் காலை
  இறப்பேன் என்பதாய்.

இறப்பை நினைத்து அஞ்ச வில்லை.
  எலும்பும் தோலுமாய்
இருக்கும் நானும் உனது வயிற்றில்
  எந்த மூலையோ!

எங்கள் மாமி வீடு நோக்கி
  இன்று சென்றுநான்
அங்கு தேனில் செய்த பண்டம்
  அனைத்தும் தின்னுவேன்.

அல்வா, லட்டு, ஜிலேபி யோடு
  அதிர சங்களும்
நல்ல படியாய்த் தின்று கொழுப்பேன்,
  நாலு மடங்குநான்!

தொந்தி யோடு நாளைக் காலை
  உன்றன் எதிரிலே
வந்து நிற்பேன்; என்னைத் தின்று
  வயிற்றை நிரப்புவாய்!''

வேலன் சொல்லைக் கேட்டுக் கரடி
  மிகவும் மகிழ்ந்தது.
''நாலு மடங்கு பருக்கப் போகும்
  நல்ல பையனே,

இன்று நீயும் மாமி வீடு
  சென்றே அவ்விடம்
நன்கு தின்று கொழுத்து வருவாய்
  நாளை'' என்றது.

கெட்டிக் கார வேலன் உடனே
  சிட்டாய்ப் பறந்தனன்.
சுற்றுப் பாதை வழியாய் வீடு
  திரும்பிச் சேர்ந்தனன்.

சொட்டு கின்ற எச்சி லோடு
  முட்டாள் கரடியும்
எட்டு நாளாய் அவனைக் காண
  ஏங்கி நிற்குது!

—குழந்தைக் கவிஞர்



இமாலய சாதனை!



உலக சாதனை கண்ட சுனில் கவாஸ்கர் 1949–ம் வருஷம் ஜூலை 10–ந்தேதி பிறந்தவர். இவரது தந்தையின் பெயர் மனோகர் கவாஸ்கர். பம்பாய் பிரபல கிரிக்கெட்காரரர் விக்கெட்கீப்பர் மாதவ் மந்திரியின் மருமான். இளம் வயதிலிருந்து கவாஸ்கரை உருவாக்கியதில் எம். கே. மந்திரிக்குப் பெரும் பங்குண்டு.

சுனில் கவாஸ்கருக்குப் புகழ் கிடைத்தது 1970–71–ம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவில்தான் – இவரது மூன்று சதங்கள், இரட்டை சதம் ஜகப்பிரசித்தியாயிற்று. இதன் பிறகு இவருக்குப் புகழ் பெருகலாயிற்று. பிறகு கவாஸ்கர் மூன்று தடவை ஒவ்வொரு இன்னிங்சிலும் சதம் எடுத்தது ஒரு ரிகார்டு. ஒரு காலண்டர் வருஷத்தில் ஆயிரம் ரன்களைக் குவித்த தலைசிறந்த பாட்ஸ்மனும்கூட.

இந்தியாவுக்காகச் சுனில் கவாஸ்கர் 40 டெஸ்ட்களுக்குக் காப்டன் பதவி வகித்திருக்கிறார். இவரது ஆட்டத் திறமையைக் கண்டு மோகம் கொண்டார் மார்ஷனீல். அழகுத் தேவதை மார்ஷனீலை மணந்த யோகம் புகழ் மேலும் பெருகிற்று. மார்ஷனீலை 'Pummy' என்று செல்லமாக அழைப்பார் கவாஸ்கர். இவர்களுக்கு அழகிய செல்வன் பிறந்தான். கிரிக்கெட் ஆட்டத்தில் ரோஹன் கன்ஹாய் மேற்கிந்தியத் தீவில் தலைசிறந்த பாட்ஸ்மன். அவரது நினைவாகத் தங்கள் புதல்வனுக்கு கவாஸ்கர் தம்பதியினர் 'ரோஹன்' என்ற பெயரைச் சூட்டினார்கள்.

கவாஸ்கருக்கு இரு சகோதரிகள். கவிதா, நூடன் என்ற இருவரில் கவிதா பெங்களூரைச் சேர்ந்த தலைசிறந்த பாட்ஸ்மன் விசுவநாதனை மணம் புரிந்து கொண்டிருக்கிறார்.

சுனில் கவாஸ்கருக்கு மராத்தி சினிமாவில் நடித்த அனுபவமும் உண்டு. அவரது இரண்டு புத்தகங்கள் 'Sunny Days', 'Idols' ரிகார்டு விற்பனை கண்ட நூல்கள்.

ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த பிராட்மனே இதுவரை 29 சதங்கள் எடுத்து உலக ரிகார்டை வைத்துக் கொண்டிருந்தார். நம் இந்தியக் கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் பல ஆண்டுகளாக முறிக்கப்படாத அந்த உலக சாதனையைச் சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் முறியடித்தது அரிய சாதனை. 30 சதங்கள் எடுத்த இந்த இமாலய சாதனைக்கு இவருக்குக் கிடைத்த வெகுமதிகள் பல.

பிராட்மன் செய்யாத சாதனையொன்றையும் சுனில் கவாஸ்கர் சாதித்திருக்கிறார் என்று சொன்னால் உங்களுக்கு வியப்பாயிருக்கும். சுனில் கவாஸ்கர் வலது கை பாட்ஸ்மன். பெங்களூரில் நடைபெற்ற ஒரு ரஞ்சிப் பந்தயத்தில் கவாஸ்கர் இடது கையினால் 'பாட்டிங்' செய்து அனைவரையும் திகைக்க வைத்திருக்கிறார்.

சென்னை, சிதம்பரம் ஸ்டேடியத்தில் முப்பதாவது சதமெடுத்த மட்டையைக் கவாஸ்கர் மேற்கிந்தியத் தீவுக் குழுவின் விக்கெட்கீப்பர் டூஜோனுக்குப் பரிசளித்து விட்டார்!


சுனில் கவாஸ்கரின் குடும்பமே தெய்வ பக்தி நிரம்பிய குடும்பம். மேற்கிந்தியத் தீவில் கவாஸ்கர் இரு சதங்களைத் தாண்டுவதற்கு அன்னை மீனாள் கவாஸ்கர் தம் வீட்டில் குடும்பத்தினரோடு பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருந்தாள். பிரார்த்தனை வீண் போகவில்லை.

'நீர்லான்ஸ்' ஸ்தாபனத்தின் விளம்பர இலாகாவில் ஓர் அதிகாரியான சுனில் கவாஸ்கருக்குப் பல விநோத சம்பிரதாயங்கள் உண்டு.

பாட்டிங் கலைக்கு ஒரு விற்பன்னராகத் திகழும் கவாஸ்கருக்கு, இமாலய சாதனை அவரது அதிர்ஷ்டச் சக்கரமாகத் திகழ உதவியிருக்கிறது.

–பி. எஸ். மணி

பூங்காவனம்



100 ரூபாய்; 100 காய்கள்:

1 பூசணிக்காய் விலை	ரூ. 5
1 வாழைக்காய் விலை	ரூ. 1
20 கத்தரிக்காய்கள் விலை	ரூ. 1

மேலே உள்ள மூன்றுவகைக் காய்களில் மொத்தம் 100 காய்களை ஒருவர் வாங்கினார். அவர் வாங்கிய காய்களின் மொத்த விலையும் ரூ. 100 தான். அப்படியானால், அவர் எந்த எந்தக் காய்களை எவ்வளவு கொடுத்து வாங்கினார்?

விடை:

மொத்தம்காய்கள்	100	ரூ. 100
வாழைக்காய்	— 1	ரூ. 1
கத்தரிக்காய்	— 80	ரூ. 4
பூசணிக்காய்	— 19	ரூ. 95

—எஸ். செந்தில்குமார் (3275)
அரக்கோணம்.

என்ன தெரிகிறது?

ஆசிரியர்: டேய் கோபு, அந்தக் காலத்தில் தமிழக மக்கள் நெய்த ஒரு மெல்லிய சேலையை ஒரு தீப்பெட்டிக்குள் அடக்கி விடலாம். இதிலிருந்து என்ன தெரிகிறது?

கோபு: அந்தக் காலத்துத் தீப்பெட்டி ரொம்பப் பெரிசுன்னு தெரியுது சார்.

—விஜயராஜன் (430), பண்ருட்டி.



எவ்வளவு தூரம்?

ஒரு குதிரையை 16 அடி நீளமுள்ள கயிற்றில் கட்டினால் அது எவ்வளவு தூரம் செல்லும்?



விடை: எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்லலாம். கயிற்றைக் கட்டியிருப்பது அதன் கழுத்தில் மட்டும்தானே!


—த. செந்தில் குமார் (4370),
சென்னை—83

சம்பளம் வந்தது எப்படி?

பழங்காலத்தில், உழைப்பவர்களுக்குத் தானியமும் உப்புமே ஊதியமாகக் கொடுக்கப்பட்டன. நெல் வகையில் சிறந்தது சம்பா. அளம் என்பது உப்பு. சம்பாவும் அளமும் சேர்ந்து சம்பளம் ஆயிற்று!

ஆதாரம்: ஞா. தேவநேயப்பாவாணரின் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்'
அனுப்பியவர்: ஆர் ஸ்ரீதர் (2663),
ஸ்ரீரங்கம்.





புத்தகப் பொன்மொழிகள்:

❊ படிக்கத் தகுந்த புத்தகங்களைவிட படிக்கத் தகாத புத்தகங்களே உலகில் அதிகம்.

—இரவீந்திரநாத தாகூர்.

❊ எனக்குப் பிடித்த புத்தகங்களோடு என்னை வாழ்நாள் முழுதும் சிறையில் அடைத்தாலும் வருத்தப்படமாட்டேன்.

—மாஜினி.

❊ 30 வயதுக்கு முன்னால் புத்தகங்களைப் படிக்காதவன், பின்னால் படித்துப் புரிந்து கொள்வது கடினம்.

—ஸௌரண்டன்.

❊ புதிய நூல் ஒன்று வெளிவந்தால், பழைய நூல் ஒன்றைப் படிப்பது வழக்கம்.

—ரோஜர்ஸ்.

தொகுப்பு: ஜெ. முத்துக்குமார் (468) இராசபாளையம்.



வெ. சாம்பார்:

இரு நண்பர்கள் ஓட்டலுக்குப் போனார்கள். பலகையில் 'வெ. சாம்பார்' என்று எழுதியிருந்தது. "ஆ! வெங்காய சாம்பார்!" என்றான் ஒருவன்.

"இல்லை. அது வெண்டைக்காய் சாம்பார்" என்றான் மற்றவன்.

ஊற்றிய சாம்பாரில் தேடிப் பார்த்தார்கள். வெங்காயத்தையும் காணோம்! வெண்டைக்காயையும் காணோம்!

பரிமாறுபவரைக் கேட்டார்கள். அவர், "இது வெங்காய சாம்பாரும் இல்லை; வெண்டைக்காய் சாம்பாரும் இல்லை. வெறும் சாம்பார்!" என்றார்.

—வி. ஏ. காயத்ரி (3123) சேலம்—4.



சரிக்குச் சரி!

ஒரு கொள்ளைக்காரன் துப்பாக்கியைக் காட்டி, "ம்... உன் பர்சைக் கொடு" என்று ஒருவரை மிரட்டினான். அவர் உடனே பர்சைக் கொடுத்துவிட்டார்.

பிறகு அக்கொள்ளைக்காரன், 'ஹி. ஹி. ஹி... உன்னை ஏமாற்றிவிட்டேன். என் துப்பாக்கியில் குண்டு எதுவும் இல்லையே!" என்றான்.

உடனே பர்சை இழந்தவர், "ஹி. ஹி. ஹி... நானும் உன்னை ஏமாற்றிவிட்டேன். என் பர்சில் பணம் எதுவும் இல்லையே!" என்று உரக்கச் சிரித்தார்.

-இரா. சீனிவாசன் (4011), கோவை-25

கேட்டுச் சொல்றேன்:

பண்ணையாருக்கு வெளியூரிலிருந்து போன் வந்தது. அப்போது அவர் கோபமாயிருந்ததால், வேலையாள் போனை எடுத்தான்.

"பண்ணையார் இருக்கிறாரா?" என்று கேட்டது மறுமுனையில் ஒரு குரல்.

வேலையாள் பண்ணையாரிடம், "நீங்கள் இருக்கிறீர்களா?" என்று கேட்கிறார்கள்!" என்று சைகை மூலம் காட்டினான்.

"நான் செத்துப்போயிட்டேன்என்று சொல்லுடா" என்று கோபத்திலே



கூறினார் பண்ணையார்.

''முதலாளி செத்துப் போயிட்டா ருங்க'' என்றான் வேலையாள்.

''ஐயையோ! எப்போ செத்தார்?'' என்று பதற்றத்துடன் கேட்டது அக் குரல்.

''இதோ முதலாளியைக் கேட்டுச் சொல்றேன்'' என்றான் வேலையாள்.

—கே. கண்ணன் (4353), இருவேல் பட்டு.

முதல் இந்தியர்:

* இங்கிலாந்துக்கு முதல் முதலாகச் சென்ற இந்தியர் — —இராஜாராம் மோகன்ராய்
* முதல் கவர்னரான இந்தியர் —லார்ட் எஸ்.பி.சின்ஹா
* முதன் முதலில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் —இரவீந்திரநாத தாகூர்.



* முதல் இந்திய கவர்னர் ஜெனரல் —ராஜாஜி.
* முதல் இந்திய ஜனாதிபதி —டாக்டர் ராஜேந்திரபிரசாத்.
* டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் ஆடிய முதல் இந்தியர் —கே. எஸ். ரஞ்சித் சிங்.
* முதல் இந்தியப் பெண் கவர்னர் —சரோஜினி நாயுடு.

விஜி (397), கடலூர்.

அடுக்குத் தொடர்

ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஒரு கல்வி அதிகாரி வந்தார். தமிழ்ப் பாடம் நடந்து கொண்டிருந்த வகுப்புக்குச் சென்றார். திடீரென்று ஒரு மாணவனைப் பார்த்து, ''அடுக்குத் தொடர்—உதாரணம் கூறு'' என்றார்.

''தெரியாது சார், தெரியாது சார்'' என்றான், அப்பள்ளியில் புதிதாகச் சேர்ந்த அந்த மாணவன்.

கல்வி அதிகாரி அவனைப் பாராட்டினார். ஏன் பாராட்டினார்?

''தெரியாது சார், தெரியாது சார்'' என்பதும் ஓர் அடுக்குத் தொடர்தானே?''

—மு. கா. நெடுமாறன் (660), காவேரிப் பட்டணம்



குப்பனின் கடிதம்:

அன்புள்ள ராமசாமிக்கு, குப்பன் எழுதுவது என்னவென்றால், இப்பவும் நான் சௌக்கியம். நீ அனுப்பிய மணி ஆர்டர் கிடைத்தது. நீ ஏன் ஐம்பது ரூபாய்க்கும் பத்து ரூபாய் நோட்டுக்களாக அனுப்பினாய்? இங்கு சில்லறை நோட்டே கிடைக்கவில்லை. ஒத்தை ரூபாய் நோட்டுகளாக அனுப்பியிருக்கப் படாதா? அடுத்த தடவையாவது சில்லறை நோட்டாகவே அனுப்பு.

இப்படிக்கு,
குப்பன்

—வி கோபி (1723), வேலூர்—6.





20 லட்சம் பிரதிகள்!

'ஸ்புட்னிக்' என்ற பத்திரிகையில் சமீபத்தில் படித்தேன். ரஷ்யாவில் 200 பதிப்பாளர்கள் 70 மொழிகளில் குழந்தைப் புத்தகங்களை வெளியிடுகிறார்களாம். 'My first book' என்ற வரிசையில் சில புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்களாம். ஒவ்வொரு புத்தகத்திலும் எத்தனை பிரதிகள் அச்சிடுகிறார்கள் என்பதைப் படித்த போது 'ஆ!' என்று ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தேன்!

ஒவ்வொரு புத்தகத்திலும் 2 மில்லியன் பிரதிகள் வெளியிடுகிறார்கள். 2 மில்லியன் என்றால், 20 லட்சம்! அம்மாடியோவ்!

ஆர். ராஜா (1606), சென்னை—17.



புத்திசாலி!

முதலாளி: நான் கொடுத்த கவர் இரண்டையும் தபாலில் போட்டுவிட்டாயா? இரண்டும் மிகமிக முக்கியமானவை.

வேலைக்காரன்: போட்டுட்டேன். ஆனால், சிங்கப்பூர்க் கடிதத்திலே 50 பைசா ஸ்டாம்பும், பம்பாய்க் கடிதத்திலே 3 ரூபாய் ஸ்டாம்பும் நீங்க ஒட்டியிருந்தீங்க.

முதலாளி: அடடே, அப்படியா! நான் கவனிக்கவில்லை. ஸ்டாம்பை எடுத்து மாற்றி ஒட்டிப் போஸ்ட் பண்ணியிருக்கலாமே!

வேலைக்காரன்: ஸ்டாம்பைப் பிய்க்க முடியல்லே. அதனாலே, அட்ரஸ்களை அடிச்சு மாற்றி எழுதி, போஸ்ட் பண்ணிட்டேன்.

—எல். குருசங்கர் (442), கூறைநாடு.

நல்ல நட்பு:

நந்தன் என்பவன் ஓர் ஊரில்
நல்ல பெயரும் பெற்றவனே.
கந்தன் என்பவன் அவன் தோழன்
கல்வி கற்று வந்தனரே.

உள்ளம் ஒன்றிய இருவருமே
உவகை யுடனே வாழ்ந்தனரே.
வெள்ளம் போல இடர்வரினும்
விலகிட மாட்டார் இருவருமே!

வள்ளுவர் சொன்ன நண்பர்களாய்
வையகம் போற்ற வாழ்ந்தனரே!
உள்ளம் ஒன்றிய நண்பர்களாய்
உலகில் வாழ்வீர், நீங்களுமே!

—சு. சுரேஷ் (629), கும்பகோணம்.

கோகுலம்-வாழ்த்து

அறிவுச் சுடரே, கோகுலமே,
ஆற்றல் வளர்ப்பது கோகுலமே.

இனிய கதைகள் தந்திடுமே,
ஈடு இணையிலாக் கோகுலமே.

உயர்ந்த பண்பினை ஊட்டிடுமே.
ஊக்கம் கொடுத்து உயர்த்திடுமே.

என்றும் இன்பம் அளித்திடுமே.
ஏற்றம் மிகுந்த கோகுலமே.

ஐயம் இல்லை; பொக்கிஷமே.

ஒளிரும் விளக்காய் மின்னிடுமே,
ஓராண் டான கோகுலமே.

ஔடத அமுதே, கோகுலமே,
அஃதினை அனைவரும் வாழ்த்துவமே!

—ஹேமா பாலசுப்பிரமணியன் (1019),
மேட்டூர் அணை—1.





மாமாவின் பரிசு

தணிகை உலகநாதன்

''என்ன மாமா! 'அகராதி' வாங்கித் தருகிறேன்; வாங்கித் தருகிறேன்.' என்று எத்தனை நாளாகக் காலம் கடத்துகிறீர்கள். இன்றாவது வாங்கித் தர மாட்டீர்களா?'' என்றாள் பாவை.

''பாவை, ஒன்று மாற்றி ஒன்று ஓயாத வேலையால் காலம் கடத்திவிட்டேன். இன்று எப்படியாவது புத்தகக் கடைக்குப் போய் வாங்கி வரலாம். பள்ளிப் பிள்ளைகளுக்கு அகராதி பார்க்கும் பழக்கம் மிகவும் நல்லது'', என்றார் மாமா.

''இன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்தாலும் **சுந்திரம்** புத்தக **நிலயம்** திறந்திருக்கும். வாருங்கள், போய் வாங்கி வரலாம்.''

''பாவை, என்ன இது, சுந்திரமும் தந்திரமும்! **சுந்திரம்** என்றால் பொருள் இல்லை. **சுந்தரம்** என்றால் அழகு. சுந்தரம் என்பதைச் சிலர் இப்படிக் கூறுவது தவறு. அது மட்டுமல்லாமல் **நிலயம்** என்று கூறினாயே, அதை **நிலையம்** என்றுதான் சொல்லவேண்டும். நிலைத்திருப்பது நிலையம்.''

''நல்லது மாமா! கடைக்காரர் இப்படித்தான் பெயர்ப் பலகையில் எழுதி வைத்திருக்கிறார். அதனால்தான் அதில் உள்ளபடியே கூறினேன்.''

''அதற்கென்ன; அவர் மிகவும் நல்லவர். சொன்னால் திருத்திக்கொள்வார். இப்படித்தான் சிலர் **திருவேங்கடம்** என்னும் தங்கள் பெயரைத் **திருவேங்கிடம்** என்றும், **வேங்கட சுப்பிரமணியன்** என்பதை **வேங்கிட சுப்பிரமணியன்** என்றும் தெரியாமல் எழுதி வருகிறார்கள்.''

''சரி, மாமா! நேரமாகிறது. வாருங்கள், கடைக்குப் போகலாம்.''

பாவையும் மாமாவும் அகராதி வாங்குவதற்காகப் புத்தகக் கடைக்குப் புறப்பட்டார்கள்.

சுந்தரம் புத்தக நிலையத்தார் இருவரையும் அன்போடு வரவேற்றனர். பெயர்ப் பலகையில் இருந்த தவறுகளைச் சுட்டிக் காட்டியதும் கடைக்காரர் அதைப் பிழையில்லாமல்' திருத்திக் கொள்வதாக ஒப்புக் கொண்டார். அகராதி வாங்கிக்கொண்டு, வரும் வழியில், விளம்பரங்களில் கண்ட மேலும் சில தவறுகளை மாமா பாவைக்குச் சுட்டிக் காட்டினார்.

''பாவை! அதோபார், எதிர்வரிசையில் உள்ள ஒரு கடையில் **'பிரதி ஞாயிறுதோறும் விடுமுறை'** என்று எழுதியிருக்கிறார்கள்'' என்று கூறினார்.

''மாமா! அதில் என்ன தவறு! ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை என்பதுதானே பொருள்?'' என்று வியப்புடன் கேட்டாள் பாவை.

''பாவை! **தோறும்** என்னும் சொல் 'ஒவ்வொரு' என்னும் பொருளைக் குறிப்பது. ஞாயிறு தோறும் என்பதற்கு 'ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்' என்பது பொருள். 'பிரதி' என்பதற்கும் 'ஒவ்வொரு' என்றுதான் பொருள். ஆகையால், பிரதி என்னும் சொல்லை அடுக்கிக் கூற வேண்டியதில்லையே!''

''தவறு நன்றாக விளங்குகிறது மாமா! நானும் இப்படித்தான் எழுதி வந்தேன். இனி திருத்தமாக எழுதுவேன்!''

''பாவை! பாவை! அதோ பார்த்தாயா, ஒரு விளம்பரத்தை! **'சுவற்றில் நோட்டீஸ் ஒட்டாதீர்!'** என்று எழுதி இருக்கிறார்கள்.''

''ஆமாம்! சுவற்றில் அறிக்கை ஒட்டாதீர் என்று எழுதினால், நன்றாக இருக்குமே! 'நோட்டீஸ்' என்பது ஆங்கிலம். 'அறிக்கை' என்பது தமிழ்.

''அதற்காக மட்டும் சொல்லவில்லை. சுவற்றில் என்பதே தவறு. சுவர் என்ற சொல்லுடன் 'இல்' சேர்ந்தால், 'சுவரில்' என்று ஆகும். ஆனால், கிணறு என்பது கிணற்றில் என்று வரும். கிணறில் என்று எழுதக் கூடாது. நாம் சுவறு என்று எழுதுவதில்லையே! சுவர் என்றுதானே எழுதுகிறோம்? அதனால், சுவர்=இல்+சுவரில் என்றே எழுத வேண்டும்.'' என்று மாமா கூறிய விளக்கம் பாவையின் உள்ளத்தில் பசுமரத்தாணி போலப் பதிந்தது.

''சரி, மாமா. இன்று உங்களால் சில தமிழ்ச் சொற்களைத் தவறு இல்லாமல் எழுதத் தெரிந்து கொண்டேன். நானும் இனி, கூடுமானவரை தவறு இல்லாமல் எழுத முயற்சிக்கிறேன்.''

''பாவை! இங்கேயும் நீ ஒரு தவறு செய்கிறாய்!''


''என்ன அது மாமா?''

''முயல் என்பது வினை. அதனால் முயல்கிறேன் என்று சொன்னால் போதும். முயற்சிக்கிறேன் என்று சொல்லக் கூடாது.''

''மாமா! இன்று நீங்கள் தவறுகளை நீக்கி எழுதும் முறைகளைச் சுவைபட விளக்கிக் கூறினீர்கள். மிக்க நன்றி.''

''அப்படியானால், வாய்க்கும் சுவையளிப்பதற்காக நாம் இருவரும் அந்த உணவு விடுதிக்குச் சென்று, சுவையான தின்பண்டங்களைச் சாப்பிட்டு வீடு திரும்புவோம்.''

பாவையும் மாமாவும் உணவு விடுதியில் சுவையான தின்பண்டங்களைச் சாப்பிட்டு, காஃபி அருந்தி, வீடு திரும்பினர்.



இளமையில் கல்(கி)

★ ஒருநாள் அச்சிறுவன் நூலொன்றைக் கவனமாகக் — கருத்தூன்றிப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய அன்னை அவனை அழைத்து ''மணல் மேட்டுக்கு''ப் போய் ஒரு கவுளி வெற்றிலை வாங்கி வரும்படி பணித்தார். அவனும் அன்னையிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு மணல்மேட்டை நோக்கிப் படித்த வண்ணமே நடந்தான். மணல்மேட்டிற்குச் சென்று வெற்றிலைக் கட்டை வாங்கித் தனது குடுமித் தலையில் வைத்துக் கொண்டு மீண்டும் படித்துக்கொண்டே தன் வீட்டை நோக்கி நடந்தான். வீட்டுப்படி ஏறுகையில் தலையில் கையை வைத்துப் பார்த்தான். வெற்றிலைக் கவுளியைக் காணோம்! சிறுவன் துடிதுடித்துப் போனான். குடுகுடுவென்று வந்த வழியே ஓடினான். ஒரு தெருத் திருப்பத்தின் வேலியருகே நாலைந்து ஆடுகள் அந்த வெற்றிலைக் கட்டைப் பகிர்ந்து தின்று கொண்டிருந்தன.

பிறிதொருநாள், அச்சிறுவன் தன் வீட்டுத்திண்ணையில் அமர்ந்தவாறுபடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய அன்னை, புழுங்கிய நெல்லைத் தெருவில் விரித்து உலரப் போட்டார். திண்ணையில் படித்துக் கொண்டிருந்த தன் மகனிடம் கம்பொன்றையும் தந்து, படித்துக்கொண்டே இந்த நெல்லைக் காவல் காக்குமாறு எச்சரித்து விட்டுச் சென்றார். அச்சிறுவனும் மிகப் பொறுப்புடன் புத்தகத்திலும் நெல்லிலும் தனது கவனத்தை மாறி மாறிச் செலுத்திக் கொண்டிருந்தான். பிறகு நெல்லை மறந்து புத்தகம் படிப்பதிலேயே ஒன்றிவிட்டான். சிறிது நேரத்தில் ஏதோ கூக்குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே புழுங்கிய நெல்லில் பாதிக்கு மேல் விழுங்கிவிட்ட மாடொன்று விரைந்து ஓடுவதைக் கண்டு செய்வதொன்றும் அறியாது திகைத்து நின்றான்.

இவ்வாறு தன் இளமைக் காலத்திலேயே கல்வியைக் கற்பதில் மிகவும் முனைப்புடன் முயற்சியை மேற்கொண்ட சிறுவன் யார், தெரியுமோ?

அவர்தாம், 1983 டிசம்பர் மாதக் கோகுலத்தின் மூன்றும் அட்டையில் நாம் கண்டு மகிழ்ந்த பேராசிரியர் கல்கி அவர்கள்.

ஆதாரம் நூல்: பொன்னியின் புதல்வர்.

தகவல்: இ. பொ. நடராசன்

விஞ்ஞான விளையாட்டு • ஆர்.பி.சாரதி •



பல்ப் இல்லாமல் பளிச்! பளிச்!

பருப்பில்லாமல் கல்யாணமா? பழமொழிதான்! ஆனால் நடக்காதா? பல்பில்லாமல் ஒளியா? ஆம்! பல்ப் இல்லாமல் பளிச், பளிச்! பார்ப்போமா?

இதை உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அறிவியல் கண்காட்சிகளிலும் செய்து பார்க்கலாம்.

முதலில் இதைச் செய்து பார்க்கத் தேவையான பொருட்களைச் சேகரிப்போமா?

1. (சிறிது) வாயகன்ற கண்ணாடி ஜாடி — மரமூடியுடன், 2. ஜாடியின் வாயை மூடுமளவுக்கு ரப்பர் ஷீட் துண்டு. 3. ஏழு செ. மீ. நீளமுள்ள இரு ஆணிகள், 4. 1.5 வோல்ட் மின் செல்கள் மூன்று, 5. நிக்ரோம் மின்கம்பி 10 செ. மீ. 6. பாதுகாக்கப்பட்ட மெல்லிய மின் கம்பி 30 செ.மீ. துண்டுகள் இரண்டு, 10 செ. மீ. துண்டுகள் இரண்டு.

பொருட்கள் தயார்! ஆரம்பிக்கலாம் விளையாட்டை!

மூடியிலும், ரப்பர் ஷீட்டிலும் 4 செ. மீ. இடைவெளிவிட்டு ஆணிகள் செருகி ஜாடிக்குள்ளே போகும் அளவுக்கு இரு துளைகளை முன்னதாகவே போட்டுக் கொள்வோம். இரு ஆணிகளையும் மூடி, ரப்பர் ஷீட் துளைகள் வழியே, செருகுவோம். மூடி இப்போது நம் கையிலேயே இருக்கலாம். ஜாடி மீது மூட அவசரமில்லை.!

ஏனென்றால் இந்த இரு ஆணிகளின் ஜாடிக்குள்ளே இருக்கும் பகுதிகள் நிக்ரோம் கம்பியால் இணைக்கப்பட வேண்டுமே!

ஆம், நிக்ரோம் மின் கம்பி, இரு பாதிகளாக, ஒன்றை ஒன்று இணைத்து முதலில் முறுக்கிக் கொண்டு, முறுக்கிய நிக்ரோம் கம்பியில் இரு ஆணிகளையும் இணைக்க வேண்டும். இந்த நிக்ரோம் கம்பி, ஜாடி மூடப்பட்டாலும், ஜாடியின் மீது படக்கூடாது. பக்கவாட்டிலோ, அடியிலோ படாமல் அழுத்தி மூடிவிடலாம். ரப்பர் ஷீட்டை ஜாடியின் கழுத்தைச் சுற்றி இறுகக் கட்டிவிடலாம்.

உண்மையாகச் சொன்னால் நிக்ரோம் கம்பி மின் பல்பில் உள்ள டங்ஸ்டன் கம்பி இழை போலத்தான்! ஜாடிதான் கண்ணாடி மேல் பரப்பு!

பல்ப் எரிய மின்சாரம் வேண்டுமே! அதற்குத்தான் மின் செல்கள்!

மின் செல்களை வரிசையாக வைப்போம். முதலில் சிறிய இரு 10 செ.மீ. மின்கம்பிகளை எடுத்துக் கொள்வோம்! இடப்புறம் உள்ள செல்லின் நெகடிவ்— முனையை நடுவில் உள்ள பாசிடிவ்+ முனையோடு ஒரு கம்பியால் இணைப்போம். இன்னொரு கம்பி, நடுவில் உள்ள நெகடிவ் —முனையையும் வலப்புற செல்லின் பாசிடிவ் — முனையையும் இணைக்கட்டும்.


ஆமாம். நீண்ட அந்த 30 செ. மீ. மின் கம்பி இருதுண்டுகள் இருக்கின்றனவே! அவைதாம் ஜாடி மூடி ஆணிகளுக்கு செல்லின் மின்சாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். இரு கம்பிகளுடைய ஒவ்வொரு முனையும் ஜாடி மூடி மீதுள்ள ஆணிகளின் ஒவ்வொரு முனையையும் இணைக்கட்டும். இடப்புற ஆணியிலிருந்து வரும் மின்கம்பியின் மற்றொரு முனை இடப்புற செல்லின் கோடி + பாசிடிவ் முனையை இணைக்கிறதா? வலப்புற ஆணியிலிருந்து வரும் மின்கம்பி வலப்புற செல்லின் கோடி நெகடிவ் — முனையை இணைக்கட்டும்!

இணைப்புக்கள் எல்லாம் சரியானபடி அமைந்து விட்டால் உள்ளே நிக்ரோம் கம்பி பளிச்! பளிச்தான்!

இணைப்புக்கள் விளக்கமாகப் படத்தில் காட்டப்பட்டுள்ளன. உண்மையில், மூடிய ஜாடியும், செல்களும் மேஜையிலோ, தரையிலோ பக்கத்துப் பக்கத்தில் வைக்கப்பட்டாலும் கண்காட்சிகளின் படத்தில் அழகாகக் கோபுரம் போலக் காட்டப்பட்டிருக்கலாம். நம் படம் தரையில் வைப்பது போலத்தான் வரையப்பட்டுள்ளது.

பல்ப் இல்லாமல் பளிச் பளிச்சுக்கு இன்னொரு முறையும் உண்டு! ஆனால், அதெல்லாம் மிகமிகப் பழைய முறை. என் நண்பர்கூடக் கேட்

டார்! ''இப்போதெல்லாம் இப்படியாசெய்கிருர்கள்? ரொம்பப் பழைய முறை!'' என்ருர். ஆனல் விவரம் தெரிந்து விளையாடிப் பார்க்கலாம் அல்லவா?



ஒரு சிகரெட் மூடியின் மையத்தில் ஓட்டையிட்டு, ஒரு மரக்குச்சியை அடிப்புறத்தில் வைத்து மேலே ஆணி ஒன்றை இறுகத்துளை மூலம் குச்சியில் செருகி விளையாட்டுக் குடை போல் செய்து கொள்வோம். உயர்ந்த ரகக் கம்பளியால் கிராமபோன் இசைத் தட்டில் ஒரு பகுதியை நன்ருகத் தேய்க்க வேண்டும். பிறகு ஒரு கையால் நாம் செய்துள்ள தகரமூடிக் குடையை மரப் பிடியில் பிடித்தபடி கம்பளியால் தேய்க்கப்பட்ட இசைத் தட்டுப் பகுதியில் மூடிமட்டும் படும் படி சிறிது நேரம் வைப்போம். இன்னெரு கையால் ஒரே சமயத்தில் மாறி மாறி இசைத் தட்டையும் மூடியையும் தொடுவோம். மூடியை... ஆம், மூடிக்குடையைத்தான்.. மேலே தூக்கியவாறு இன்னெரு கையை அதனருகே கொண்டு போனல் பளிச்! பளிச்தான்! பல்ப் இல்லாமல் பளிச்தான்!

இவ்வளவு எதற்கு? ஓர் இருட்டறையில் ட்யூப் விளக்கைத் தரமான கம்பளியில் தேய்த்துப் பார்த்தாலும் ''பளிச்! பளிச்!'' ஒளி தோன்றி மறையும். ஆனல், அங்கு பல்ப் உண்டு! இவையெல்லாம் காலத்தால் பழமையானவை மட்டுமல்ல; கஷ்டமானதுங் கூட!

பொன்னியும் பொன்னனும்

'குப்புசாமி, அப்புசாமி,' 'அய்யாசாமி, அழகுசாமி,' 'பாமாக்கண்ணு கோமாக் கண்ணு' இவர்களைப் போல ''பொன்னியும், பொன்னனும்'' உங்களிடத்தில் புன்னகையைக் காண்கின்றனர்.

இவர்களை உங்களிடத்தில் அனுப்புகிருன் 'பொன்னிதாசன்' என்ற புனைபெயரைக் கொண்ட சிறுவன் க. துரைக் கண்ணன்.

பொன்னி:

பொன்னு, பொன்னு, இன்னு மாநீ
உறங்கிடு கின்ருய்?—பொழுது
புலர்ந்த பின்னும் எழுந்தி டாமல்
உறங்கிட லாமா?

பொன்னன்:

பொன்னி, என்றன் இனிய தூக்கம்
கெடுத்து விட்டாயே—எனது
புதுமை யான கனவை யும்நீ
கலைத்து விட்டாயே?

பொன்னி:

என்ன கனவு கண்டி ருந்தாய்
காலைப் பொழுதிலே?—அதை
எனக்கு நீயும் சொல்ல வேண்டும்
இந்த நேரமே!

பொன்னன்:


அப்ப ளமும் அதிர சமும்
அம்மா கையாலே—என்
சொப்ப னத்தில் ஊட்டி விட்டாள்
சுவைத்திருந் தேனே!

பொன்னி:

சோம்பே றியின் தூக்கத் திலே
தீனிதான் வரும்—இன்னும்
தூங்கிக் கொண்டே இருந்தா யானல்
என்னதான் வரும்?
அதி ரசமும் அப்ப ளமும்
அம்மா தருவாளா?—உன்
முதுகி னிலே அப்ப ளம்தான்
பொரித்தெடுப் பாளே!

'பொன்னிதாசன்'





எங்கள் நாடு, எங்கள் தேசம்
என்னும் எண்ணம் கொண்டிடு!
எங்கும் மக்கள் நன்கு வாழ
இனிய தொண்டு ஆற்றிடு!

நாட்டின் நலம், நாட்டு வளம்
நமக்கு என்று போற்றிடு!
வீட்டை மட்டும் எண்ணி டாமல்
விரும்பிப் பணி யாற்றிடு!

வறுமை ஓட்டிப் பெருமை நாட்டும்
வண்ணம் நித்தம் உழைத்திடு!
கருணை அன்பு கொண்டு வாழ்வில்
கால மெல்லாம் தழைத்திடு!

புத்தம் புதிய நூல்கள் வாங்கிப்
புரட்டிப் புரட்டிப் படித்திடு!
நித்தம் நித்தம் நன்கு கற்று
நல்ல பெயர் எடுத்திடு!

— தஞ்சை மணவழகன்

பள்ளி செல்லும் பிள்ளை நான்..!

பூவை அமுதன்

பள்ளி செல்லும் பிள்ளை நான்!
படிப்பே என்றும் எனக்குத் தேன்!

சீருடை அணிந்தே சென்றிடுவேன்;
சிப்பாயைப் போல் நின்றிடுவேன்;
பாரதக் கொடியினைப் போற்றிடுவேன்;
பண்புடன் உறுதியை ஏற்றிடுவேன்!
(பள்ளி)

பள்ளிக் கோயில் மதித்திடுவேன்;
படிப்புத் தெய்வம் துதித்திடுவேன்;
உள்ளம் அறிவால் நிரப்பிடுவேன்;
உடலில் உறுதி பெருக்கிடுவேன்!
(பள்ளி)

பாடம் சொல்லும் ஆசிரியர்
பலரும் தெய்வம்; பூசிப்பேன்.
ஏடுகள் சொல்லும் கருத்துக்கள்
என்நன் மைக்கே; யோசிப்பேன்.
(பள்ளி)

அன்பாய்க் கூடிப் பழகிடுவேன்;
அனைவரும் சமமென ஒழுகிடுவேன்;
என்போல் பிள்ளை யாரென்றே
எவரும் வாழ்த்தும் பேரெடுப்பேன்!
(பள்ளி)





கருணை விழிகள்

ஆர். பொன்னம்மாள்

''ஐயோ, சார், சார், திருடன்.! உங்க பர்ஸை எடுக்கிறான்!''

கத்தியதோடு திருடிய சிறுவனின் கையையும் பிடித்து விட்டான் மோகன்!

ஒரு விநாடி பஸ் மௌனமாகியது. மறுவிநாடி,

''போடுங்க ரெண்டு.''

''களவாணிப் பயலுக... இதுக்குன்னே வாரானுக...''

''எவ்வளவு சார் இருந்தது?''

''பின்புறப் பையிலே பர்ஸ் வைக்கிறதே முட்டாள்தனம்...''

''சின்ன வயசிலேயே உழைக்காமல் உடம்பை வளர்க்கிற திமிரு.''

''பார்த்தியா அநியாயத்தை!''

இப்படி ஆளுக்கு ஆள் தோன்றியபடியெல்லாம் விமர்சித்தார்கள்.

பணத்தைப் பறி கொடுத்தவர் மோகனின் கைகளை நன்றியுடன் பிடித்துக் கொண்டார்.

''தம்பி, என் பெண் கலியாணத்துக்காக பண்டாபீஸிலே, வீட்டுப் பத்திரத்தை வைச்சுக் கடன் வாங்கின பணம்பா... நீ பார்க்கலேன்னா 7500 ரூபாயும் ஸ்வாஹாயிருக்கும்...''

''கண்டக்டர்... நேரா போலீஸ் ஸ்டேஷன்லே போய் நிறுத்துங்க.''

''ஐயோ, எனக்குச் சீக்கிரம் வீட்டுக்குப் போகணுமே!''

ஆதரவு கொஞ்சம்; எதிர்ப்புகளும், முணுமுணுப்புகளும்தான் அதிகம்.

கடைசியில் வழியில் ஏதாவது போலீஸ்காரரிடம் ஒப்படைப்பதென்று முடிவெடுக்கும் சமயம்......

''ஐயையோ! ஜேப்படிப் பையன் இறங்கி ஓடறான், பாருங்க!''

''நம்ம விவகாரத்திலே அவனைக் கோட்டை விட்டுட்டமே!''

''என்னிக்குத்தான் நம்ம ஜனங்களுக்கு ஒத்துமை இருந்தது!''

பஸ் எதிரே வரும் லாரிக்காகச் சற்றே மெதுவாகப் போன போது, திருட்டுப் பையன் தப்பி விட்டான்! வண்டிக்குள் விமரிசனம் செய்வது தான் பெரும்பாலோருக்குச் சுலபமாக இருந்தது. இறங்கி ஓடச் சிலருக்குச் சோம்பல்; சிலருக்கு, 'பிடித்து ஒருத்தனாக என்ன செய்து விட முடியும்?' என்ற தயக்கம்; சாட்சி, சம்மன் என்று வருமே என்று ஒரு சிலருக்கு அச்சம். ஓட முடியாத தள்ளாமை சிலருக்கு. அப்படியும் ஒன்றிரண்டு பேர் ஓடினார்கள்.

டிரைவர் அவர்கள் திரும்பிவரும் வரை பொறுப்போடு காத்திருந்தார். அவர்கள் வெறுங் கையோடுதான் வந்தனர். சந்து பொந்துகளில் நுழைந்து எங்கோ மறைந்துவிட்டான் அந்தத் திருட்டுப் பையன்!

* * *

ஒரு கிண்ணம் நிறையச் சுண்டலையும், ஒரு கிண்ணம் நிறைய மோர்ச் சாதத்தையும் வைத்துக்கொண்டு உட்கார்ந்தான் மோகன்.

''அப்புறம்?'' என்றாள் பாட்டி.

''அப்புறம் என்ன? அவன் தப்பிச்சுட்டான்.''

''போறான் போ... எப்படியோ, பணத்தை நீ காப்பாத்திட்டே!'' பாட்டி பெருமூச்சு விட்டாள்.

''அவர் உனக்கு ஏதாவது கஷ்டமென்றால் வா. முடிந்த வரை உதவி பண்றேன். படிக்கிறியா..? நாலு பெரிய மனுஷங்ககிட்டே உதவிவாங்கித் தரேன்'னார். 'ரொம்ப நன்றி' என்று சொல்லிட்டேன். அப்போது பாட்டியின் கண்களில் நீர் வழிந்தது.

''ஏன் பாட்டி அழறே?'' — மோகன் சாப்பிடுவதை நிறுத்திவிட்டுக் கேட்டான்.

''ஒண்ணுமில்லேடா மோகன்....! படிக்க வேண்டிய வயசிலே வெயில்லேயும், மழையிலேயும் உன்னைப் போட்டு வருத்த வேண்டி இருக்குதே! இவ்வளவு பொறுப்போடே, சுய கௌர

வத்தோடே இருக்கிற பிள்ளையைப் பார்க்க உன் அப்பா அம்மாவுக்குக் கொடுத்து வைக்கலியேன்னு நினைச்சேன். துக்கம் நெஞ்சை அடைச்சுது''. பாட்டி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''போ பாட்டி, எனக்குஎல்லாமே நீதான்! ஆறுங் கிளாஸ் வரை படிக்க வைச்சது யாராம்? உனக்கு வந்ததே டைபாயிடு காய்ச்சல், அதிலே நீ போயிருந்தால் எனக்கு யார் கதி? படிப்பெங்கே போறது! உனக்கு நல்லா தெம்பு வரட்டும். அடுத்த வருஷம் படிச்சுக்கலாம். நீ அழுதா எனக்கும் அழுகை வரும். நான்தான் உன்னை அழக் கூடாதுன்னு சொல்லி இருக்கேனில்லே! அவர் அட்ரஸ் தந்திருக்கார். படிக்கறப்போ போய்ப் பார்க்கலாம். அதனாலே தான் அவர் இனமாத் தந்த இருபத்தைஞ்சு ரூபாயையும் வேண்டாம்னு மறுத்திட்டேன். யார்கிட்டேயும் கைநீட்டி சும்மா காசு வாங்கக் கூடாதுன்னு நீதான் சொல்லி இருக்கியே!''

''ஆ ம ா ண் ட ா கண்ணு....மணியாச்சு... போய்க் கைகழுவிட்டுப் படுத்துக்க... காலையிலே அஞ்சு மணிக்குப் பேப்பர் போட எழுந்திருக்கணுமே!'' பாட்டி கிண்ணத்தை எடுக்கக் கைநீட்டினாள். அதைத் தடுத்த மோகன்,

''நீ சும்மா இரு பாட்டி... அதிகமாகத் தண்ணியிலே நனைஞ்சா, மறுபடியும் படுத்துக்குவே. நாம என்ன பணக்காரங்களா, உடனே டாக்டர் கிட்டே போக! தர்ம ஆஸ்பத்திரி வராண்டாவையும், நாத்தத்தையும் நினைச்சாக் குடலைப் புரட்டுது. நானே இந்தக் கிண்ணத்தைக் கழுவி வைச்சிட்டுத் துடைச்சிடறேன். நீயும் படுத்துக்க'' என்று சொல்லிக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு போனான்.

கொஞ்ச நேரத்தில் மோகன் தூங்கிப் போய்விட்டான்.

பாட்டிக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணப் பின்னல்கள். சாயங்காலம் நன்றாகத் தூங்கியது வேறு. எழுந்து முற்றத்தில் உட்கார்ந்தபடி ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்றொருநாள் மோகன், துருவன் கதையைக் கேட்டுவிட்டு, ''துருவ நட்சத்திரம் எது பாட்டி?'' என்று கேட்டது நினைவுக்கு வந்தது. ஏதோ ஒன்றைக் காட்டி,'அதுதான்' என்றாள்.

அன்று அவன் மனத்தை அறிவதற்காக, ''சரி, மோகன்... உன் முனாலே பெருமாள் வந்து என்ன வரம் வேணுமின்னு கேட்டா நீ என்ன வேணும்பே?'' என, மோகன் சற்று யோசித்து, ''பெரிய வீடு, அதிலே பாட்டிக்குத் தனியா ஒரு பூஜை அறை, ஒரு மண்டபம், அது நடுவிலே சந்தனப் பலகை வைச்சு அதிலே பெருமாள், அம்பாள், அப்புறம் பாட்டியை காசி, ராமேசுவரம், மகாமகம் எல்லாம் அழைச்சிட்டுப் போகப் பெரிய கார், ஒரு பெரிய பெட்டி நிறைய செலவழிக்கப் பணம்...'' அவன் அடுக்கிக்கொண்டே போனதைப் பார்த்துப் பாட்டி சிரித்தாள்.

அந்தப் பிஞ்சு மனத்தில்தான் எத்தனை ஆசைகள்! தன் மீது இப்படிக் கொள்ளைப் பிரியத்தை வைத்திருக்கும் அந்தக் குழந்தைக்கு, தான் ஒன்றும் செய்ய இயலாததை எண்ணி நொந்தாள். உடம்பாவது திடமாயிருக்கக் கூடாதா! ஐம்பத்தெட்டு வயதில் ஒவ்வொருத்தர் எவ்வளவு திடமாக இருக்கிறார்கள்!

பாட்டியும், பேரனும் பிழைப்பதற்கு, மோகன் சுண்டல், முறுக்கு டின்களைத் தூக்கிக் கொ ண் டா ன். பேப்பர் போட்டான். பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் கொண்டு விட்டான். பாட்டிக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொடுத்தான். யாருக்கு என்ன உதவி வேண்டியிருந்தாலும் சரி, முகம் சுளிக்காமல் செய்வான். வரும்படிக்கு வரும்படி, நல்ல பெயருக்கு நல்ல பெயர். இரட்டைலாபம்!

* * *

''சார், சுண்டல், நெய் முறுக்கு, பட்டாணி சுண்டல் சார், நிறைய மாங்காய் போட்டிருக்கு சார்!'' மோகன் கூவினான்.

''அட, வேண்டாம், போப்பா... சும்மா தொணதொணன்னு... நிம்மதியா கொஞ்ச நேரம் இருக்கலாம்னு இவங்க தொல்லை தாங்க முடியலை.''

''இன்னைக்கு ஒரு ரூபாய்க்குத்தான் வித்திருக்கு சார். அ ச ல் கூட த் தேறலை... ரெண்டு பொட்டலம் வாங்கிக்குங்க சார்'' மறுபடியும் கேட்டான்.

''அதுக்கு நான்தான் மாட்டினேனா... பேசாம அதையே தின்னு.''

''அப்படித்தான் செய்வேன் சார்... ஆனா, என் ஒருத்தனாலே இவ்வளவையும் சாப்பிட முடியாதுங்க.''

''நான் வயித்து வலிக்காரனப்பா, சே'' அவர் எழுந்து போய் விட்டார்.

அப்படியே உட்கார்ந்து விட்டான் மோகன். மணி ஒன்பதரை இருக்கும். கடற்கரையில் இரண்டொருவரைத் தவிர வேறு நடமாட்டமில்லை. கரைக்குப் போனால் நாலு பொட்டலம் விற்கும். ஆனால், கால் கெஞ்சியது.

''இவன்தாண்டா.''

''பொடிப்பயல்..! இவனா?''

மோகன் திடுக்கிட்டான். அவன் சமாளிப்பதற்கு முன்பே, பொத்து பொத்தென்று அவன் மேல் அடிகள் விழுந்தன. காலால் ஒருவன் எத்தினான்.

''ஏண்டா? ஏன் என்னை அடிக்கிறீங்க?'' உதட்டில் பல் குத்தி ரத்தம் உப்புக் கரித்தது.

''டேய், துரைக்குக் காரணத்தைச் சொல்லுங்கடா.'' மறுபடி ஒரு குத்து!

''ஏனா... பெரிய பிஸ்தா மாதிரி அன்னிக்குக் காட்டிக் கொடுத்தியே...! நெனைப்பு வருதா?''

''ஓ, இவன்தான் அது!'' மோகனுக்கு ஜேப்படிப் பையனின் முகம் ஞாபகம் வந்தது. தலைமுடியை அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளும் முயற்சியில் தலை வலித்தது.

''யாராவது வர மாட்டார்களா?'' சுற்றிலும் பார்வை அலைமோதியது.

''ஏதோ பசங்க சண்டை. ரௌடிக் கும்பல். நீ வா'' தூரத்தில் கேட்ட குரல் நம்பிக்கையைச் சிதறடித்தது.

''எவனும் வர மாட்டான்...டேய், இன்னைக்கி நீ கத்துக்கிற பாடம்.... இனிமேல் நம்மகிட்டே மறந்துகூட வாலாட்ட மாட்டாய்'' என்று ஒருவன் உறுமினான்.


சுண்டல் டின் கவிழ்க்கப்பட்டுக்



காலால் மிதிக்கப்பட்டது. ''சமுத்திர ராஜாவுக்குக் காணிக்கைடா'' முறுக்கு டின் அங்கே சமர்ப்பணம். மிதமிஞ்சிய துக்கத்தால் மோகன் வாய் அடைத்து உட்கார்ந்திருந்தான்.

உடம்பில் ஊமைக் காயங்கள் ஏற்படுத்திய வலிகள். சட்டை கிழிந்து தொங்கியது. உடம்பெல்லாம் மணல்!

''பண்டாபீஸிலிருந்தே பின் தொடர்ந்துக்கிட்டிருந்தேன். கைக் கெட்டினது வாய்க்கெட்டாமல் பண்ணிட்டானே! சினிமா, ஹோட்டல்னு என்ன ஜாலியா இருந்திருக்கலாம்! எல்லாம் போச்சே!'' என்னவோ கைப் பணம் போனாற்போல் பொருமினான் ஜேப்படி.



''அப்ப தண்டனை போதாதுங் கறே... தூக்குங் கடா...''

மோகன் திமிறத் திமிறக் குண்டுக் கட்டாய்த் தூக்கிக் கடலில் மூக்கினர். மூச்சுத்திணறி, மூக்கில் ஜலம் ஏறி, கண்கரித்து, வாயெல்லாம் உப்பு...''

''அன்னைக்கிப் போலீசு கையிலே நான் சிக்கியிருந்தால் என்னைக் கிழி, கிழின்னு கிழிச்சிருப்பாங்களே! இப்ப கல் உடைச்சுக்கிட்டிருக்கணும்.''

''டேய்... கபாலிக்கு இன்னும் திருப்தி இல்லேடா... குமுறுகிறான்... தூக்கி அவனை மணலிலே போட்டு மிதிங்கடா...''

''டேய், என்னடா ரகளை?'' எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது. அவ்வளவுதான்; ஓடிவிட்டனர். நல்ல வேளையாக மோகனின் நரக வேதனைகளுக்கு முடிவு ஏற்பட்டது.

* * *

சிராய்த்த இடங்களைத் துடைத்துத் தேங்காய் எண்ணெய் தடவிக் கொண்டிருந்தாள் பாட்டி. ''ஆ. அம்மா, எரியுதே!'' நெளிந்தான் மோகன்.

''அதான் பாட்டி யாருமே யாருக்கும் உதவி பண்ணப் பயப்படறாங்க... இப்படி உதை வாங்கத் தெம்பு வேணுமா?'' மோகன் கூறியதைக் கேட்டு,

பாட்டி சிரித்துக் கொண்டே, ''உங்க தாத்தா சுதந்திரப் போராட்டத்திலே எவ்வளவு தடியடி வாங்கி இருக்காங்க தெரியுமா? ஒரு தடவை



உதடு கிழிஞ்சு, முன் பல் இரண்டும் விழுந்துட்டது. அது அன்னியன் பிடியிலேயிருந்து விடுதலை கிடைக்க! நீ செய்ததுகூட அந்தப் பணம் அன்னியன் கைக்குப்போகாமல் தடுக்கத்தானே! நல்லவங்களுக்குத்தானே சோதனை வரும்..? தங்கத்தைத்தான் நெருப்பிலே போடறோம். தகரத்தைப் போடுறோமோ?

''என்ன சிக்கல் வந்தாலும் சரி, லட்சியத்தை மட்டும் கைவிடக் கூடாது. மோகன்...... அந்த காந்தி பேரை நான் உனக்கு வைச்சிருக்கேன். ஏன் தெரியுமா? உங்க தாத்தா சுதந்திரப் போராட்டத்திலே தடியடி பட்டுச் செத்தப்போ, உங்கப்பா மூணு மாசக் குழந்தை! குழந்தையை என்கிட்டே அண்ட விடாமல் தாத்தாவோட அப்பா அம்மா வளர்த்தாங்க. புருஷனைப் பறிகொடுத்த நான் துரதிருஷ்டக்காரியாம்! கரிக்காலாம்! பிள்ளையை இழந்ததுபோலப் பேரனையும் இழந்துடுவேனும். மூட நம்பிக்கை...! பலன்...? அவங்களாலே உன் அப்பாவைக் கண்டிச்சுத் திருத்த முடியலே... அதிகச் செல்லத்தாலே சரியாப் படிக்காம கெட்ட சகவாசம்.. என்னமோ போ, கையிலிருந்த சொத்தெல்லாம் கரைஞ்சுது... பெரியவங்களும் மண்டையைப் போட்டாங்க. தொழிற்சாலையிலேபோராட்டம்னு உன் அப்பாவும் அவன் அப்பா மாதிரி அடிபட்டுச் செத்தான். உன் அம்மாவும் துக்கம் தாங்காமே பாரத்தை என் தலையிலே சுமத்திட்டுப் போயிட்டா.

''நீ நல்லவனா வளர்ந்து, உங்கப்பா தாத்தாவோட ஆயுசெல்லாம் சேர்த்து வாழணும். அதுதான் என் பிரார்த்தனை. இந்தக் கிழவிக்கு வேறே என்ன வேணும்? துரியோதனனும், சிசுபாலனும், கம்சனும், இராவணனும், இரணியனும் சத்தியத்தின் முன்னாலே, நியாயத்தின் முன்னாலே தோத்துப் போனவங்க. முதலிலே அட்டகாசம் பண்ணினவங்களெல்லாம் அட்ரஸ் தெரியாமே போயிருக்காங்க... நடு சமுத்திரத்தைப் பாரு. சத்தமோ, ஆர்ப்பாட்டமோ இருக்காது. புராணமோ, சரித்திரமோ எதைப் படிச்சாலும் அக்கிரமத்துக்கு அற்பாயுசுதான்! நீ பொறுமையாயிருக்கணும்'' இந்த மாதிரி உபதேசங்களாலேயே உருவாக்கப்பட்டவன் மோகன். அவனுக்கு இது தாலாட்டு. உடல் வேதனையில் தூங்கிப் போனான்.

* * *

அது மார்க்கெட்டிலிருந்து வீட்டிற்கு வர மோகன் தேர்ந்தெடுத்த குறுக்குப் பாதை. ஒரே நாற்றம். சின்னச் சந்து. சில வீடுகளின் பின் பகுதி. குப்பைத் தொட்டி; கழிவுகள், அசிங்கங்கள். பொதுவாக அந்தப் பக்கம் நடமாட்டம் அதிகமிராது.

''ஆ, ஐயோ! அம்மா! காப்பாத்துங்களேன்'' என்ற சப்தம் திடீரென்று கேட்டது. ஆ! இது என்ன கூக்குரல்!

ஒரு சிறுவனை ஒரு நாய் புரட்டி எடுத்தது. கடித்துக் குதறியது. கால் ஆடு சதையில் ரத்தம்! முழங்கையில் ரத்தம்..! கன்றுவி.

எவனோ ஒருவன் விட்ட கல் எக்குத் தப்பாய்ப் பட்டு விட, மேலும் ஆக்ரோஷமாய் எகிறியது நாய்.

''பையன் என்ன 'பண்ணினான் சார்?''

''தெருநாய் மாதிரி தெரியலையே!''

''வெறி பிடிச்சிருக்குமோ!''

''உனக்கென்டா வம்பு... அவனை விட்டுட்டு உன் மேலே திருப்பிக்கப் போறது பாரு''

''இதொரு வேடிக்கையா...? சுத்த ரௌடி மாதிரி இருக்கான்... அவன் அதைச் சீண்டியிருப்பான். இல்லேன்னு அது வம்புக்கு வராது... வாங்க, திரும்பி, அப்படிப் போகலாம்'' ஆளுக்கொரு விமரிசனம் செய்தார்களே தவிர, யாருக்கும் துணிச்சலில்லை. பரிதாபப்பட்டவர்களுக்கும் வழி தெரியவில்லை!

கத்திக் கத்திப் பையன் தொண்டை அடைத்தது.

அப்போது, தன் கையிலிருந்த பொட்டலத்தைப் பிரித்து வீசி எறிந்தான் மோகன். நாய் கோபத்துடன் எறியப்பட்ட பொருளையும், எறிந்தவனையும் முறைத்தது. மறுநிமிடம் ஆவலோடு எறியப்பட்ட பொருளை ருசி பார்த்தது.

அதற்குள் ஒரு ரிக்ஷாக்காரன், நாய் கடித்தவனைப் பிடித்து ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு, மோகனைப் பார்த்து, ''தம்பி, நீயும் ஏறு'' என்றான். உடனே மோகனும் ஏறிக் கொண்டான். அந்தப் பையன் களைப்பிலும், இரத்த சேதத்திலும் மயங்கி மோகன் மேல் சாய்ந்தான்.

''பத்திரம்பா... ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் போய் ஊசி போடணும்.''

''இஷ்டப்படி நாயை அவுத்து விட்டுடறாங்க... நாய் வண்டி வந்து பிடிச்சாத்தான் புத்தி வரும்.''

''ஏழைக்கு ஏழைதான் இரக்கம் காட்டுவான், பார்த்தியா?''

''சின்னப் பையனாயிருந்தாலும் சமயோஜிதமா கையிலேயிருந்த மாமிசப் பொட்டலத்தை எறிஞ்சானே! நமக்குத் தோணுச்சா?''

விமரிசனங்கள் கேட்காத தூரத்துக்கு ரிக்ஷா போய்க் கொண்டிருந்தது.

* * *

''நான்தான் உன்னை அன்னிக்கு மணலிலே போட்டுப் புரட்டிப் புரட்டி அடிச்சேனே! உனக்கு நோவல்லே? 'இவனுக்கு நல்லா வேணும்'னு நினைக்காமே என்னைக் காப்பாத்தினியே! அதிலும் யாருக்கோ நீ வாங்கிட்டுப் போன ஆட்டுக் கறியை அந்த நாய்க்கிட்டே போட்டுக் காப்பாத்தினியே! எப்படி மனசு வந்துச்சு?''

மருத்துவ மனையில் படுக்கையிலிருந்த கபாலியின் பேச்சைக் கேட்டு, அருகில் சாத்துக்குடியை உரித்துக் கொண்டிருந்த மோகன் சிரித்தான். அடுத்தபடுக்கையிலிருப்பவர் காய்ந்து போகிற தென்று கொடுத்த சாத்துக்குடி அது..!

''நீ யாருக்காக ஆட்டு மாமிசம் வாங்கிப் போனாய்? அவங்க உன்னைக் கோவிச்சிருப்பாங்களே!''

''கோபிக்காமே இருப்பாங்களா?''

''எப்படிச் சமாளிச்சே?''

''பாட்டியே காசு கொடுத்திட்டாங்க......''

''மோகன்... எனக்கு, கூடப் பிறந்த தம்பிங்க இருக்காங்க.... அம்மா, அப்பா, உறவுக்காரங்க இருக்காங்க... எவனாவது எங்களிலே ஒருத்தருக்கு லேசாக் கெடுதல் செஞ்சுட்டா—ஏன் செஞ்சுட்டதா நினைச்சாப் போதும்; கும்பலாப் போய் அவனை உண்டு, இல்லேன்னு ஆக்கிடுவோம். இது எனக்குப் புதுப் பாடம்...... நெனைச்சு நெனைச்சுப் பார்க்கறேன்...



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

1155. ஜெ. பிரபாகர், வள்ளுவர் இல்லம், சைனிக் பள்ளி, அமராவதி நகர், கோவை–642 102.
1156. அண. அழகப்பன், 231, ராஜா தெரு, கோயம்புத்தூர்–1.
1157. இரா. வெங்கடேஷ், 6, சக்கரபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சை மாவட்டம்.
1158. பி. எஸ். ஸ்ரீலெட்சுமி, 12–ஏ, மூன்றும் வீதி, சுப்பிரமணியபுரம், காரைக் குடி–623 002.
1159. எஸ். பரணீதரன், 1, கிட்டாசாமி வீதி, கோபிசெட்டிப் பாளையம்–638 452.
1160. ஆர். கார்த்திக், 3, 49–வது தெரு, 7–வது அவின்யூ, அசோக்நகர், சென்னை–83.
1161. என். ரவிச்சந்திரன், 27, பாஷ்யம் நகர், குரோம்பேட்டை, சென்னை–44.
1162. ச. பானுரேகா, 9,செய்யூர் பார்த்தசாரதி நாயுடு தெரு, பெரம்பூர், சென்னை–11.
1163. கே. ஸ்ரீனிவாசராகவன், 16–பி, வ. உ. சி. தெரு, கோவை–641 002.
1164. கே. சீதாலெட்சுமி, 16–பி, வ. உ. சி. தெரு, கோவை–641 002.
1165. து. இராஜக்குமார், சி. எஸ். ஐ. மாணவர்விடுதி,மெல்ரோசாபுரம்,சிங்கப்பெருமாள் கோயில் (வழி) செங்கல்பட்டு மாவட்டம் –603 204.
1166. இ. சுந்தரபாரதி, 10–ஏ, இ. மு. தெரு, மம்சாபுரம், – 626 110.
1167. கு. ரங்கநாயகி, 21–பி, எம். ஜி. புதூர், 2–வது வீதி, திருப்பூர்–638 604.
1168. கோ. சுபாஷ் சந்திர போஸ், 132, ஹவுசிங் யூனிட், அனுப்பபாளையம், திருப்பூர் –638 652.
1169. ஜெ. பி. ஸ்ரீநரசிம்மன், 10–ஏ, ராஜாஜி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை–45.
1170. ச. மீனாட்சி திலகவதி, 14–ஏ, 4–வது தெரு, கற்பகம் அவின்யூ, சென்னை–28.
1171. ச. அம்பலவாணன், 16, வீரக்குடி வேளாளத் தெரு, செங்கல்பட்டு–613 001.
1172. எஸ். லெக்ஷ்மணன், 33, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம் சென்னை–10.
1173. ஜெ. அருள்செல்வன், 27–1பி, அழகனூர் கோட்டைவிளை, குளச்சல், குமரி மாவட்டம்,
1174. எஸ். கனகராஜ், மே/பா. சி. எஸ். எஸ். சுப்பிரமணியன், கவற்குளம் தேரிவிளை, பொற்றையடி அஞ்சல், குமரி மாவட்டம்.
1175. கு. ஸ்ரீவித்யா, 26, முதல் தெரு, அபிராமபுரம், ஆள்வார்ப்பேட்டை, சென்னை–18.
1176. எச். முஹம்மத் அன்சாரி, 6/24, பால்சாமி நாயுடு வீதி, ஆத்துப்பாலம், கோவை–641 023.
1177. க. சாருலதா, 56, பாலாஜிநகர், அனகாபுத்தூர், சென்னை–70.
1178. க. வை. நாதன், டி–82 டி/9, சங்கர் நகர் அஞ்சல், தாழையூத்து, திருநெல் வேலி–627 357.
1179. எம். ஏ. ஞானசம்பந்தம், 77, புதுத்தெரு, மயிலாப்பூர், சென்னை–4.
1180. எம். பி. கிருபாகர், 77, புதுத்தெரு, மயிலாப்பூர், சென்னை–4.
1181. ஜி. முத்துக்குமார் 4–சி, துர்க்கை அம்மன் கோயில் வீதி, செங்கம்–606701.
1182. எஸ். சண்முகராஜன், 4, வெங்கடாசல நாயுடு சந்து, கீழச்சந்தைப் பேட்டை, மதுரை–9.
1183. அ. இராமசாமி, 111–டி, அண்ணாசாலை, பாண்டிச்சேரி–605 001.
1184. கே. பிரியா, டி–4/ஏ, பெருமாள் கோயில் தெரு, வட்டம்–27, நெய்வேலி–3.
1185. பி. கோபாலகிருஷ்ணன், 24, தெற்குக் கோட்டை வீதி, விருத்தாசலம்–606 001.
1186. க. சீனிவாசன்ராம், 31–ஏ, பங்கஜம் காலனி, மதுரை–9.
1187. என். இராமநாதன், 58, உசிலை ரோடு, திருமங்கலம், மதுரை மாவட்டம்
1188. எஸ். கே. ஹேமச்சித்ரா, 57, உசிலை ரோடு, திருமங்கலம், மதுரை மாவட்டம்.
1189. எஸ். சிவஞானம், 32, மேலத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி–1.
1190. கே. சீனிவாசன், 86, சின்னு கவுண்டர் தெரு, பரமனூர், சேலம்–7
1191. டி. சங்கர்ராஜ், 6/37, கீழரதவீதி, கடையம், அம்பை வட்டம் திருநெல்வேலி மாவட்டம்,
1192. எஸ். ஆனந்தன், 40, சட்டையப்பர் தெரு, திருவண்ணாமலை–606 601.
1193. ஆர். கண்ணன், டி–74, பழைய காலனி, சங்கர் நகர்–627 357.
1194. இ. சுந்தரராசன், 32, மு. பூ. ச. அக்ரகாரம், குளித்தலை, திருச்சி மாவட்டம்.
1195. ஆர். கே. அனந்தநாராயணன், 1/72, கிழக்குத் தெரு, நல்லாத்தூர்–605 121.
1196. வி. செல்வம், 16/69, தியாகராஜ புதுவீதி, மரக்கடை, கோவை–2.
1197. பி. தமிழரசி, 69, 3–வது தெரு, கம்பன் நகர், ரெட்டியார் பாளையம், பாண்டி–10.
1198. ம. த. சிதம்பரம், 94, பெரியார் தெரு, கோவில்பட்டி–627 701.
1199. இரா. கார்த்திக் எப்/14, எம். ஐ. ஜி. பிளாட், பெரியார் நகர், ஈரோடு–1.
1200. எஸ். சுமித்ரா, 84, பெரியார் தெரு, செங்கல்பட்டு–1.
1201. எஸ். சந்திரசேகர், 84, பெரியார் தெரு, செங்கல்பட்டு–1.
1202. கே. எஸ். வைத்தீஸ்வரன், 47, ஆடம் தெரு, மைலாப்பூர், சென்னை–4.



கேள்வி நேரம்

கேள்வி கேட்பவர்:

அலமேலு அழகப்பன்.

பங்கு பெறுவோர்:

எஸ். ஜெயா, பி. கிரிசங்கர்
பி. கே. சரவணன்.

அலமேலு: 'கோனார் உரை நூல்' என்றால் உங்களுக்கு நன்றாகத் தெரியும். கோனார் என்கிறார்களே, அவருடைய முழுப் பெயர் தெரியுமா?

சரவணன்: தெரியும் அக்கா. ஐயன் பெருமாள் கோனார்.

அலமேலு: சரியான விடை. அவர் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இப்போது இங்கிலீஷிற்குக் கூட, 'கோனார் நோட்ஸ்' இருக்கிறதா என்று சில மாணவர்கள் கேட்கிறார்கள். அந்த அளவுக்கு அவர் பெயர் பிரபலமாகியிருக்கிறது!... மகாத்மா காந்தி நடத்திய பத்திரிகைகளின் பெயர்களைக் கூற முடியுமா?

கிரிசங்கர்: ஹரிஜன் பத்திரிகை.

அலமேலு: உம்... இன்னும் சில பத்திரிகைகளையும் அவர் ஆசிரியராயிருந்து நடத்தியிருக்கிறாரே!

சரவணன்: 'யங் இந்தியா'... 'நவ ஜீவன்'

அலமேலு: சரி... இந்தியாவில் அவர் நடத்திய மூன்று பத்திரிகைப் பெயர்களையும் கிரியும் சரவணனும் சேர்ந்து கூறி விட்டீர்கள். ஆனால், தென் ஆப்பிரிக்காவில் அவர் இருந்த போது, 'இந்தியன் ஒப்பீனியன்' என்று ஒரு பத்திரிகையை நடத்தினார். அதுதான் அவருடைய முதல் பத்திரிகை. 'சர் ஐசக்' என்று தொடங்கும் பெயர்களில் இரண்டு பேர் உலகப் புகழ் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் பெயர்கள் தெரியுமா?

ஜெயா: சர் ஐசக் நியூட்டன். புவி ஈர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்தவர். இன்னொருவர்... இன்னொருவர்...

அலமேலு: தலையைச் சொறிகிறாயே. சரி, வேறு யாருக்காவது தெரியுமா?

எல்லோரும்: (மௌனம்).

அலமேலு: இன்னொருவர் சர் ஐசக் பிட்மென். சுருக்கெழுத்துக் கண்டுபிடித்தவர். பிட்மென் ஷார்ட் ஹாண்ட் (Pitman's Shorthand) என்று கேள்விப்பட்டிருப்பீர்களே!. சரி, யூக்கலிப்டஸ் அதாவது நீலகிரித் தைலம் என்கிறோமே, அந்தத் தைலத்தை எதிலிருந்து எடுக்கிறார்கள்?

ஜெயா: யூக்கலிப்டஸ் மரப் பட்டையிலிருந்து.

அலமேலு: இல்லை, ஜெயா விடை தவறு.

கிரி: யூக்கலிப்டஸ் இலையிலிருந்துதான் தைலம் எடுக்கிறார்கள்.

அலமேலு: ஆம், கிரி சொன்னது சரியான விடை. யூக்கலிப்டஸ் மரத்திலிருந்து இலைகளைப் பறித்து ஒரு பெரிய பாத்திரத்திலே போட்டு, அதிலே நீர் விட்டுக் காய்ச்சுவார்கள். அப்போது பாத்திரத்திலிருந்து குபுகுபுவென்று ஆவிவரும். அந்த ஆவியைச் சேகரித்துக் குளிர வைப்பார்கள். அதுதான் நீலகிரித் தைலம்... இதோ இங்கு நான்கு பிராணிகள் இருக்கின்றன. நத்தை, தவளை, கரப்பான்பூச்சி, பாம்பு இந்த நான்கிலே இரண்டு ஒரு வகையைச் சேர்ந்தவை. மற்ற இரண்டும் வேறொரு வகையைச் சேர்ந்தவை. கண்டுபிடிக்க முடிகிறதா?



சரவணன்: நத்தையும், தவளையும் நீரில் வசிப்பவை; கரப்பான் பூச்சியும் பாம்பும் நிலத்தில் வசிப்பவை.

அலமேலு: சரவணா, நீ சொன்னது சரியான விடையில்லை. பாம்பில் கூடத்தான் தண்ணீர்ப் பாம்பு இருக்கிறது. வேறு யாருக்குத் தெரியும்?

ஜெயா: எனக்குத் தெரியும். பாம்புக்கும் தவளைக்கும் முதுகு எலும்பு உண்டு; நத்தைக்கும் கரப்பானுக்கும் முதுகு எலும்பு இல்லை.

அலமேலு: ஆஹா! ஜெயா எவ்வளவு சரியாய்ச் சொல்லி விட்டாள்! சரி; Unicef என்றால் என்ன?

கிரி: அடிக்கடி டீ. வி. யில் காட்டுகிறார்கள். United Nations Inter-National Children's Fundஎன்பதைத் தான் அப்படிச் சுருக்கிச் சொல்கிறார்கள்.

அலமேலு: கிட்டத்தட்டச் சரியாகச் சொல்லிவிட்டாய். 'கிட்டத்தட்ட' என்று ஏன் சொல்கிறேன் தெரியுமா? நீ சொன்ன ஒவ்வொரு சொல்லிலும் முதல் எழுத்தை எடுத்துக் கொண்டால் Unicf என்றுதானே வரும்? 'E' என்ற எழுத்து விடுபட்டுப் போகிறதே!

கிரி: ஆமாம் அக்கா. இதோ நான் சரியாய்ச் சொல்கிறேன். United Nations International Children's Emergency Fund.

அலமேலு: கரெக்ட். ஆனாலும் Emergency என்பதை மட்டும் பிராக்கெட்டுக்குள் அதாவது அடைப்புக் குறிக்குள் போடுகிறார்கள். ஐக்கிய நாடுகளின் சர்வதேசக் குழந்தைகளின் அவசரத் தேவைக்கான நிதி என்று அர்த்தம். யுத்தத்தால் அவதிப்படும் நாட்டுக் குழந்தைகளுக்கு இது மிகவும் உதவி வருகிறது... முதல் முதலில் இந்தியாவில் மின்சார ரயில் எங்கு விடப்பட்டது?

ஜெயா: பம்பாயில்.

அலமேலு: ஆம். பம்பாயிலிருந்து குர்லா என்ற இடத்துக்கு முதல் முதலாக 1925–ஆம் ஆண்டு மின்சார வண்டி விடப்பட்டது... மெட்ரிக் முறையைத்தான் இப்போது நாம் எல்லோரும் கையாண்டு வருகிறோம். இந்த முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

கிரி: ஒரு பிரெஞ்சுக்காரர்... பெயர்... தெரியவில்லை.

அலமேலு: வேறு யாரேனும் சொல்வீர்களா?

எல்லாரும்: (மௌனம்).

அலமேலு: நானே சொல்கிறேன். அதைக் கண்டுபிடித்தவர் ஒருவரல்லர்; ஏழு பிரெஞ்சுக்காரர்கள் அடங்கிய ஒரு குழுதான் கண்டுபிடித்தது. அந்த ஏழு பேரும் சேர்ந்து ஒன்பது ஆண்டுகளில் கண்டுபிடித்தார்கள். 1790 முதல் 1799 வரை. ...'சுவரை வைத்துத் தான் சித்திரம் எழுத வேண்டும்' என்று ஒரு பழமொழி இருக்கிறதே, அது எப்படி வந்தது?

சரவணன்: முன் காலத்தில் அநேகமாக ஓவியங்களை யெல்லாம் சுவர்களிலே எழுதினார்கள். அதனால்தான் அந்தப் பழமொழி.

அலமேலு: உண்மைதான். முன்காலத்தில் பெரும்பாலும் சுவர்களில்தான்

சித்திரங்கள் எழுதப்பட்டன. கோயில்கள், அரண்மனைகள், சித்திர மாடங்கள் இப்படி எல்லாவற்றிலும் சுவர் ஓவியங்கள் எழுதப்பட்டன. ஆனால் இப்போதுதான் துணிகளிலும் தாள்களிலும் பலகைகளிலும் சித்திரங்களை வரைகிறார்களே!... நேரு மாமாவின் கூடப் பிறந்த இரண்டு சகோதரிகளின் பெயர்கள் தெரியுமா?

ஜெயா: ஒருவர் பெயர் விஜயலட்சுமி பண்டிட்... இன்னொருவர் பெயர்... சுசேதா கிருபலானி...

அலமேலு: ஜெயா, முதலில் சொன்ன பெயர் சரிதான்... ஆனால், இரண்டாவது பெயர் தவறு.

கிரி: நான் சொல்கிறேன். கிருஷ்ணா.

அலமேலு: கிருஷ்ணா என்பது சரிதான். ஆனால், அவரது முழுப் பெயர் கிருஷ்ணா ஹத்திசிங். மக்காவிற்குப் புனித யாத்திரை சென்று வந்தவர்களுக்கு ஒரு பட்டம் வழங்கப்படுகிறது. அது என்ன பட்டம்?

சரவணன்: 'ஹாஜி' என்ற பட்டம் தானே?

அலமேலு: ஆம், சரியான விடை. சுத்தத் தங்கம் எத்தனை காரட் எடையுள்ளது?

ஜெயா: 24 காரட்.

அலமேலு: கரெக்ட். எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்து வெற்றிக் கொடி நாட்டியவர்கள் டென்சிங்கும், ஹில்லரியும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், அதற்குப் பிறகு, இருமுறை எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் யார் என்று தெரியுமா?

எல்லோரும் (மௌனம்).

அலமேலு: ஒருவருக்கும் தெரியாதா? நவாங் கொம்பா என்பவர் 1963, 1965 ஆகிய இரு ஆண்டுகளில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்திருக்கிறார். அவரும் டென்சிங் இனத்தைச் சேர்ந்தவர்தான்.....



இதோ இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் இருப்பது என்ன என்று தெரிகிறதா?

சரவணன்: ஓ, நன்றாகத் தெரிகிறதே, இதுதான் விசைக் காற்றாடி.

ஜெயா: ஐயையோ! விசைக் காற்றாடி இப்படியா இருக்கும்? காற்றாடியிலே நீளநீளத் தகடு இருக்குமே!

கிரி: இது... ராடார் கருவி.

அலமேலு: கரெக்ட். ஒரு பொருளின் இருப்பிடத்தையும் தூரத்தையும், ரேடியோ அலைகளைக் கொண்டு அறிவதற்குப் பயன்படும் ராடார் கருவிதான் இது. முன்பெல்லாம் கோயில் கட்டடங்கள் செங்கற்களாலே கட்டப்பட்டிருக்கும். பிறகுதான் கருங்கற்களைக் கொண்டு கட்டினார்கள். முதல் முதலாகக் கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில் எது, தெரியுமா?

சரவணன்: அந்தக் கோயில் காஞ்சிபுரத்தில் இருக்கிறது. ஏகாம்பரநாதர் கோயில் என்று நினைக்கிறேன்.

அலமேலு: காஞ்சிபுரம் என்பது சரியே. ஆனால், ஏகாம்பரநாதர் கோயில் என்பது தவறு.

ஜெயா: கைலாசநாதர் கோயில்.

அலமேலு: ஆம், கைலாசநாதர் கோயில்தான் முதன் முதலாக அமைக்கப்பட்ட கற்றளிக் கோயில். இந்திய அரசு அளிக்கின்ற விருதுகளில் மிகவும் உயர்ந்தது. 'பாரத ரத்னா.' அடுத்த மூன்றைக் கூறுங்கள் பார்க்கலாம்.

கிரி: பத்மவிபூஷண், பத்மஸ்ரீ, பத்மபூஷண்.

அலமேலு: சரிதான். ஆனாலும் இடம் மாறியிருக்கின்றன. பத்மவிபூஷண். அதற்கு அடுத்தது பத்மபூஷண். அதற்கும் அடுத்தது பத்மஸ்ரீ... அந்தமான், நிகோபார் தீவுகள் என்கிறார்களே, அவற்றில் மொத்தம் எத்தனை தீவுகள் இருக்கின்றன?

ஜெயா: இரண்டு தீவுகள். ஒன்று அந்தமான்; இன்னொன்று நிகோபார்.

அலமேலு: தவறு, தவறு.


சரவணன்: ஒவ்வொன்றிலும் பல தீவுகள் இருக்கின்றன. எத்தனை எத்தனை என்று சரியாகத் தெரியாது.

அலமேலு: சரி, நானே சொல்லிவிடுகிறேன். அந்தமானில் 205 தீவுகள், நிகோபாரில் 19 தீவுகள். மொத்தம்...

பள்ளியில் நடந்தது!

உங்கள் பள்ளியில் நடந்த சுவையான நிகழ்ச்சி அல்லது உங்கள் பள்ளி மாணவன் செய்த சாதனை, பள்ளியைப் பற்றிய புதுமையான, வியப்பான செய்தி—இப்படி நீங்கள் பயிலுகின்ற கல்விக் கூட சம்பந்தமானவை—அதேசமயம், மற்ற மாணவர்களும் அறிந்து கொள்ளவேண்டியவை பல இருக்கும். அவற்றைச் சுருக்கமாக எழுதி, உங்கள் தலைமை ஆசிரியரின் கையெழுத்துடனும், பள்ளி முத்திரையுடனும், 'ஆசிரியர், 'கோகுலம்' சென்னை—32' என்ற முகவரிக்கு அனுப்புங்கள். வெளியிடப்படும் ஒவ்வொன்றுக்கும் பரிசு உண்டு.

—ஆசிரியர்.



ஜெயா: 224 தீவுகள்.

அலமேலு: ஆம். இந்த 224 தீவுகளும் சேர்ந்ததுதான் அந்தமான், நிகோபார் தீவுகள். பெருநகரம் — அதாவது மெட்ரோபாலிடன் சிட்டி என்கிறார்களே, எந்த மாதிரி நகரத்தை அப்படிச் சொல்லுகிறார்கள்?

சரவணன்: 10 லட்சம் மக்களுக்கு மேல் இருந்தால் அந்த நகரத்தை மெட்ரோபாலிடன் சிட்டி என்கிறார்கள்.

அலமேலு: வெரிகுட். மிகவும் சரியாகச் சொன்னாய்... நம் தேசத்தில் ஐந்தாண்டுத் திட்டம் என்று ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கிறார்களே, இதை முதலில் துவக்கியது எந்த நாடு?

கிரி: அமெரிக்கா.

அலமேலு: இல்லை.

சரவணன்: ரஷ்யா.

அலமேலு: ஓஹோ! அமெரிக்கா இல்லை என்றால் ரஷ்யாவா? எப்படியோ சரியான விடையைச் சொல்லிவிட்டாய். ரஷ்யாவில்தான் 1928—ல் ஐந்தாண்டுத் திட்டம் துவங்கப் பெற்றது.... சென்னை நகருக்கு வீராணம் என்ற ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வர ஒரு திட்டம் இருந்தது. அந்த ஏரி எங்கே இருக்கிறது?

ஜெயா: சிதம்பரத்துக்குப் பக்கத்திலே.

அலமேலு: ஆம், தென் ஆர்க்காட்டில் சிதம்பரம் வட்டத்திலே இருக்கிறது. இந்த ஏரி கடலைப் போல நீளமாகவும், விரிவாகவும் இருக்கும். தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய ஏரி இதுதான்... மறைமலை அடிகள் மிகப் பெரிய தமிழறிஞர் என்பது உங்களுக்குத் தெரியும். அவருடைய இயற்பெயர் என்ன?

சரவணன்: வேதாசலம்.

அலமேலு: சரியான விடை. வேதம் = மறை; சலம் = மலை. இரண்டையும் சேர்த்தால் மறைமலை. அவரை சுவாமி வேதாசலம் என்று பலரும் மரியாதையோடு அழைத்து வந்ததால், மறைமலை அடிகள் என்று பின்னர் அழைத்தார்கள்... ஐதராபாத் எங்கே உள்ளது என்று கேட்டால், 'ஆந்திர மாநிலத்தில்' என்று உடனே கூறி விடுவீர்கள். இன்னொரிடத்திலும் ஐதராபாத் என்ற பெயரில் ஒரு நகரம் இருக்கிறது. எங்கே என்று தெரியுமா?

எல்லாரும்: (மௌனம்).

அலமேலு: ஒருவருக்கும் தெரியவில்லையே! பாகிஸ்தானில் சிந்து நதியின் மேற்குக் கரைக்கு அருகிலே ஒரு குன்று இருக்கிறது. அதன் மேல்தான் இருக்கிறது. இன்னொரு ஐதராபாத் நகரம்... 'காந்தி புராணம்' என்ற கவிதை நூலை ஓர் அம்மையார் பாடியிருக்கிறார். அவர் பெயர் தெரியுமா?

ஜெயா: சௌந்தரா கைலாசம்.

அலமேலு: இல்லை. ஒரு குறிப்புத் தருகிறேன். அந்த அம்மையாரின் முன்னால் 'பண்டிதை' என்ற பட்டம் இருக்கும்.

சரவணன்: உம்... கேள்விப்பட்டிருக்கிறேன். பண்டிதை அசலாம்பிகை அம்மையார்.

அலமேலு: சரியாகச் சொன்னாய். 'காந்தி புராணம்' மட்டுமல்ல; 'திலகர் புராணம்', என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இன்னும் பல தல புராணங்களும் எழுதியிருக்கிறார்...

ரொம்ப ஆச்சரியமா இருக்கப்பா... நம்பவே முடியலே...!''

''கபாலி... ஏசுநாதர் ஒரு கன்னத்திலே அடிச்சவங்களுக்கு மறு கன்னத்தைக் காட்டுன்னு சொல்லியிருக்கார். ஒருவன் நம்மை அடிக்கிறதாலே சந்தோஷப்படறான்னு, அந்த சந்தோஷத்தைக் கொடுப்போமே!''

''நாம ஏமாளின்னு ஆகாதா?''

''அது அவங்கவங்க மனசைப் பொறுத்தது....''

''மோகன்... அன்னிக்கி இப்படித்தான்... மகாத்மா காந்தி செம்மையா அடி வாங்கியும் பேசாமல் இருந்த கதையைச் சொன்னே... இந்தப் பன்றிக்கு அந்தக் கன்றுக்குட்டியோடே சேர்ந்ததுலேயிருந்து நல்ல புத்திவரப் பார்க்குது...'' கபாலிக்கு உணர்ச்சியால் தொண்டை அடைத்தது.

''ஏன் உன்னைத் தாழ்த்திக்கறே? பிறக்கும்போது யாரும் கெட்டவங்க இல்லே... எந்த வயசிலேயும் திருந்திக்கலாம்''பாடுபட்டுப்பிழைக்கணும்...

கபாலி சலிப்புடன், ''நீ சொல்றப்போ கேக்க நல்லாத்தான் இருக்கு. நடைமுறைக்கு ஒத்து வராதே... என்னை யாரு வேலைக்குச் சேர்த்துக்குவாங்க?'' என்று கேட்டான்.

''நான் சேர்த்து விடறேன்... அதான் டாக்டர் சொல்லிட்டாரே, 'இனிமேல் வந்து வந்து கட்டுக் கட்டிக்கிட்டாப் போதும். ஊசியும் நாளையோட போதும். போகலா'மின்னுட்டாரே! நல்லா குணமானதும் எனக்கு ஒரு மெக்கடை தெரியும்: அங்கே சேர்த்து விடறேன்''

''உனக்கு நான் ஏதாவது செய்யணுமின்னு ஆசையா இருக்கு மோகன்!'' மோகனின் கைகளைப் பிடித்துக்கொண்டு உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான் கபாலி.

''நீ நல்லவனாகி எப்பவும் நாம சிநேகிதங்களா இருப்போம். அது போதும். நான் வரேன். வியாபாரத்துக்கு நேரமாச்சு'' மோகன் விடை பெற்றுக் கொண்டான்.

* * *

''உங்களுக்கு யார் மேலேம்மா சந்தேகம்?'' அழுது கொண்டிருந்த செங்கமலத்தாச்சி,மூக்கைஉறிஞ்சியபடி,

''யாரையின்னு சொல்றது....! ஆக பொருள் போயாச்சு... ஒண்ணு, ரெண்டா? முப்பதாயிரமாச்சே.......! காலைவேளை...கைவேலையா யிருந்தேன்.. பார்த்துட்டுப் பீரோவிலே வைக்கப் பூட்டாமே மேஜை மேலே போட்டது தப்பாயிடுச்சு... சமயபுரத்தம்மா..., பொருள் கிடைக்கட்டும்...... ஒரு நடை குடும்பத்தோட வந்து கை நிறைய உண்டியல்லே போடறேன்'' என்று தன்பாட்டில் புலம்பிக்கொண்டிருந்தாள்.

இன்ஸ்பெக்டர் ஒவ்வொருவராக விசாரித்துக் கொண்டிருந்தார்.

தோட்டக்காரன், டிரைவர்,மோகன் இவர்களை ஏற்கெனவே விசாரித்தாயிற்று.

மோகன் எண்சாணும் ஒரு சாணாகக் கூனிக் குறுகி நின்றிருந்தான்.

செட்டியார் கோபாவேசத்துடன் முன் ஹாலில் உலவிக் கொண்டிருந்தார்.

குட்டிக்குதிரைஅளவு நாயைச் சங்கிலியால் பிணைத்துப் பிடித்திருந்தார் ஒரு கான்ஸ்டபிள்.

அங்குமிங்கும் சுற்றியதே தவிர, அது குறிப்பாக எதையும் கண்டு பிடிக்க வில்லை. வாசலில் ஆங்காங்கே மனிதத் தலைகள்.

ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக நின்றிருந்ததில் கால் உளைச்சல் ஒரு பக்கம். தலைவலி ஒரு பக்கம். பசியோ வேறெதுவோ வயிற்றைப் புரட்டியது மோகனுக்கு.

''டேய், உன்னைத்தான்! மறுபடி காலையிலே நடந்ததை ஒரு தடவை சொல்லு'' இன்ஸ்பெக்டர் குரலைக் கேட்டு மோகன் உசுப்பிக் கொண்டான்.

''மகேஷை ஸ்கூலுக்கு அழைச்சிட்டுப் போக வந்தேனு...! ஆச்சி, 'அப்படி உட்காருடா... இன்னிக்கி மகேஷ் எழுந்திருக்கவே நேரமாயிடுச்சு... அதோட குளிக்க மாட்டேன்னு அடம்... இதோ, ஒரு நிமிஷத்துலே ரெடி பண்ணிடறேன்' னுங்க. அப்ப ஒரு ஆள் செட்டியார் கொடுக்கச் சொன்னதா ஒரு நீலப் பெட்டியைக் கொடுத்தான். ஆச்சி திறந்து பார்த்துட்டு அப்படியே மேஜை மேலே வைச்சாங்க... அந்த ஆளை 'நீ போ'ன்னுட்டாங்க... அவன் போயிட்டான். ஆச்சி உள்ளே போனுங்க... பதினைஞ்சு நிமிஷத்துலே மகேஷை அழைச்சிட்டு வந்தாங்க...'' தட்டுத் தடங்கலின்றி மோகன் சொன்னான்.

''உடனே நீ பையனை அழைச்சிட்டுப் போயிட்டியாக்கும்!'' இன்ஸ்பெக்டர் மோகனை, சந்தேகக் கண்களுடன் பார்த்தார்.

''ஆமாங்க.''

மோகனுக்கு விழிகளில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. (தொடரும்)

1203. என். ரமேஷ், 98, கிழக்குத் தெரு, தருமபுரி–636 702.
1204. கே. எஸ். மீனாகுமாரி, 6 தர்மா நகர் 5–வது தெரு, சேலம்–6.
1205. எஸ். பி. பாலசரவணன், 35 ஆர். எம். எஸ். காலனி திருச்சி–1.
1206. ந. தாமோதரன் 8, 2–வது தெரு, பாரதி நகர், சென்னை–17.
1207. த. பாபு, 25, செனியர் தெரு, செஞ்சை, காரைக்குடி.
1208. பி. ஆர். பாலாஜி, 1, கருப்ப கவுண்டர் வீதி, கோயமுத்தூர்–1.
1209. டி. எஸ். சிவசங்கர், 158, தர்மாபுரம் நடுத்தெரு, ராஜபாளையம்–626 117
1210. ந. சோமசுந்தரி, 2/1 சேர்மன் அமிர்தராஜ் தெரு, விழுப்புரம்
1211. ந. பொ. சங்கர் 2/1, சேர்மன் அமிர்தராஜ் தெரு, விழுப்புரம்.
1212. ஜி. ரத்தின மணி எப்ஸிபாய், 9.10.1–ஏ அய்யாசாமி நாடார் தெரு, அருப்புக் கோட்டை.
1213. வி. பத்மப்ரியா, பிளாட் எல்–2657, ஒய்–9, அண்ணாநகர், சென்னை–40.
1214. எஸ். சுமதி, 97–பி, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–40.
1215. ஆர். சியாமளா, 34, முருகப்பா லேஅவுட், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி–2.
1216. என். ஸ்ரீகாந்த், 11, பத்மநாப அய்யர் தெரு, வில்லிவாக்கம், சென்னை–49.
1217. நா. ஸ்ரீவித்யப்பிரியா, 11, பத்மநாப அய்யர் தெரு, வில்லிவாக்கம், சென்னை–49.
1218. ஆர். கோமதி, 18, மேல மாட தெரு, கல்லிடைக்குறிச்சி–627 416.
1219. எஸ். புஷ்கலா, 5–ஏ, 16–வது தெரு, இல்லை கங்கா நகர், சென்னை–61.
1220. வி. மஞ்சுளா, 270, ரெங்கே கவுண்டர் தெரு, கோவை–1.
1221. R. Srividya D/o. P.R. Ramanathan, 98/3, Western Railway Quarters, Matunga Bombay-400 019.
1222. எஸ். விஜயராகவன், 153/ஏ, சீதாராமன் தெரு, ஆம்பூர்பேட்டை, வாணியம்பாடி, வ. ஆ. மாவட்டம்.
1223. என். மஞ்சுளா, த/பெ. சி. எஸ். நடராஜன், டி. என். ஈ. பி., மேற்கு அக்ரஹாரம், கொமரலிங்கம் போஸ்ட், உடுமலைப் பேட்டை.
1224. ர. பாலாஜி, 2, ஜெயநிவாஸ், அம்பிகாபுரம், குரோம்பேட்டை, சென்னை–44.
1225. ஏ. நாசர் முகமது, சிட்டி ஹார்டுவேர், பெங்களூர் மெயின்ரோடு, சுங்குவார் சத்திரம்.
1226. கே. கஸ்தூரி ரங்கன், 167/25, 4–வது அவின்யூ, அண்ணா நகர், சென்னை–40.
1227. S. Rajesh, 3/413, Gandhi Road, Proddutur, Cuddapah Dist. A.P.
1228. தி. சி. நடராஜன், எச்/20–பி, தெற்கு அவின்யூ, சென்னை–41.
1229. எஸ். சி. ரம்யா ரங்கநாதன், 147, ஏரிக்கரை தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33
1230. இரா. கவிதா, 58, முத்தையா முதலி தெரு, தேனாம்பேட்டை, சென்னை–86.
1231. கே. ஜனக நந்தினி, ஏ. பி. 381, 27–வது தெரு, 6–வது செக்டர், கே. கே. நகர், சென்னை–78.
1232. சி. ஸ்ரீதரன், 24, தெற்கு வாணியர் தெரு, புதுப்பாளையம்–606 705.
1233. மீ. பிரகாஷ், த/பெ. சு. மீனாட்சி சுந்தரம், 5, தெற்கு வெளி வீதி மதுரை–1.
1234. எஸ். ஜெயராமன், "வைஷ்ணவி", 14, சிவசுந்தர் அவின்யூ, திருவான்மியூர், சென்னை–41.
1235. எஸ். அரவிந்தன், "வைஷ்ணவி", 14, சிவசுந்தர் அவின்யூ, திருவான்மியூர், சென்னை–41.
1236. என். வைத்தீஸ்வரன், 11, பி. டி. ஓ. குவார்டர்ஸ், மேற்கு இணைப்பு சாலை, திருட்டிணகிரி.
1237. சீ. சுரேஷ், 15/1, கோமுட்டித் தெரு, வாலாசாபேட்டை, வ. ஆ. மாவட்டம்.
1238. கே. கதிர்வேல், 2/75, சுப்பிரமணிய சுவாமி கோவில் தெரு, காங்கேயநல்லூர், வேலூர்–623 006.
1239. ஆர். மகேஷ்குமார், த/பெ. வி. ராமய்யா, போலீஸ் இன்ஸ்பெக்டர், சன்னதித் தெரு, திருவாடானை
1240. பி. ஜூலியா, 4.55, நடுத்தெரு, கீழக்கரை.
1241. கே. ஜகன்மோகன், 192–ஏ, செந்தில் குமரன் தெரு, விஸ்வநாத நகர் கே. புதூர், மதுரை–7.
1242. க. முத்துசாமி, 7 ராஜ அக்ரஹாரம், ராஜகோபாலபுரம், குத்தாலம்–6098 01.
1243. பி. சுபாஸ்ரீ, 34, பிடாரி கோயில் தெரு, திருவாரூர்–2.
1244. பி. ராம்குமார், 34, பிடாரி கோயில் தெரு, திருவாரூர்–2.
1245. எல். ஜெய்சங்கர், 8, பாணாதுறை கீழவீதி, கும்பகோணம்–612 001.
1246. எம். வளர்மதி, மெயின் ரோடு, மறவமங்களம், காளையார்கோவில் (வழி).
1247. ஸ்ரீராம் பிரகாஷ், த/பெ. அ. கனகராஜ், பஞ்சாயத்து அலுவலகத் தெரு, காளையார் கோயில்–623 551.
1248. கோ.வி.கணேஷ், சி.என்.ஐ.ஏ. நியூ ரயில்வே குவார்ட்டர்ஸ், பாளையங்கோட்டை–2
1249. செ. கணேஷ், 35, அம்பேத்கார் தெரு, வட்டம்–26, நெய்வேலி–3.
1250. அ. டெனிசன், 32, ஈ.டி.பி. ரோடு, வள்ளியூர்–627 117.
1251. ஆ. சுப்பிரமணியன், பி. 191, என். ஜி. ஓ. 'பி' காலனி, திருநெல்வேலி–7.
1252. ஈ. கிருஷ்ணகுமார், 21–பி, எம். ஜி. புதூர், இரண்டாவது வீதி, திருப்பூர்–638 604

(இன்னும் வரும்.)

கால்ஃப் ஆடலாம்...

குண்டுமணி

தடியும் பந்தும் கலந்த விளையாட்டு கால்ஃப். நீண்டவெளி மைதானத்தில் ஆடப்படும் கால்ஃப் ரோமர் காலத்தில் தொடங்கப்பட்டது. ரோமர்கள் ஒரு தடியினால் சிறகுகள் உள்ள பந்தை அடித்து விளையாடியிருக்கிறார்கள். கால்ஃப் பந்து அடிக்கப்படும் குழிக்கு 'Put' என்று பெயர்.

நவீன கால்ஃப் உருவானது ஸ்காட்லாந்தில்தான். 1471-ம் வருஷம் மே மாதம் கால்ஃபும், கால் பந்தும் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று கூடச் சட்டமியற்றப்பட்டது. சட்ட சபைப் புறக்கணிப்பு இருந்தாலும், ஸ்காட்லாந்து மன்னர் நான்காம் ஜேம்ஸ் கால்ஃப் ஆட்டத்தில் பிரியப்பட்டு, தடைகளுக்கு விலக்கு அளிக்க முன் வந்தார். முதல் கால்ஃப் கிளப் 1744-ம் ஆண்டு ஸ்காட்லாந்திலுள்ள லீத்தில் தொடங்கப்பட்டது. எடின்பரோ நகரத் தந்தைகளே கால்ஃப் பந்தயத்துக்கு ஒரு வெள்ளித் தடி பரிசளிக்க அந்த நாளில் கோரினார்களாம். புனித ஆண்ட்ரூவில் தொடங்கப்பட்ட கால்ஃப் கிளப்பே புராதனமானது. 1754-ம் வருஷம் நடைபெற்ற கால்ஃப் பந்தயங்களில் ஆட்ட விதிகள் தயாரிக்கப்பட்டன.

முதலில் கால்ஃப் பந்தயங்களுக்கான குழிகள் ஐந்தே இருந்தன. பிறகு வளர்ந்து பதினெட்டுக் குழிகள் என்று நிர்ணயிக்கப்பட்டன. ஸ்காட்லாந்திலுள்ள பிரெஸ்ட்விக் கிளப் சாம்பியன் பந்தயத்தை நடத்தியது. இந்தப் பந்தயத்தில் வெற்றியாளர் வில்லி பார்க். அவர் எடுத்த ஸ்கோர் 174. இதுதான் பிரிட்டனில் நடைபெற்ற முதல் சாம்பியன் போட்டியாகும்.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் கால்ஃப் ஆட்டம் பெண்களுக்கு மத்தியில் மதிப்பான ஆட்டமாகத் திகழ்ந்தது. முதல் பெண்மணிகளுக்கான கால்ஃப் பந்தயம் லங்காஷயரில் நடந்தது. ஆலன் ராபர்ட்சன் என்ற கால்ஃப் ஆட்டக்காரரே முதல் புரொபஷனல் ஆட்டக்காரராகக் கருதப்பட்டார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தாமஸ் ஹாலிபர்ட்டன் உலக ரிக்கார்டான 126 ஸ்கோரை எடுத்துப் புகழ் பரப்பியவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கால்ஃப் பல நாடுகளுக்குப் பரவியது. ஸ்காட் படையிலுள்ள அதிகாரிகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ள நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர். ராயல் கல்கத்தா கால்ஃப் கிளப், ராயல் பம்பாய் கால்ஃப் கிளப் ஆகியவை தோன்றுவதற்கு ஸ்காட் ராணுவ அதிகாரிகள் உறுதுணையாக இருந்தனர். சணல் தொழிலில் ஈடு



பட்ட வியாபாரிகளும் இந்தக் கிளப்கள் தோன்ற உதவினர். ஸ்காட்லாந்து நாட்டுக்கு கால்ஃப் தோன்றுவதற்கான பெருமை சேர்கிறது.

அமெரிக்காவில் கால்ஃப் 1880—ம் ஆண்டிலிருந்து பரவியது.

கால்ஃப் கோஷ்டியாகவும் தனிப்பட்டும் ஆடப்படலாம். கால்ஃப் போட்டிகளில் இருவகை: ஒன்று MATCH PLAY. மற்றொன்று STROKE PLAY. MATCH PLAYல் பெரும்பான்மையான குழிகளைப் பெற்றவர் வெற்றியாளராகக் கருதப்படுவர். 'STROKE PLAY'யில் குறைந்த அளவு STROKEகளில் முடிப்பவரே ஜெயித்தவராகக் கருதப்படுவார்.

பந்தயத்தில் ஒரு ஆட்டக்காரர் பதினன்கு வகை 'தடி' (CLUB)களைப் பயன்படுத்தலாம். தரமான கால்ஃப் மைதானம் 18 குழிகளுடன் 7000 கஜ தூரத்தில் அமைந்திருக்கும். குழிகள் 100 கஜத்திலிருந்து 600 கஜ தூரம் வரை இருக்கலாம். ஒரு வட்ட வடிவமான புல் பகுதியில் 'குழி' இருக்கும்.

ஆட்டக்காரர்கள் மோசமான தட்ப வெட்பங்களுக்காக ஆட்டத்தை நிறுத்துவதில்லை. உடல்நிலைக் கோளாறினாலோ, இடியினால் ஏற்பட்ட அபாய விளைவினாலோ ஆட்டத்தைத் தடைப்படுத்தலாம்.

ஆட்டக்காரர் தம் சக ஆட்டக்காரருக்கோ 'காடி'க்கோ தான் ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம். பந்தயத்தில் ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் 'காடி'கள் தடிகளைத் தூக்கி வருவதோடு, பந்தின் திசையைக் கண்டறிந்து 'மார்க்' செய்வார்கள்.

ஆட்டக்காரர் பந்தை, ஒரு தடவை தூக்கியடிப்பார். இரு தடவை தாக்கினால் அவர் அதற்கான 'பெனல்டி'யைச் செலுத்தும்படி ஆகலாம்.

ஆட்டக்காரர் மைதானத்திலுள்ள தண்ணீரில் பந்தையடித்துத் தொலைத்து விட்டால், அந்த ஆட்டக்காரர் ஒரு ஸ்டிரோக் இழப்புக்குப் பிறகு மறு பந்தைப் பயன்படுத்தலாம்.

தப்பான பந்தை ஆட்டக்காரர் பயன்படுத்தியதாகக் கருதப்பட்டால் அவர் ஒரு குழியை இழப்பார்; அல்லது இரண்டு ஸ்டிரோக்குகளைக் கைவிடுவார். ஆட்டக்காரர் பந்தை அடிக்கும் போது எதிரி ஆட்டக்காரரின் பந்தில் பட்டுக் குழியில் விழுந்து விட்டால் எதிரி ஆட்டக்காரரின் கடைசி ஸ்டிரோக்கில் அடித்ததாகக் கருதப்படும்.

ஆட்டக்காரரின் பந்து பச்சைப் புல்வெளி குழியருகில் எதிரியின் பந்தைத் தாக்கி விட்டால் இரண்டு ஸ்டிரோக் இழப்புத் தண்டனை பெறுவார்.

ஆட்டக்காரர்கள் கால்ஃப் விதிகளைப் புறக்கணித்தால் பந்தயத்தில் ஒரு குழியை இழப்பர்; அல்லது ஸ்டிரோக் ஆட்டத்தில் இரு ஸ்டிரோக்குகளையே இழக்கும்படி ஆகலாம்.

பச்சைப் புல்வெளி மத்தியிலுள்ள ஒவ்வொரு வழியும் நாலேகால் அங்குலம் விட்டமிருக்கும். குழி நான்கு அங்குல ஆழத்தில் இருக்கும்.

கிண்டி குதிரைப் பந்தய மைதானத்தில் அழகிய கால்ஃப் கிளப் இருக்கிறது. 1984—ம் வருஷத்துக்கு இந்தக் கால்ஃப் கிளப்பின் காப்டன் என். குமார். கால்ஃப் கிளப்புக்குக் காரியதரிசி வி. ஸ்ரீகாந்த்.


ஒவ்வொரு நாள் அதிகாலை 6 மணிக்கே கால்ஃப் மைதானத்தில் ஆடவர்களும் பெண்மணிகளும் கால்ஃப் பயிற்சிக்கு வந்து விடுவார்கள். காலை பதினொரு மணி வரை கால்ஃப் ஆடுவார்கள். மறுபடி மத்தியானம் இரண்டு மணியிலிருந்து 6 மணி வரை கால்ஃப் பயிற்சிகள் தொடரும். இந்த கால்ஃப் கிளப்பில் ஆடும் பெண்மணிகளில் லலிதா பாலசுப்பிரமணியம், மாலினி ஸ்ரீனிவாசன், ஜயஸ்ரீ பரத், சாந்தி மேத்தா முக்கியமானவர்கள். சினிமா நட்சத்திரம் ஸ்ரீமதி வைஜயந்தி மாலாவும் இந்தக் கால்ஃப் மைதானத்தில் ஆட வருவதுண்டு. ஆங்கில மாது சூஸன் ஹில் சுறுசுறுப்பாக கால்ஃப் ஆடிக் களிப்படைதையும் காணலாம்.

வெடிக்கும் கடிதம்

அம்மா: இந்தக் கடிதம் வெடிக்கும் என்கிறாயே, ஏன்?

பையன்: இதில் தம்பி 'குண்டு குண்டாக' அல்லவா எழுதியிருக்கிறான்! குண்டு கண்டிப்பாக வெடிக்குமே!


— லலிதா செல்லப்பா




பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான தருமர் தனது ராஜ்யத்தைப் பணயம் வைத்து துரியோதனனிடம் இழந்தார். சூதாட்ட நிபந்தனைப்படி அவரும் பீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் நால்வரும் மனைவியான திரௌபதியோடு வனவாசம் சென்றார்கள். காடுகளில் ஆறு ஆண்டுகள் அலைந்து திரிந்தார்கள். பின்னர் துவைத வனம் என்ற காட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.
ஒரு நாள் ஆசிரமத்தின் வாசலில் தருமர், திரௌபதி
பிரபு! இந்திரப்பிரஸ்த நகரத்தில் மன்னராக வீற்றிருந்த நீங்கள் இங்கே குடிசையில் வசிக்கிறீர்களே.
வீரர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக. இந்த அழகிய வனத்தில் எங்களுடன் தங்க வேண்டும்...
வில் விஜயன்
கதை: ஆனந்தி
படம்: விஜு
மகா வீரனான அர்ச்சுனன் ஒவ்வொரு கல்லாக ஏரியில் எறிந்து கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பாருங்கள்.
சரியான உணவில்லாமல் இளைத்துப் போய் வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் பீமனைப் பாருங்கள்.
பழங்கள் பறித்துக் கொண்டு வரும் நகுல சகாதேவர்களைப் பாருங்கள். அரசகுலத்தில் பிறந்து சாதுக்களைப் போல இவர்கள் வசிப்பதை என்னால் தாங்க முடியவில்லையே.


...அந்த சமயத்தில் வியாச பகவான் வந்தார்.
துரியோதனனைப் பழிவாங்கத் துடிக்கிறீர்கள். அதற்கு முன் உங்கள் பலம் பெருக வேண்டும். தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெற்றுவர அர்ச்சுனனை அனுப்புங்கள்.
பீமா! பொறுமையாக இரு. நிச்சயம் யுத்தம் வரும். கௌரவர்களைப் பழி வாங்கப் போகிறோம்.
ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள காம்யக வனத்தை அடைந்தார்கள் பாண்டவர்கள். தருமர் அர்ச்சுனனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.
விஜயனே! வடதிசை சென்று தவம் செய்து மகேஸ்வரனுடைய அருளைப் பெற்று பாசுபதாஸ்திரத்துடன் திரும்பி வா.
வடதிசை நோக்கிச் சென்ற விஜயன் பல நதிகளைக் கடந்து இமயமலைச் சாரலை அடைந்து இந்திரகீலம் என்ற சிகரத்தை அடைந்தான். அங்கே ஒரு மகரிஷி தவம் செய்து கொண்டிருந்தான்.
தவம் செய்யத் துறவிகளே வரும் இந்த இடத்துக்கு ஆயுதங்கள் தாங்கிய நீ ஏன் வந்தாய்?
நானும் தவம் செய்யத்தான் வந்திருக்கிறேன். ஆசி கூறுங்கள்.


மகரிஷியாகத் தோன்றிய இந்திரன் சுயரூபமடைந்தான்.
அர்ச்சுனா! உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக!
தேவர்க்கரசே! கௌரவர்களை வென்று பாஞ்சாலிக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க அருள் புரியுங்கள்.
விஜயனே! எல்லா வரங்களும் தருகிறேன். அதற்கு முன் நீ சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும். இங்கே தவம் செய்.
அர்ச்சுனன் ஒரு காலை மடித்து, ஒரு காலில் நின்று சங்கரனை நினைத்துக் கடுமையான தவம் செய்தான். அர்ச்சுனன் மனத்தை அடக்கிச் செய்யும் தவத்தைக் கண்டு தேவர்கள் அதிசயித்தார்கள்.
கைலாச மலையில் பார்வதிதேவியோடு ஈசன் வீற்றிருந்தார்.
பதினாலு உலகங்களிலும் நடப்பதை அறிந்தவரான தாங்கள் அர்ச்சுனன் செய்யும் கடுந்தவத்தை அறியாதது போல் இருக்கிறீர்களே!
தேவி! அர்ச்சுனன் உள்ளத்தில் கர்வம் இருக்கிறது. வரம் தருமுன் அதை அடக்குவோம் வா.



தேவி! துரியோதனன் அர்ச்சுனனைக் கொல்ல மூகாசுரனை அனுப்பியிருக்கிறான். அவனைத் தடுக்கவேண்டும். வா! வா!
ஒரு வேடிக்கை செய்யலாம். வேடனும் வேடுவச்சியுமாக நாம் அங்கே போவோம்.
சுவாமி குழந்தையுடன் யுத்தமா செய்யப்போகிறீர்? அவன் தாங்குவானா?
சிவபெருமானின் படை வீரர்களான பூதகணங்கள் வேடர்களாக மாறி ஆயுதங்களையும் வலையையும் எடுத்துக் கொண்டு அட்டகாசமாக வேட்டையாடத் தொடங்கினார்கள்.
எட்டு திசைகளும் கிடுகிடுக்கக் காட்டுப் பன்றியாக ஓடி வரும் மூகாசுரனை வலையில் பிடித்துக் கட்டினார்கள்.
பிடி! பிடி! விடாதே.
ஆனால் பன்றி வலையிலிருந்து தப்பி ஓடி விட்டது.
ஐயையோ! ஓடி விட்டது. அதோ!
ஓடும் பன்றியைத் தொடர்ந்தார்கள்.
தவம் செய்யும் அர்ச்சுனனை நோக்கிப் பாய்ந்தது பன்றி. ஆரவாரத்தால் தவம் கலைந்த அர்ச்சுனன், தன்னை
நோக்கி ஓடி வரும் காட்டுப் பன்றி மீது அம்பு எய்தான்.



என் வேட்டைக்கு வந்த பன்றியை நான் அடித்தேன் — நீ யாரடா தொடுக்க? நான் யார் தெரியுமா? அர்ச்சுனனாக்கும்.



ஊஹும்! யுத்தம் செய்யும் போது இடுக்கே வந்து பேசுகிறாயே! விலகிப் போ.
நீ தொடுக்கும் பாணங்கள் எல்லாமே புஷ்பங்களாக மாறட்டும்.
வேடுவச்சி சபிக்கவும் சிவபெருமான் புஷ்பக் குவியலில் மறைந்தார். அர்ச்சுனன் சளைக்காமல் அம்பு தொடுத்தான்.
உன் தூணியில் அஸ்திரம் இல்லாமல் போகட்டும்.
எடுக்க எடுக்கக் குறையாத தன் அம்பறாத்தூணி காலியாகிவிட அர்ச்சுனன் திகைத்தான். வேடன் நகைத்தான்.
இந்தா அம்பு!
ஆத்திரம் பொங்க வில்லால் அவன் தலையில் அடித்தான் அர்ச்சுனன். அது கங்கையைத் தாக்கவே மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள் பார்வதி.
கங்காதேவி வில்லைப் பிடுங்கிக் கொண்டு ஓடவே அர்ச்சுனன் திகைத்தான்.
ஒரு வேடனிடம் தோற்ற நான் கௌரவர்களை எப்படி வெல்வேன்?
எங்கேப் போச்சா? சண்டை போட முடியவில்லையா? ஏம்பா? உனக்குக் கை இருக்கே!
அர்ச்சுனன் ஆவேசத்தோடு மல் யுத்தம் செய்தான்.
ஐயோ! இந்த வேடன் சளைக்கவே மாட்டானா? என் சக்தி ஒடுங்குகிறதே!



அர்ச்சுனன் மண்ணால் சிவலிங்கம் பிடித்து புஷ்பங்கள் பறித்து அர்ச்சனை செய்தான்.
இது என்ன மாயம் ஈசனே? நான் செய்த சிவ பூஜை வீணாயிற்றே.
பூஜை மலர்கள் எல்லாம் வேடன் தலையிலே காணப்பட்டன. அர்ச்சுனனுக்கு ஞானம் உண்டாயிற்று.
சிவபெருமான் உமையுடன் காட்சி தந்தார்.
அஸ்திரம் தந்து பிரயோக மந்திரமும் உபதேசித்தார் சிவபெருமான்.
குருகுல வீரனே! எழுந்திரு! உன் பலத்தை சோதிக்க ஆசைப்பட்டேன். நீ அடித்தது எனக்கு ஆனந்தத்தையே அளித்தது. உங்கள் கஷ்டங்கள் விலகி நாடாண்டு புகழ் பெறுவீர்கள்.
பாசுபதாஸ்திரம் உலகத்தையே அழிக்கும் வல்லமை உடையது. அநாவசியமாக உபயோகிக்கக் கூடாது.
மகாதேவனைக் கண்ணால் கண்டேனா? அவரைத் தொட்டுப் பார்க்கும் பாக்கியத்தை அடைந்தேனா?
அப்போது ஒரு திவ்ய ஒளி பரவ அதன் மத்தியில் அர்ச்சுனன் ஒரு அற்புதத்தைக் கண்டான். திக் பாலகர்களான வருணன், குபேரன், இந்திரன், யமன் நால்வரும் காட்சியளித்தார்கள்.


யமன் கூறினான்.
அர்ச்சுனா! நீ சிவபெருமானை நேரில் கண்டவன். அதனால் நாங்கள் உன்னைக் கண்டு மகிழ விரும்பி வந்தோம். யுத்தத்தில் நீ வெற்றி பெறுவாய். இதோ என் அஸ்திரம். இதைப் பெற்றுக்கொள்.
செல்வங்களுக்கு அதிபதியான குபேரன் நான். வளமாய் வாழ்வீர்கள். என்னுடைய அஸ்திரத்தையும் பெற்றுக் கொள்.
நான் சமுத்திரங்களுக்கு அரசனான வருணன். உன் வீரத்தை வாழ்த்த வந்திருக்கிறேன். வருணாஸ்திரத்தை அளிக்கிறேன். நீங்கள் உலகை வென்று ஆள்வீர்கள்.
அர்ச்சுனனை இந்திரன் கட்டித் தழுவிக் கொண்டான்.
பார்த்தனே! என்னுடைய ரதத்தை அனுப்புகிறேன். வானுலகு வந்து இன்னும் பல அஸ்திரங்களைப் பெற்றுக் கொள்.




தேவர்களை விஜயன் பணிவோடு நமஸ்கரித்தான்.
அவர்கள் மறையவும் களைப்புத் தீர கங்கையில் நீந்தித் திளைத்தான்.
பிறகு இந்திரகீல மலையை நமஸ்கரித்தான்.
மலையுச்சியில் தேவரதம் வந்து நின்றது. அதன் சாரதி மாதலி...
அன்னை போல எனக்கு உணவும் இடமும் தந்து காத்த மலையே உனக்கு நமஸ்காரம்.
தங்களை தேவேந்திரர் அழைத்து வரச் சொன்னார்.
அர்ச்சுனனை ஏற்றிக் கொண்டு ரதம் ஆகாய மார்க்கமாகச் சென்றது. தேவலோகத்து அற்புதக் காட்சிகளை அர்ச்சுனன் கண்டான். பொன்மயமான அன்னங்கள் பறந்தன.


கற்பக விருட்சம் வேண்டிய யாவும்
தேவ கன்னி கைகளுக்குக் கொடுப்பதைக் கண்டான்.
இந்திர சபையில் தேவேந்திரன் விஜயனை வரவேற்றுத் தன் அருகில் அமரச் செய்தான். சந்திர சூரியர்கள் சேர்ந்திருப்பது போன்ற அந்தக் காட்சியைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்தார்கள்.
ஜெய விஜயீ பவ!
தேவ கன்னிகையர் நடனமாடினார்கள். வாத்யங்களின் ஒலியும் கீத ஒலியும் நிறைந்தது.
அற்புத அழகு வாய்ந்த ஊர்வசி அர்ச்சுனன் மீது காதல் கொண்டாள்.
தேவ ஸ்திரீயான என்னை ஏற்றுக் கொள்வீர்.


பார்த்தன் தன் காதுகளைப் பொத்திக் கொண்டான்.
அம்மா! நீங்கள் என் தாய் குந்தி தேவிக்கு சமமானவள். நான் மானுடன். உங்களை வணங்குகிறேன்.
கர்வம் மிகுந்த ஊர்வசி அர்ச்சுனனை சபித்தாள்.
பெண்களுடன் ஆடிப்பாடி பொழுது போக்கும் அலியாக மாறுவாய்!
பெண் தன்மையை அடைந்த அர்ச்சுனன் இந்த விபரீதத்தைக் கண்டு வருந்தினான். இந்திரன் ஆறுதல் சொன்னான்.
சித்ரசேனன் என்ற கந்தர்வன் அர்ச்சுனனுக்கு ஆடல் பாடல் கலைகளைக் கற்றுக் கொடுத்தான்.
ஊர்வசியிடம் மயங்காமல் மாவீரம் காட்டினாய். அவள் சாபம் ஒரு ஆண்டு தான் உன்னைப் பிடிக்கும். அஞ்ஞாத வாசகாலத்தில் மறைந்து வாழ இந்தப் பெண்மைத் தன்மை உனக்கு உதவும்.
இந்திரன் அர்ச்சுனனுக்கு ஒப்பற்ற மணிகள் இழைத்த கிரீடத்தைச் சூட்டினான்.
இன்று முதல் உன்னைக் கிரீடி என்று அழைப்பார்கள்.
தங்கள் ஆசியால் அசுரர்களை வென்று வருவேன்.
சிலகாலம் சென்றது...
அர்ச்சுனா! நிவாத கவசர்கள் இருவரையும் அழிக்க வேண்டும். கடலின் அடியில் வாழும் அவர்களை தேவர்களால் வெல்ல முடியவில்லை. இருவரும் அசாத்ய வரம் பெற்றவர்கள்.


மாதலி ரதத்தைச் செலுத்த
சமுத்திரக் கரையை அடைந்த அர்ச்சுனன்
ரதத்திலிருந்து இறங்கி சங்கை எடுத்து
ஊதினான்.
மாய யுத்தம் செய்வதில் வல்லவர்களான
அசுரர்கள் பயங்கரமாக யுத்தம்
செய்தார்கள். மோகனாஸ்திரத்தைப்
போட்டு மாயைகளை விலக்கினான்
அர்ச்சுனன்.
மாதலி யோசனை சொன்னான்.
அவர்களுடைய
கவசத்தைப் பிளக்க வேண்டும்.
வஜ்ராயுதத்தை உபயோகிப்
பீராக.
கவசம் பிளந்து நிவாத கவசர்கள் மலைபோல்
விழுந்தார்கள்.
தேவர்களுக்குப் பேருதவி
செய்து விட்டீர்கள்.
வீரத்தில் விஜயன் என்று
உங்களைப் புகழ்வார்கள்.
தேவேந்திரன் நகரமான
அமராவதிக்குத் திரும்பும் வழியில்
மிதந்து செல்லும் ஒரு நகரத்தைக்
கண்டார்கள்.
மாதலி! பொன்மயமான
இந்த நகரம் யாருடையது?
விஜயனே! காலகேயர்கள்
வசிக்கும் ஹிரண்யபுரி
இது. தேவர்களுக்கு
மிகுந்த துன்பம் அளித்து
வருகிறார்கள்.
இவர்களை நீங்கள்
வெல்ல வேண்டும்.


தேவலோகம் ஹிரண்ய புரியை நெருங்கியது. கந்தர்வர்கள் ஒரு மானிடன் சண்டைத் திறமையைக் கண்டு அலட்சியமாகப் பேசிவிட்டார்கள்.
அர்ச்சுனன் சாமான்யப் பட்டவன் இல்லை என்று விரைவில் அவர்களுக்குத் தெரிந்தது. உக்கிரமான போர் நடந்தது. அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்தைத் தொடுத்தான். ஹிரண்யபுரி அழிந்தது.
அமராவதி திரும்பியதும் ஒரே கோலாகலம்.
அர்ச்சுனா! நீ இருக்கும் போது பாண்டவருக்கு வெற்றியைப் பற்றி என்ன கவலை? இந்தா, பிளக்க முடியாத இந்தக் கவசத்தை அணிந்து கொள்.
உபசாரங்களால் அர்ச்சுனன் திருப்தி பெறவில்லை.
தேவேந்திரரே! இங்கு மகிழ்ச்சியோடு நாட்களைப் போக்குகிறேன். ஆனால் காட்டில் என் சகோதரர்களும் பாஞ்சாலியும் என்னைக் காணாமல் வாடியிருப்பார்கள்.


இரு கரங்களாலும் அம்பு தொடுக்க வல்ல சவ்ய சாசியே! இங்குள்ள போகங்கள் உன்னைக் கவராதது கண்டு மகிழ்கிறேன். உத்தமனே! நீ திரும்பிச் செல்லலாம்.
இதற்கிடையில் தீர்த்த யாத்திரை கிளம்பிய பாண்டவர்கள் இமய மலைச் சாரலை அடைந்தார்கள். தௌம்ய முனிவரும் லோமசரும் உடன் சென்றார்கள்.
கைலாச மலையில் ஏறும் போது பயங்கரமான புயல் வீசியதும் மழை பொழிந்தது. களைப்பே அறியாத பீமனும் களைத்துப் போனான்.
தருமர் பீமனை அழைத்தார்.
தம்பி! திரௌபதியால் இனி நடக்க முடியாது. நீயும் களைத்து விட்டாய். உன் அசுர மகன் கடோத்கசனை நினைத்துக் கொள். வந்து உதவி செய்வான்.
நினைத்த உடனே கடோத்கசனும் அவன் நண்பர்களும் வந்து விட்டார்கள். கடோத்கசன் திரௌபதியைத் தூக்கிக் கொண்டான்.
உன் மாற்றாந்தாய்க்கு அதிர்ச்சியில்லாமல் மெல்ல நடந்து போ.


விரைவில் பத்ரி வனத்தை அடைந்தனர்.
அங்கிருந்த முனிவர்கள் பாண்டவர்களையும்
ரிஷிகளையும் ஆவலோடு வரவேற்றார்கள்.
களைத்திருக்கிறீர்கள். இளைப்பாறுங்கள்.
மற்ற நாள் வரையும் மற்ற அசுரர்கள்
தோளில் தூக்கிக் கொண்டார்கள்.
தவ வலிமை மிகுந்த லோமசரும் தௌம்யரும்
நடந்தே சென்றார்கள்.
திரௌபதி மகிழ்ச்சியோடு அங்கு இருந்தாள்.
வெகு காலத்துக்குப் பின் திரௌபதியின் முகத்தில் புன்னகையைப் பார்க்கிறேன்.
மலைச்சாரலில் உலாவிக் கொண்டிருக்கும் போது ஓர் ஒளி ஆகாயத்தில் தோன்றி நெருங்கி வந்தது.



ஒளி நெருங்கியதும் தெய்வீக ரதம் தெரிந்தது.
அர்ச்சுனா!
ரதத்திலிருந்து குதித்து அர்ச்சுனன் ஓடி வந்து நமஸ்கரிக்கக் குனிந்தான். தருமன் கண்ணீர் பெருகக் கட்டித் தழுவிக் கொண்டார்.
அர்ச்சுனனைச் சுற்றி அனைவரும் உட்கார்ந்தார்கள். தன் வெற்றிகளையெல்லாம் கூறினான் விஜயன்.
இந்திரன் திரௌபதிக்கு அளித்த அழகிய பரிசுகளை எடுத்துக் கொடுத்தான்.
அந்த சமயத்தில் வான மண்டலத்திலிருந்து தேவேந்திரனே வந்து இறங்கினான்.
தருமரே! அர்ச்சுனனைச் சில காலம் எனக்கு உதவியாக அனுப்பியதற்கு நன்றி.
உங்களுடைய துயரம் விரைவில் நீங்கும்.
நீங்கள் பூவுலகம் முழுவதையும் வென்று புகழோடு அரசாள்வீர்கள்.

ஸ்ரீலங்கா
தேசத்துக் குட்டிக் கதைகள் ௨௦
'தேவி'

முட்டாள் மாணவர்கள்

ஆசிரியர், தம் ஐந்து மாணவர்களுடன் ஒருநாள் கிளம்பி ஊரைச் சுற்றிவரப் புறப்பட்டார். வழியில் அவர் தம்முடைய கைக்குட்டையை எடுக்கும்போது அத்துடன் இருந்த சீப்பு ஒன்று கீழே விழுந்து விட்டது. அதை அவருடைய மாணவர்கள் பார்த்தனர். ஆனாலும், அதை எடுக்காமலே வந்துவிட்டனர்.

சிறிது தூரம் போனதும் ஆசிரியர், தம்முடைய சீப்பைக் காணவில்லை என்று கூறினார். மாணவர்களிடம், ''என்னுடைய சீப்பைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டார்.

மாணவர்கள், ''சீப்பு கீழே விழும்போது நாங்கள் அனைவருமே பார்த்தோம்'' என்றனர்.

ஆசிரியர், ''அதை ஏன் எடுக்கவில்லை?'' என்றார். மாணவர்கள், ''கீழே விழுந்ததை எடுக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லித் தரவில்லையே! அதனால்தான் எடுக்கவில்லை!'' என்றனர். ''முட்டாள்களா, இனிமேல் ஏதாவது கீழே விழுந்தால் உடனே எடுத்து வர வேண்டும்'' என்று கூறினார் ஆசிரியர்.



உடனே, மாணவர்கள் தங்களுடைய புத்தகத்தில், ''முட்டாள்களா, இனிமேல் ஏதாவது கீழே விழுந்தால் உடனே எடுத்து வர வேண்டும்'' என்று குறித்துக் கொண்டனர். பிறகு, தாங்கள் வந்த வழியே ஓடிப்போய், கீழே விழுந்த சீப்பை எடுத்து வந்தனர். அப்போது பெரிய காற்றடித்ததால் உதிர்ந்த இலைகளையும் கூடவே பொறுக்கி வந்தனர். அதைக்கண்ட ஆசிரியர், ''எதற்காக இலைகளைப் பொறுக்கிவந்தீர்கள்?'' என்று கேட்டார். மாணவர்கள், ''நீங்கள் தானே கீழே விழுந்ததையெல்லாம் எடுத்துவரவேண்டும் என்று கூறினீர்கள்?'' என்றனர்.

ஆசிரியர், ''அட மடையர்களா, எதை எதை எடுக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன், கேளுங்கள்: ஆசிரியரின் சீப்பு, கோட்டு, பை, குடை, ஊன்றுகோல் இவற்றை எல்லாம்தான் எடுக்கவேண்டும்'' என்றார்.

உடனே மாணவர்கள் அவற்றைத் தங்கள் புத்தகத்தில் குறித்துக்கொண்டனர். சிறிது தூரம் சென்றதும் ஆசிரியர் தடுமாறி அருகிலிருந்த சேற்றுக்குட்டையில் விழுந்து விட்டார். உடனே மாணவர்கள் தங்கள் குறிப்புப் புத்தகத்தில் பார்த்தனர். 'ஆசிரியர் விழுந்தால் தூக்க வேண்டும்' என்று அதில் ஒன்றும் எழுதியிருக்கவில்லை. எனவே அவர்கள் பேசாமல் நின்றனர்.

ஆசிரியர் கோபமாக, ''ஏன் எனக்கு உதவாமல் நிற்கிறீர்கள்?'' என்று கேட்டார். உடனே மாணவர்கள் ''எங்கள் குறிப்புப் புத்தகத்தில் அது பற்றி ஒன்றும் எழுதவில்லையே!'' என்றனர்.

ஆசிரியர், ''முட்டாள்களா, ஆசிரியர் விழுந்தால் தூக்கி விட வேண்டும்'' என்றார்.

மாணவர்கள் அவர் சொன்னதை அப்படியே குறித்துக் கொண்டு பிறகு

ஆசிரியரைச் சேற்றில் இருந்து தூக்கி விட்டனர்.

கிளி சொன்ன 3 உண்மைகள்!

ஒரு வியாபாரி ஓர் அழகான கிளியை வாங்கிவந்து அதைத் தன் வீட்டில் ஒரு கூண்டில் போட்டு வைத்தான்.

ஒருநாள் அந்தக் கிளி வியாபாரியிடம், "ஏ வியாபாரியே, என்னை இப்படிக் கூண்டில் அடைத்து வைப்பதால் உனக்கு என்ன லாபம்? நீ ஏன் என்னை வெளியே பறக்க விடக் கூடாது? என்னைச் சுதந்திரமாக விட்டு விட்டால் நான் உனக்கு மூன்று பொன்னான உண்மைகளைச் சொல்லுவேன். அவை உன் வாழ்நாளில் பயனுள்ளதாக இருக்கும்" என்றது.

"உண்மையாகவா!" என்று கேட்டான் வியாபாரி.

"ஆம், நீ என்னை உன் கையில் வைத்துக் கொள். நான் மூன்று உண்மைகளில் முதலாவதைக் கூறுகிறேன். அதன்மேல் உனக்கு நம்பிக்கை இருந்தால், நான் உன் வீட்டுக் கூரைமேல் உட்காருவதற்கு அனுமதி கொடு. அங்கிருந்து இரண்டாவது உண்மையைக் கூறுகிறேன். அதிலும் உனக்கு நம்பிக்கை ஏற்பட்டால், மூன்றாவது உண்மையை நான் உன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள ஒரு மரக்கிளையில் அமர்ந்து கூறுகிறேன்" என்றது.

வியாபாரியும் இதற்கு ஒப்புக் கொண்டான். கூண்டைத் திறந்து கிளியைத் தன் கையில் வைத்துக் கொண்டான்.

கிளி அவன் கையில் அமர்ந்து கொண்டு, "நீ உன் வாழ்க்கையில் எதையாவது இழந்துவிட்டால் அது உன் உயிருக்கு நிகரானதாக இருந்தால்கூட அதைப் பற்றிக் கவலைப் படாதே!" என்று கூறியது.



வியாபாரி மகிழ்ச்சியுடன், "எவ்வளவு பெரிய தத்துவம்! நீ என் வீட்டுக் கூரையின் மேல் உட்கார்ந்து கொண்டு இரண்டாவது உண்மையைக் கூறு" என்றான்.

கிளி பறந்து சென்று கூரையின்மீது அமர்ந்தது. "உன் கண்ணால் பார்த்தால் ஒழிய எதையும் யார் சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடாதே!" என்று கூறியது.

வியாபாரிக்கு மிகவும் மகிழ்ச்சி. "நல்ல அறிவுரை. எங்கே மூன்றாவது உண்மையைக் கூறு," என்றான். கிளி அவன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள மிக உயர்ந்த ஒரு மரத்தின் உச்சிக் கிளையில் அமர்ந்து கொண்டது.

"வியாபாரியே, என்னுடைய வயிற்றுக்குள் விலைமதிப்பற்ற இரண்டு ரத்தினங்கள் உள்ளன. என் வயிற்றை அறுத்தால் இரண்டு ரத்தினங்கள் கிடைக்கும்" என்றது.

இதைக் கேட்ட வியாபாரி, அதிர்ச்சி அடைந்தான். "ஐயோ, இந்தக் கிளி பறந்து விட்டால் இதன் வயிற்றுக்குள் இருக்கும் இரத்தினங்கள் எனக்குக் கிடைக்காமல் போய் விடுமே! உச்சிக் கிளையில் உள்ள கிளியை என்னால் பிடிக்கவும் முடியாதே!" என்று வருந்தினான். பிறகு கிளியை நோக்கி, "நீ இன்னும் மூன்றாவது உண்மையைக் கூறவில்லையே! அதையும் கூறிவிடு" என்றான்.

ஆனால் கிளியோ, "நான் முதலில் கூறிய இரண்டு உண்மைகளையும் நீ கடைப்பிடிக்கவில்லையே! மூன்றாவதை உன்னிடம் கூறுவதால் என்ன பயன்? முதலில் நான் கூறியது என்ன? 'எதை இழந்தாலும் கவலைப்படக் கூடாது' என்பதுதானே! ஆனால் என் வயிற்றில் உள்ள இரத்தினங்களை இழந்ததற்காக நீ கவலைப்படுகிறாய். இரண்டாவதாக நான் சொன்னது நினைவிருக்கிறதா? 'எதையும் நீ கண்ணால் பார்த்தால் மட்டுமே நம்ப வேண்டும்' என்றேன். ஆனால் நீயோ நான் சொன்னதை வைத்து என் வயிற்றுக்குள் ரத்தினங்கள் இருப்பதாக நம்பி விட்டாய். ரத்தினங்கள் எதுவும் என் வயிற்றில் இல்லை. இருந்தால் நான் எப்படி உயிர் வாழ்வேன்?" என்று சிரித்துக் கொண்டே சொல்லிய கிளி, மரத்தை விட்டுப் பறந்து வானில் சென்று மறைந்தது!



அரசரைக் கண்டுபிடித்த யானை!

இலங்கையில் ஒரு பகுதியை ஆண்டு வந்த அரசன் ஒருவனை அவனுடைய அமைச்சன் கொலை செய்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். இதனால் அரசனின் மனைவி பயந்து தன் கைக் குழந்தையுடன் நாட்டை விட்டு ஓடினாள்.

ஒரு காட்டுக்குச் சென்று அங்கு தன் விலை உயர்ந்த நகைகளையும் உடைகளையும், குழந்தையின் நகைகளையும் கழற்றி ஒரு துணியிலே சுற்றி ஒரு குகைக்குள்ளே போட்டாள். பிறகு சாதாரண ஒரு பெண்ணைப் போல் உடையணிந்து கொண்டாள். அருகில் இருந்த கிராமத்திற்குக் குழந்தையுடன் சென்றாள். அக்கிராமத்தின் தலைவனிடம் தங்குவதற்கு இடம் தரும்படி கெஞ்சிக் கேட்டாள்.

அத்தலைவன் 'இவள் ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும், கொடுமைக்கு ஆளானவளாகவும் தோன்றுகிறாள்' என்று எண்ணினான். அவனும் அவன் மனைவியும், ராணியையும், குழந்தையையும் தங்கள் வீட்டில் தங்கச் சொன்னார்கள்.

''நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?'' இந்தக் குழந்தைக்கு அப்பா யார்?'' என்றெல்லாம் அந்தக் கிராமத்துத் தலைவனும், அவன் மனைவியும் பல தடவைகள் கேட்டுப் பார்த்தார்கள்.

ராணி பதில் எதுவும் சொல்லாது அழுதுகொண்டே இருந்தாள். அவளுடைய அழுகை அதிகரித்ததும் தலைவனும், தலைவியும் அவளிடம் எதுவும் கேட்பதில்லை என்று முடிவு செய்தார்கள்.

ஆண்டுகள் பல ஆயின. அந்தக் குழந்தை அழகான வாலிபனாக வளர்ந்தான். நல்ல அறிவாளியாகவும் விளங்கினான். ஆசிரியரும் அவனைப் புகழ்ந்தார்.

ஒருநாள் அவன் தன் அன்னையிடம், ''அம்மா என்னுடைய அப்பா யார்?'' என்று கேட்டான். ''நீ பெரியவன் ஆனதும் சொல்கிறேன்'' என்றாள் தாய்.

''நான்தான் பெரியவனாகி விட்டேனே!'' என்றான் அவன். ''இல்லை. காலம் வரும்போது கூறுகிறேன்'' என்று சொன்னாள்.

'அப்பன் பெயர் தெரியாத பிள்ளை' என்று சிலர் கேலி செய்வதைக் கேட்டு அவன் மிக வருந்தினான். அதுவே அவனுக்குப் பெருங்கவலையாக இருந்தது. ஒரு நாள் அவன் கால் போன போக்கில் வெகுதூரம் நடந்தான். கால் வலித்தது. ஒரு மரத்தடியில் அமர்ந்தான். அப்போது ஒரு யானை ஓடி வந்தது. அதைப் பார்த்ததும் அவன் ஓட நினைத்தான். ஆனால், பயத்தில் அவன் கால்கள் பின்னிக் கொண்டன; ஓட முடியவில்லை.

யானை அவனைத் தும்பிக்கையால் தூக்கித் தன் முதுகின்மேல் வைத்தது. அதற்குள் அவன் பயந்து நடுங்கித் தன் அன்பான தாயை நினைத்துக் கண் கலங்கினான். அப்போது யானைக்குப் பின்னால் ஓடி வந்தவர்கள் எல்லாரும் அவனைப் பார்த்து, ''ராஜா வாழ்க! ராஜா வாழ்க!'' என்று முழக்கமிட்டனர். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

யானையின் பின்னால் வந்தவர்கள், ''எங்கள் ஊரில் யானைதான் அரசரைத் தேர்ந்தெடுக்கும். தங்களை அரசராகத் தேர்ந்தெடுத்துள்ளது''. என்று அவனிடம் கூறினார்கள்.

அவன் யானை மீது அமர்ந்தபடி தன் அம்மா இருந்த இடத்திற்குச் சென்றான். கிராமத் தலைவனும், தலைவியும், மற்றவர்களும் அவனை வியப்போடு பார்த்தனர். அவனுடைய அம்மா அவன் அருகில் வந்தாள். ''எல்லாரும் உன்னை அரசன் என்கிறார்கள். ஆம், நீ அரசன்தான்! உன் தந்தையாகிய ராஜா சந்தாடிசா அவருடைய முதலமைச்சனால் கொல்லப்பட்டார். உன்னையும் அவன் கொன்று விடுவானோ என்று நினைத்து உன்னைத் தூக்கிக் கொண்டு இரவோடு இரவாக ஓடி வந்தேன்!'' என்று விளக்கமாகக் கூறினாள்.

கிராமத் தலைவனும், தலைவியும் அரசியின் கால்களில் விழுந்து வணங்கினர். மற்றவர்களும் அவ்வாறே செய்து மரியாதை காட்டினர். தனக்கும், தன் மகனுக்கும் இத்தனை நாட்களாக உதவிய அவர்கள் அனைவருக்கும் அரசி நன்றி கூறி, தன் மகனுடன் அரண்மனைக்குச் சென்றாள்.

நாடோடிப்

சிறுவருக்கு ஏற்ற நாடோடிப் பாடல்களைத் தேடிப் பிடித்து அனுப்பும்படி கேட்டிருந்தோம். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை அருமைச் சிறுவர் சிறுமியர் அனுப்பியிருக்கிறார்கள். அவற்றில் நல்ல சில பாடல்களைக் கீழே தந்துள்ளோம்; தொடர்ந்து தருவோம்.

-ஆசிரியர்.

கறுப்பையா பாட்டு!

ஈச்சம்பழத்திலும் இருண்ட கறுப்பையா
நாகப்பழத்திலும் நல்ல கறுப்பையா;
ஆகாயம்மேலேறி ஆடுதய்யாஉன்கறுப்பு
பந்தல்மேலேறி பறக்குதய்யாஉன்கறுப்பு
ஒட்டுத்திண்ணை தூங்கிக்குப் பட்டுப்பாய்
ஒண்ணு?
ஒணுன்முதுகுக்குஒருருபாய்சந்தனமாம்!

-த. அருள்சிவபாலன் (47)
செங்கற்பட்டு-1.

பிள்ளையார் போனது எங்கே?

பிள்ளையாரே, பிள்ளை யாரே,
எங்கே போனீரோ?
தொல்லை யெல்லாம் நீக்குகிற
தொப்பை சாமி நீரே!

கொழுக்கட்டை பிடிச்சு வச்சேன்,
எங்கே போனீரோ?
கொறிக்கச் சுண்டல் அவிச்சு வச்சேன்.
எங்கே போனீரோ?

எலியின்மீது ஏறி நீரும்
எங்கே போனீரோ?
இனிக்கும் பழங்கள் வாங்கி வச்சேன்.
எங்கே போனீரோ?

-க. சங்கரநாராயணன் (1276),
திருப்புவனை.

தலையாட்டிப் பொம்மை!

தஞ்சாவூருப் பொம்மை – இது
தலையாட்டிப் பொம்மை
உருட்டுச் சட்டிப் பொம்மை – இது
உருண்டு ஆடும் பொம்மை
கொஞ்சும் அழகுப் பொம்மை – இது
கொள்ளை கொள்ளும் பொம்மை
எங்கள் ஊருப்பொம்மை – இது
எனக்குத் தந்த பொம்மை!

-எம். நிர்மலா (520) காஞ்சிபுரம்.

தங்கப் பொண்ணு!

தங்கப் பொண்ணு தாராவே,
தட்டார் கண்டால் 'பொன்' என்பார்.
தட்டிப் பார்த்து நகை என்பார்.
தராசில் வைத்து நிறு என்பார்.
எங்கும் போகாமல், இங்கேயே இரு.

-எஸ். வித்யாலட்சுமி, திருவரங்கம்.

உங்கப்பா எங்கப்பா!


உங்கப்பா எங்கப்பா கப்பல்ராஜா
உங்கம்மா எங்கம்மா கப்பல்ராணி;
உங்க அக்கா எங்க அக்கா முருங்கக்கா.
உங்கதம்பி எங்கதம்பி தங்கக்கம்பி.

-பக்குராமன் (1433) காட்டுப்புத்தூர்.

வண்டிக்குள்ளே பொண்ணு!

வண்டிக்குள்ளே பொண்ணைப் பாரு.
பொண்ணு கையில் கிளியைப் பாரு.
கிளியின் வாயில் பழத்தைப் பாரு.
பழத்துக் குள்ளே புழுவைப் பாரு.
புழுவுக் குள்ளே பொட்டுப் பாரு.
பொட்டுக் கேத்த புடவைக்காரி.

-எஸ். மாதவன் (204), திருச்சி-14.

பாடல்கள்



வாடா கோமாளி!

கீரைவிதைக்கலாம், கீரைவிதைக்கலாம்
வாடா கோமாளி.
கீரை விதைச்சால், கோழி கிண்டும்
போடா நான் மாட்டேன்.
கோழி கிண்டினால், வேலி அடைக்கலாம்
வாடா கோமாளி.
வேலிஅடைச்சால்,வெள்ளாடு தாண்டும்
போடா நான்மாட்டேன்.
வெள்ளாடு தாண்டினால், காலை
ஒடிக்கலாம்
வாடா கோமாளி.
காலை ஒடிச்சால்,சண்டைக்கு வருவான்
போடா நான்மாட்டேன்.
சண்டைக்கு வந்தால், மண்டையை
உடைக்கலாம்
வாடா கோமாளி.
மண்டையை உடைச்சால், ஜெயிலுக்குப்
போகணும்
போடா நான்மாட்டேன்.
ஜெயிலுக்குப் போயும் கீரை
விதைக்கலாம்
.வாடா கோமாளி.

—இ.போ. இராதாகிருஷ்ணன் (4233),
கொட்டாரம்.

பன்றிக் குட்டிகளின் சண்டை!

பன்றிக் குட்டிக்கும் பன்றிக் குட்டிக்கும்
சண்டை வந்ததாம் — எங்க
பாட்டன் வீட்டு நாய் வந்து
விலக்கி விட்டுச்சாம்.

பெருவிரலைக் காணோம்!

தெருப்பக்கம் திண்ணையிலே
தெரியாமேத் தூங்கிப்பிட்டேன்:
பெருச்சாளி கடிச்சுதடா — என்கால்
பெருவிரலைக் காணோமடா.

-ஏ. ஆர். ஆனந்த், விருதுநகர்.


கொத்தவரங்காய்!


கொத்தவரங்காய் செடியிலே
கொத்துச் சாவி மடியிலே
முத்து மூக்குத்தி மூக்கிலே
சாதாக் கம்மல் காதிலே
அப்பாசாமி பொன்னுசாமி
போட்டதெல்லாம் பித்தளை.

-கே. வெங்கடேசன்(5114), ஓங்கூர்.



★★ திருக்குறள் புதிர்






மேலே இரு படங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறளை நினைவுபடுத்துகின்றன! இரு குறள்களையும் ஒரு தாளில் எழுதிக் கொள்ளுங்கள். அவை சரியாக இருக்கின்றனவா என்று 83 –ஆம் பக்கத்தைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை –11

டாம் பிரௌனின் பள்ளி நாட்கள்



மூலம்: தாமஸ் ஹக்ஸ்

தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

இங்கிலாந்தின் தென் பகுதியில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் ஜான் பிரௌன் என்று ஒரு பிரபு இருந்தார். அவருடைய செல்லப் பிள்ளை டாம் பிரௌன். வயது பன்னிரண்டு. துருதுருவென்றிருப்பான். குழந்தைப் பருவத்திலிருந்தே ஆற்றில் நீந்துவதும், மரங்கள் மீது ஏறுவதும், சிறுவர்களுடன் குத்துச் சண்டை போடுவதும் அவனுடைய முக்கிய பொழுதுபோக்கு. கிராமத்தில் நல்ல பள்ளிக்கூடம் இல்லாததால் டாமை அவனுடைய அம்மா புகழ்பெற்ற ரக்பி பள்ளியில் சேர்க்க ஏற்பாடுகள் செய்தார். அம்மா, அப்பாவிடம் சொல்லிக்கொண்டு டாம் கோச் வண்டியில் புறப்பட்டான். அடுத்த நாள் ரக்பி பள்ளியை அடைந்தான்.

ஒரு சிறுவன் ஓடிவந்து டாமை வரவேற்றான். "உன் பெயர் டாம் பிரௌன்தானே? என் பெயர் ஈஸ்ட். என் அத்தைக்கு உங்கள் குடும்பத்தினரைத் தெரியும். நீ இன்று வருகிறாய் என்றும், உன்னை வரவேற்று உனக்கு அண்ணனாக இருந்து உதவும் படியும் என் அத்தை எழுதியிருக்கிறார்" என்று சொல்லி டாமை அன்போடு தன் அறைக்கு அழைத்துப் போனான். டாம் நன்றியோடு ஈஸ்ட்டைத் தொடர்ந்தான்.

ரக்பி பள்ளியும், அதன் சூழலும் ஒரு சிறு நகரமாகவே டாமுக்குத் தோன்றின. நீண்ட மதில், அகன்ற வாயில், பெரிய பாதை, அழகிய புல்வெளி விளையாட்டுத் திடல்கள், உயர்ந்த கட்டிடங்கள், ஆங்காங்கே சுதந்திரமாக ஓடியாடும் சிறுவர்கள்—இவற்றையெல்லாம் கண்டு டாம் வியந்தான்.


தேநீர் அருந்திய பிறகு டாமும், ஈஸ்ட்டும் பள்ளியைச் சுற்றி நடந்தனர். அப்போது ரக்பியின் மரபுகள், பழக்க வழக்கங்கள், சிறுவர்களிடையே உலவிவந்த கற்பனைக் கதைகள் —ஆகியவற்றை ஈஸ்ட் சுவையாக எடுத்துச் சொன்னான். புகழ்பெற்ற டாக்டர் ஆர்னல்டு பள்ளியின் தலைமை ஆசிரியர் என்றும், மாணவர்களின் குடியாட்சி முறை பள்ளியின் சிறப்பான அம்சம் என்றும், சட்டாம் பிள்ளைகளே சிறுவர்களை நிர்வகித்து வருகின்றனர் என்றும், அவர்களில் சிலர் மிகவும் கொடுமையானவர்கள் என்றும் டாம் அறிந்தான்.

அங்கு விடுதியில் இருந்த மாணவர்களைப் பல இல்லங்களாகப் பிரித்திருந்தனர். அவற்றில் ஒன்று பள்ளி இல்லம். ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒரு தலைவர் இருந்தார். ஆனால், பள்ளி இல்லத்திற்குப் பள்ளித் தலைவராகிய டாக்டர் ஆர்னல்டே தலைவராயிருந்தார். ஈஸ்ட் பள்ளி இல்லத்தைச் சேர்ந்தவன். அன்று அந்த இல்லத்தின் ஆண்டு விழா. ஆகவே விடுமுறை. பள்ளி இல்லக் குழுவினரும், மற்ற

இல்லங்களைச் சேர்ந்தவர்களும் பல விளையாட்டுக்களில் போட்டியிட்டனர்.

ரக்பியின் கால்பந்து ஆட்டம் பிரபலமானது. பெரிய புருக் என்ற ஆறும், படிவ மாணவன் சிறந்த கால் பந்து வீரன். பள்ளி இல்லக் குழுவுக்குத் தலைவன். ஈஸ்ட்டும் அந்தக் குழுவில் இருந்தான். ஈஸ்ட்டின் உதவியால் டாமும் அந்தக் குழுவில் சேர்ந்தான். பள்ளி இல்லக் குழுவுக்கும், பொதுக் குழுவுக்கும் விறுவிறுப்பான கால் பந்து ஆட்டம் நடந்தது. டாக்டர் ஆர்னால்டும் ஆட்டத்தைப் பார்க்க வந்திருந்தார். டாம் தைரியமாக ஆடினான். அவனுடைய சமயோசித ஆட்டத்தால் பள்ளி இல்லத்திற்கே அன்று வெற்றி கிடைத்தது. டாமுக்குப் பாராட்டுக்கள் குவிந்தன.

அன்றிரவு பள்ளி இல்லச் சிறுவர்கள் கூட்டம் போட்டு வெற்றியைக் கொண்டாடினர். அப்போது புதியவனை டாமை மேடை ஏறிப். பாடும்படி அழைத்தனர். நன்றாகப் பாடாவிட்டால் 'தண்டனை'யாக ஒரு குவளை உப்பு நீரைக் குடிக்க வேண்டும் என்பது மரபு. டாம் நன்றாகப் பாடிச்



சிறுவர்களை மகிழ்வித்தான். தண்டனை'யிலிருந்தும் தப்பினான்.

பிறகு மாணவர் தலைவனான பெரிய புருக் பேசினான். போட்டிகளில் ஒற்றுமையோடு ஆடியதற்காகவும், பள்ளி இல்லத்திற்குப் பல வெற்றிகளை வாங்கிக் கொடுத்ததற்காகவும் அவர்களைப் பாராட்டினான். மேலும் அவன் பள்ளிப் படிப்பை முடித்து வெளியே போக இருந்ததால் சில அறிவுரைகளையும் சொன்னான். பெரிய பிள்ளைகள் சிறிய பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துவதையும், அதிகாரத்தோடு வேலை வாங்குவதையும் அவன் கண்டித்தான். அந்தப் பழக்கங்கள் பள்ளியின் குடியாட்சி மரபுகளுக்கு முரணானவையாதலால் அவற்றை விட்டுவிடும்படி கேட்டுக் கொண்டான். மேலும், டாக்டர் ஆர்னால்டின் கண்டிப்பைச் சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர் என்றும், அவருடைய புதிய சட்டங்கள் பள்ளி மரபுகளைப் பாதிக்கவில்லை என்றும், பள்ளிக்குப் புகழைத் தேடித் தந்துள்ளன என்றும் விளக்கினான். யாராவது டாக்டரைப் பழித்துப் பேசினால், அந்தச் சொற்களை ஏற்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு புருக் உரையை முடித்தான்.

கூட்டம் முடிந்ததும் ஈஸ்ட்டும், டாமும் தங்கள் அறைக்கு நடந்தனர். வழியில் சிலர் சிறுவர்கள் பதுங்கிப் பதுங்கிச் சென்றனர்.

"**அ**வர்கள் ஏன் ஒளிந்து செல்கின்றனர்?" டாம் கேட்டான்.

"நீ 'கம்பளி ஆட்டம்' ஆடியிருக்கிறாயா?" ஈஸ்ட் திருப்பிக் கேட்டான்.

"இல்லை. கம்பளி ஆட்டம் என்றால் என்ன?"

"விழா நாட்களில் எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. அதைத் தவறான முறையில் பெரிய பிள்ளைகள் பயன்படுத்துகிறார்கள். சின்னஞ்சிறிய பிள்ளைகளைக் கம்பளியில் பிடித்துப்போட்டு நான்கு மூலைகளையும் நான்கு பேர் இழுத்துப் பிடித்துக் கொள்வார்கள். கம்பளியை மேலும், கீழுமாகப் புடைப்பார்கள். ஆனால் அதற்காகப் பயப்படுவதும் அனாவசியம்தான்" என்றான் ஈஸ்ட்.

பிளாஷ்மன் என்ற ஒரு பெரிய பையனும், அவனுடைய தோழர்களும் அறை அறையாக நுழைந்து கம்பளி ஆட்டத்திற்காகச் சிறுவர்களை இழுத்து வந்தனர். புருக்கின் அறிவுரை நினைவுக்கு வரவே, தைரியமில்லாத

சிறுவர்களை அன்று விட்டு விட்டனர். ஈஸ்ட்டும், டாமும் அறை நடுவே தைரியமாக நின்றிருந்தனர். பிளாஷ் மனும் தோழர்களும் முதலில் ஈஸ்ட். டைக கம்பளியில் போட்டு மேலும், கீழுமாகப் புடைத்தனர். கூரையை இடிக்கும் அளவுக்கு ஈஸ்ட் மேலே எறியப்பட்டான். அடுத்து டாமையும் கம்பளியில் போட்டு அதே மாதிரி புடைத்தனர். அவனுக்கு உள்ளூர பய மாக இருந்தது. ஆனாலும் அதை வெளிக் காட்டவில்லை. பிளாஷ்மன் டாமின் தைரியத்தைப் பாராட்டினான். சட்டாம்பிள்ளையின் வருகையை அறிந்து சிறுவர்கள் சிதறினர். இப்படி முதல் நாளிலேயே டாமுக்குப் பல புதிய அனுபவங்கள் ஏற்பட்டன.

டாம் முதலில் மூன்றும் ப்டிவத் தில் சேர்க்கப்பட்டான். ஏற்கெனவே அவன் வீட்டில் படித்திருந்ததால் பாடங்கள் அவனுக்கு எளிமையாக இருந்தன. ஈஸ்ட்டும் மற்ற நண்பர் களும் நான்காம் படிவத்தில் இருந் தனர். டாம் கவனமாகப் படித்து முன்னேறினன். ஆசிரியர் மகிழ்ந்தார். டாம் பெற்றேருக்குப் பெருமையாகக் கடிதம் எழுதினன்.

பள்ளி இல்லத்திற்கு வாக்கரும், புரூக்கும் சட்டாம்பிள்ளைகள். மற்றவர் களைப் போல் அல்லாமல் அவர்கள் சிறுவர்களை அன்போடு நடத்தினர். டாமுக்கு எந்தவிதத் துன்பமும் நேர வில்லை. அவன் படிப்பு, விளையாட்டு இரண்டிலும் நல்ல பெயர் எடுத் தான். ஆனல், அவனுடைய நல்ல பெயர் நீடிக்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்தது!

டாமின் வகுப்பில் ஹால் என்று ஒருவன் இருந்தான். அவனுக்குப் பெரிய தலை; சிறிய கால்கள். அவனைத் 'தவளைக் குஞ்சு' என்று செல்லமாகக் கூப்பிட்டனர். தவளைக் குஞ்சுவும், மற்ற நண்பர்களும் சேர்ந்து 'முயலும் வேட்டை நாயும்' என்ற



குழந்தை எழுத்தாளருக்கு – கலைமாமணி விருது!



நீங்கள் விரும்பும் வகையில் பல நாடகங்களை எழுதியும், பக்திப் பாடல்களை இசையோடு இயற்றியும் புகழ் பெற்றவர் கவிஞர் திலகம் திருச்சி பாரதன் அவர்கள். இந்த ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இவருக்கு, 'கலைமாமணி' விருது வழங்கியிருக்கும் செய்தி கேட்டு, குழந்தை உலகமும் நாடக உலகமும் மகிழ்ச்சி அடைகின்றன; மனமாரப் பாராட்டுகின்றன. 'கோகுலம்' சார்பிலும் இவருக்கு நல்வாழ்த்துக்கள்.

விளையாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அது பள்ளி விதிகளுக்கு மாறான ஆட்டம். முயல்களாக ஆடும் சிறுவர்கள் காகிதங்களைச் சிறுசிறு துண்டுகளாகக் கிழித்து அவற்றைக் கீழே போட்டுக் கொண்டே வெகு தூரம் ஓட வேண்டும். தவறான பாதைகளிலும் காகிதத் துண்டுகள் போடப்பட்டிருக்கும். சிறிது நேரங்கழித்து வேட்டை நாய்களாக ஆடும் சிறுவர்கள் அந்தத் துண்டுகளை மோப்பம் பிடித்துப் பின்பற்றிச் செல்ல வேண்டும். முடிவில் சரியான இடத்தை அடைய வேண்டும். அவ்வாறு அடையும் முதல் நான்கு ஆட்டக்காரர்களே விளையாட்டில் வெற்றி பெற்றவராவர்.

சிலர் முயல்களாகவும், பலர் வேட்டை நாய்களாகவும் பள்ளி இல்லத்திலிருந்து புறப்பட்டனர். ஈஸ்ட்டும், டாமும் வேட்டை நாய்க் கூட்டத்தில் இருந்தனர். அவர்கள் பள்ளி வாயிலைக் கடந்து சென்று காட்டுக்குள் வெகுதூரம் ஓடினர். பெரிய பிள்ளைகள் வேகமாக முன்னேறினர். ஆனால், தவளைக்குஞ்சு சோர்வுற்றுச் சேற்றில் விழுந்து அலறினான். அவனைக் காப்பாற்றி அழைத்துக்கொண்டு ஈஸ்ட்டும், டாமும் பள்ளியை நோக்கித் திரும்பினர்.

அவர்கள் பள்ளியை அடைவதற்கு வெகு நேரம் ஆனது. வாயில் கதவு அடைக்கப்பட்டது. காவல்காரன் அவர்கள் மூவரையும் டாக்டர் ஆர்னால்டின் முன்பு கொண்டு போய் நிறுத்தினான். அவர், ''நீங்கள் சின்னப் பிள்ளைகள். பெரிய பிள்ளைகளின் துணிச்சலான ஆட்டங்களில் ஏன் கலந்து கொள்ளுகிறீர்கள்? இன்று உங்களை மன்னித்து விடுகிறேன். இனிமேல் இம்மாதிரி செய்யாதீர்கள்'', என்று அறிவுரை சொல்லி அனுப்பினார்.

அரையாண்டுத் தேர்வுக்குப் பிறகு டாம் நான்காம் படிவத்திற்கு மாற்றப்பட்டான். அங்கு ஈஸ்ட்டுடன் நெருங்கிப் பழகியதால் டாமின் கவனம் படிப்பிலிருந்து விளையாட்டுக்குத் திரும்பியது. வகுப்பிலேயே ஒரு பெஞ்சின் மறைவில் இருவரும் கோலி விளையாடினர். கோலி உருண்டு ஆசிரியருக்கு அருகில் சென்றது. டாமும், ஈஸ்ட்டும் பிடிபட்டனர். அதற்குரிய பிரம்படிகளை வாங்கிக்கொண்டனர். மேலும் இருவரும் நல்ல பெயரை இழந்தனர்.

பள்ளியின் மரபுப்படி சிறிய பிள்ளைகள், சட்டாம்பிள்ளைகளும் ஆறாம் படிவ மாணவர்களும் கொடுக்கின்ற சிறுசிறு வேலைகளைத் தங்களால் இயன்ற வரை செய்ய வேண்டும். பதிலுக்கு அவர்களிடமிருந்து பாடங்களையும் விளையாட்டுக்களையும் கற்க வேண்டும். பெரிய புருக் பள்ளியை விட்டுச் சென்ற பிறகு பிளாஷ்மன் என்ற முரட்டுப் பையன் சிறிய பிள்ளைகளிடம் நிறைய வேலை வாங்கினான். அவன் சட்டாம் பிள்ளையும் இல்லை; ஆறாம் படிவத்திலும் இல்லை. ஐந்தாம் படிவத்தில் படித்தான். ஆகவே, டாமும், ஈஸ்ட்டும் அவனுக்குப் பணிய மறுத்தனர். முடிவில் 'பிளாஷ்மன் கட்சி', 'டாம் கட்சி', எனச் சிறுவர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தனர். அதனால், இருவருக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன.

குளிர்காலத்தில் ஒருநாள் டாமும், ஈஸ்ட்டும் பொது அறையில் இருந்த தணல் அடுப்புக்கருகில் அமர்ந்து குளிர் காய்ந்தபடி உரையாடிக் கொண்டிருந்தனர். அந்த வழியே வந்த பிளாஷ்மன் அவர்களை அறைக்குப் போகும்படியும், தனக்கு அந்த இடத்தை விட்டுக் கொடுக்கும்படியும் அதிகாரத்தோடு கேட்டான். அவர்கள் மறுத்தனர். பிளாஷ்மன், டாம் மீது ஒரு குத்து

விட்டான். டாம் பலமாக இரண்டு குத்துக்களைத் திருப்பிக் கொடுத்தான். அருகிலிருந்த சிறுவர்கள் டாமுக்கு ஆதரவாகப் பேசினர். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பிளாஷ்மன் டாமைத் தொந்தரவு செய்வதே இல்லை. மற்றவர்களைத் தொந்தரவு செய்வதையும் நிறுத்தி விட்டான்.

ரக்பியின் எல்லையில் 'ஆவன்' என்ற ஆறு ஓடியது. அதில் நிறைய மீன்கள் இருந்தன. சிறுவர்கள், பள்ளி இருந்த கரையில் மட்டுமே மீன் பிடிக்கலாம். எதிர்க்கரை ஒரு செல்வந்தருக்குச் சொந்தமாயிருந்தது. உத்தரவின்றி யாரும் அங்கு போகவோ, மீன் பிடிக்கவோ கூடாது. டாமும், ஈஸ்ட்டும் நண்பர் குழாத்துடன் எதிர்க்கரைக்கு நீந்திச் சென்று மீன் பிடித்தனர். அங்கிருந்த காவல்காரரிடம் டாம் ஒருநாள் அகப்பட்டுக் கொண்டான். காவல்காரன் டாமை நேராக டாக்டர் ஆர்னல்டிடம் அழைத்துச் சென்றான். டாம் குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்குரிய தண்டனையையும் அடைந்தான்.


டாமும், நண்பர்களும் ஒருமுறை பந்து விளையாடும்போது அது உயரச் சென்று கூரையின் மேல் சிக்கியது. அவர்கள் பந்தை எடுப்பதற்காக மிகவும் சிரமப்பட்டுக் கூரைமேல் ஏறினர். கூரைமேல் நிறையப் பந்துகள் விழுந்து கிடந்தன. அவற்றைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு சிறிதுநேரம் அங்கேயே விளையாடினர். பிறகு கூரைமேலிருந்த மணிக் கூண்டின் சுவர்களில் 'டாம்', 'ஈஸ்ட்' என்று தங்கள் பெயர்களைப் பொறித்தனர். மேலும் மணிக்கூண்டுக் கடிகாரத்தின் நிமிஷ முள்ளையும் இழுத்துப் பிடித்து அதன் மீதும் தங்கள் பெயர்களை எழுதினர். அதனால் கடிகாரம் மூன்று நிமிஷம் தாமதமாக ஓடியது.

மறுநாட்காலை அநேக ஆசிரியர்களும், மாணவர்களும் பிரார்த்தனைக்குத் தாமதமாக வந்தனர். விசாரணை நடந்தது. டாமும், ஈஸ்ட்டும் செய்த தவறு டாக்டர் ஆர்னல்டுக்கு எட்டியது. அவர் கிரேக்க இலக்கியத்தில் ஒரு பாடலை மனப்பாடம் செய்யும்படி அவர்களுக்குத் 'தண்டனை' வழங்கினார். கூரை மேல் ஏறுவதால் உண்டாகும் ஆபத்தையும் கூறி எச்சரித்தார்.

டாமும், ஈஸ்ட்டும் அடிக்கடி பள்ளி விதிகளை மீறினர். அவர்கள் தொடர்ந்து டாக்டரிடம் அனுப்பப்பட்டுத் தண்டனை அடைந்தனர். ஒரு நாள் அவர் இருவரையும் நோக்கி,



''பள்ளி விதிகளை மீறுவது ஒரு விளையாட்டு என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால், நான் அப்படி எண்ணவில்லை. பெரிய பிள்ளைகளான நீங்கள் செய்வதையே சிறிய பிள்ளைகளும் பின்பற்றுவர். நீங்கள் பள்ளியின் விதிகளுக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும். இல்லாவிட்டால் உங்களுக்கு இந்தப் பள்ளியில் இடம் இல்லை. பள்ளி விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுக் கல்வி கற்பதால் உங்கள் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும்.



எப்படி வந்தது?

"ஆனைக்கும் அடிசறுக்கும் என்கிற பழமொழி எப்படிடா வந்தது?"

"ஓ, அதுவா! ஒரு நாள் ஆனை தெருவிலே வந்து கொண்டிருந்த போது, எங்க தாத்தா வாழைப் பழத் தோலைத் தெருவிலே வீசி எறிஞ்சாரு. பாவம் ஆனை அதைப் பார்க்காமே, அதுமேலே காலை வச்சு வழுக்கி விழுந்துவிட்டது!"

—கீதா

அடுத்து விடுமுறை வருகிறது. நன்றாகச் சிந்தித்துச் செயல்படுங்கள்'', என்று எச்சரித்தார். டாம் ரக்பி பள்ளியைப் பெரிதும் விரும்பியதால் டாக்டரின் அறிவுரைகளை நினைவில் கொண்டான்.

டாமையும், அவனைப் போன்ற சிறுவர்களையும் திருத்துவதற்காக டாக்டர் ஆர்னால்டு ஒரு திட்டம் வகுத்தார். அதன்படி விடுமுறைக்குப் பிறகு பள்ளி திறந்ததும், டாமுக்கும், ஈஸ்டுக்கும் விடுதியில் வெவ்வேறு அறைகள் கொடுக்கப்பட்டன: ஆர்தர் என்ற புதிய சிறுவன் டாமின் வகுப்பில் சேர்ந்திருந்தான். அவன் தந்தையை இழந்தவன். பல தொல்லைகளுக்கு ஆளானவன். மேலும் உடல் நலம் குன்றிப் பலவீனமாக இருந்தான். டாமுக்கும், ஆர்தருக்குமாகச் சேர்ந்து ஓர் அறை ஒதுக்கப்பட்டது. ஆர்தருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து ஓர் அண்ணனைப் போல அன்பாக இருக்கும்படி டாக்டர் ஆர்னால்டு, டாமிடம் கூறினார். நண்பன் ஈஸ்ட்டைப் பிரிவது டாமுக்கு வருத்தமாக இருந்தது. இருந்தாலும் டாக்டர் தன் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்ப ஆர்தருக்குப் பொறுப்போடு உதவி செய்ய நினைத்தான். அந்தப் பணியை முழு மனத்தோடு டாம் ஏற்றுக்கொண்டான்.

ஆர்தரிடம் சில நல்ல பழக்கங்கள் இருந்தன. அவனுக்கு உடம்பில் பலம் இல்லாவிட்டாலும், உள்ளத்தில் பலம் இருந்தது. இரவு உறங்கும் முன்பு அவன் கைகால்களைச் சுத்தம் செய்து கொள்வான். பிறகு மண்டியிட்டுத் தோத்திரம் சொல்வான். அதற்காகச் சில பிள்ளைகள் அவனைக் கிண்டல் செய்தனர். ஆனால் நாளாக ஆக, அந்த நல்ல பழக்கம் மற்றப் பிள்ளைகளுக்குப் பரவியது.

டாமின் வகுப்பில் மார்ட்டின் என்று ஒரு மாணவன் இருந்தான். பறவைகளையும், மிருகங்களையும் பற்றி அவன் நிறைய அறிந்திருந்தான். காகம், குருவி முதலிய பறவைகளையும், பாம்பு, எலி முதலிய பிராணிகளையும் வளர்த்தான். சிறுவர்கள் அவனைப் பைத்தியம் என்று அழைத்தனர். ஆனால் ஆர்தர் அவனுடைய நட்பை விரும்பினான். டாம் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தான். மார்ட்டின், ஆர்தரையும் மற்றச் சிறுவர்களையும் அடிக்கடி காட்டுக்கு அழைத்துச் சென்றான். அவர்கள் அங்கிருந்த மரங்கள் மீது ஏறினர். பறவைக் கூடுகளைப் பார்வையிடுவதும், முட்டைகளைச் சேகரிப்பதும் அவர்களுக்கு உற்சாகமான பொழுது போக்குகள் ஆயின.

காட்டிலிருந்து திரும்பி வரும் வழியில் ஒரு குடியானவனின் கோழிப் பண்ணை இருந்தது. ஒருநாள் ஈஸ்ட் விளையாட்டாக ஒரு கோழியைத் துரத்திச் சென்றான். அது பயந்து, பெரிதாகக் கூவிக்கொண்டே ஓடியது. கோழியைத் திருட வந்துள்ளனர் என எண்ணிய குடியானவன் சிறுவர்களைத் துரத்தினான். அவர்கள் தப்பிச் சென்

றனர். ஈஸ்ட் மட்டும் அகப்பட்டுக் கொண்டான். குடியானவன் தன்னை டாக்டரிடம் அழைத்துச் செல்லுவானோ என ஈஸ்ட் பயந்தான். ஆனால், குடியானவன் ஈஸ்ட்டுக்கு நல்ல உதை கொடுத்து, கையில் இருந்த காசையும் பிடுங்கிக்கொண்டு அனுப்பி வைத்தான்.

டாமும், மற்றச் சிறுவர்களும் ஒருநாள் வகுப்பில் கிரேக்க இலக்கியத்தில் ஒரு கதையைப் படித்துக் கொண்டிருந்தனர். மொழி கடினமாக இருந்தது. அவர்களுக்கு அதைப் படிக்கப் பிடிக்கவில்லை. ''ஒருநாளைக்கு நாற்பது வரிகள்தான் படிக்கவேண்டும்; அதற்குமேல் வேண்டாம்'' என்று சிறுவர்கள் தாங்களாகவே ஒரு கட்டுப்பாடு செய்து கொண்டனர். அந்தக் கட்சிக்கு வில்லியம்ஸ் என்ற ஒரு முரட்டுப்பையன் தலைவன்.

அன்றைக்கு, கிரேக்க இலக்கியத்திற்கு ஒரு புதிய ஆசிரியர் வந்தார். அவருக்கு அந்த இலக்கியம் மிகவும் பிடிக்கும். பிள்ளைகளைப் படிக்கச் சொன்னார். எல்லோரும் அந்த நாற்பது வரிகள் மட்டும் படித்தனர். வகுப்பு முடிய இன்னும் கால்மணி நேரம் பாக்கி இருந்தது. ஆசிரியர் உற்சாகமாக அந்த நாற்பது வரிகளுக்கு மேற்பட்ட பகுதியையும் படிக்கச் சொன்னார். ஒவ்வொருவராக மௌனமாக எழுந்து நின்றனர். ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி ஒருவரும் படிக்கவில்லை. ஆசிரியர் ஆர்தரைப் படிக்கச் சொன்னார்.

ஆர்தருக்குப் பொதுவாகக் கிரேக்க இலக்கியமும், குறிப்பாக அந்தப்



இராஜபாளையத்தில் கோகுலம் சிறுவர் சங்கம்

இராஜபாளையம் காந்தி கலை மன்றத்தில், சென்ற டிசம்பர் 15—ஆம் தேதி 'கோகுலம் சிறுவர் சங்கம்' தொடங்கப்பெற்றது.

'கோகுலம்' இதழின் கௌரவ ஆசிரியரால் தொடங்கிவைக்கப் பெற்ற இச்சங்கத்தை, பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா, நாவலாசிரியர் கொ.மா. கோதண்டம், கவிஞர்கள் இளம் பாரதி, ரா. பொன்ராசன் ஆகியோர் வாழ்த்தினார்கள்.

கோ. இளங்கோவன், தான் எழுதிய ஒரு கவிதையைப் படித்து எல்லாரையும் மகிழ்வித்தான்.

சங்கத்தின் தலைவர்: ஜெ. ஞானேஸ்வரன், துணைத் தலைவர்: என். எஸ். எம். கார்த்திகேயன், செயலாளர்: கோ. இளங்கோ, துணைச் செயலாளர்: ஆர். ரூப் சந்த், பொருளாளர்; குறளமுதன்

பாடத்தில் இருந்த 'இலியாட்' என்ற இதிகாசக் கதையும் மிகவும் பிடித்திருந்தன. அவன் நாற்பது வரிகளுக்கு மேலும் ஏற்கெனவே படித்திருந்தான். ஆகையால், அவன் எழுந்து உணர்ச்சியோடு படித்தான். அது ஒரு சோகமான பகுதி. ஆர்தரின் உள்ளம் உருகியது; கண்கள் நீரைச் சிந்தின.

ஒரு சிறுவன் அவ்வளவு உருக்கமாக இலக்கியம் படித்ததை ஆசிரியர் அதுவரையில் கேட்டதில்லை. அவர் ஆர்தரின் அருகில் சென்று அவனைப் பாராட்டினார். பிறகு, வில்லியம்சைத் தொடர்ந்து படிக்கச் சொன்னார். ''ஐயா, நாற்பது வரிகள்தான் எங்களுக்குப் பாடம். அதற்குமேல் படிக்க முடியாது'', என்றான் வில்லியம்ஸ். அதைப் பார்த்து எழுதும்படி அவனுக்குத் தண்டனை கொடுத்துவிட்டு அவர் ஆர்தரை மேலும் படிக்கச் சொன்னார். ஆர்தர் தொடர்ந்தான். ''வில்லியம்சிடம் ஆர்தர் அடி வாங்கப் போகிறான். அவனுக்குப் போதாத காலம்தான்!'' என்று மற்றச் சிறுவர்கள் ரகசியமாகப் பேசிக்கொண்டனர்.

அவர்கள் எதிர்பார்த்தது நடந்தது. வகுப்பு முடிந்து சிறுவர்கள் வெளியே வந்ததும் வில்லியம்ஸ் ஆர்தரைப் பிடித்து அடித்தான்; வாயில் வந்தபடி வைதான். இருவரையும் சுற்றி ஒரு கூட்டம் கூடியது. செய்தி அறிந்த டாம், ஆர்தரைக் காப்பாற்றுவதற்காக ஓடினான். ''நிறுத்து வில்லியம்ஸ். தொடாதே, அவனை,'' என்று சீறிக்கொண்டே வில்லியம்சின் கையில் ஓங்கி அறைந்தான். வில்லியம்சின் பிடி தளர்ந்தது. அவனுடைய கோபம் ஆர்தரிடமிருந்து டாமின் மேல் திரும்பியது. ''என்னோடு குத்துச் சண்டைக்கு வருகிறாயா?'' என்று வில்லியம்ஸ் கேட்டான்.

''சரி'', என்று டாம் கர்வத்தோடு சொன்னான்.

இரு சிறுவர்களுக்குமிடையே நடக்க இருக்கும் குத்துச் சண்டையின் செய்தி ரக்பி பள்ளி முழுவதும் பரவியது. பிள்ளைகள் வழக்கமான இடத்தில் வேடிக்கை பார்க்கக் கூடினர். டாமுக்கு உதவியாக ஈஸ்ட்டும், வில்லியம்சுக்கு உதவியாக மார்ட்டினும் அமர்த்தப்பட்டனர். 'குத்துச் சண்டை வீரர்கள்' களத்தில் இறங்கினர். ஒருவரை ஒருவர் வெறியோடு தாக்கி, இருவரும் களைத்தனர். முதல் ஆட்டத்தில் இருவரும் சரி சமமாக இருந்தனர். இரண்டாம் ஆட்டம் தொடங்



கியது. டாம் தாக்கியும், ஏய்ப்புக் காட்டியும், சுழன்றும் முறைகளைச் சட்டுச் சட்டென்று மாற்றியும் போரிட்டான். வில்லியம்ஸ் இருமுறை கீழே விழுந்தான். மறுபடியும் எழுந்து ஆவேசமாகத் தொடர்ந்தான். தனக்காக டாம் கஷ்டப்படுவதைக் கண்டு ஆர்தருக்கு மனம் பொறுக்கவில்லை. குத்துச் சண்டையை நிறுத்தவும், டாமைக் காப்பாற்றவும், அவன் விளையாட்டிற்கும் பள்ளி இல்லத்திற்கும் தலைவனை இளைய புருக்கை அழைத்து வந்தான்.

விடுதியில் சண்டைகளை நிறுத்தி அமைதியைக் காப்பது இளைய புருக்கின் கடமை. டாமிடம் இன்னும் கொஞ்சம் பலம் இருப்பதையும், வில்லியம்ஸ் மிகவும் களைத்துப் பலவீனமாக இருப்பதையும் அவன் ஒரு நொடிப் பொழுதில் புரிந்து கொண்டான். ஆகவே அவன் போரை நிறுத்தவில்லை. முரட்டு வில்லியம்சுக்கு அது ஒரு பாடமாக இருக்கட்டும் என நினைத்து இளைய புருக்கும் மற்றவர்களுடன் சேர்ந்து சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். செய்தி டாக்டர் ஆர்னல்டுக்கு எட்டியது. அவர் களத்திற்கு விரைந்தார்.

'போர் வீரர்கள்' இருவரும் தொடர்ந்து தாக்கினர்: டாமின் குத்தை வாங்கிக்கொண்ட வில்லியம்ஸ் மூன்றாம் முறையாகக் கீழே விழுந்தான். சிறுவர்கள் ஆரவாரம் செய்கையில் டாக்டர் அங்கு தோன்றினார். ''அதோ டாக்டர்! டாக்டர்!'' என்று கத்திக்கொண்டே பிள்ளைகள் நாலாபக்கமும் சிதறி ஓடினர். டாமும் தோழர்களும் ஒருபுறமும், வில்லியம்சும் தோழர்களும் இன்னொரு புறமுமாக ஓடி மறைந்தனர்,

''புருக்! ஆறும் படிவ மாணவனை நீ சண்டையை முதலிலேயே நிறுத்த வேண்டாமா?'' என்று டாக்டர் கேட்டார்.

''நாங்கள் அப்படி நிறுத்துவதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்று நினைத்தோம்'', புருக் சொன்னான்.

''சண்டை அரைமணி நேரத்திற்கும் மேலாக நடந்தது போல் இருக்கிறதே! டாமுடன் சண்டை போட்டது யார்?''

''தாம்சன் இல்லத்தைச் சேர்ந்த வில்லியம்ஸ், ஐயா!''

''பள்ளி இல்லத்தைச் சேர்ந்த மாணவன் தோற்கும்போது மட்டும் தான் நீ சண்டையை நிறுத்துவாய்



பல் பிடுங்கணும்

டாக்டர்: பல்லைப் பிடுங்கணுமா? எந்தப் பல்லை?

சுப்பு: என் புதுச் செருப்புக்குத் தான். அது என் காலைக் கடிக்காமல் இருக்கத்தான்!

—லலிதா செல்லப்பா

என்று யாராவது சொல்லக்கூடும். ஆகவே, எல்லாச் சண்டைகளையும் இனி உடனே நிறுத்த வேண்டும்'' என்று டாக்டர் அறிவித்தார். புருக் வணக்கம் சொல்லி விடைபெற்றான்.

டாமின் காயங்கள் ஆறச் சில நாட்கள் ஆயின. ஆர்தர் அவன் அருகில் இருந்து அன்புடன் உதவிகள் செய்தான். ஒருநாள் டாமையும், வில்லியம்சையும் புருக் அழைத்தான். இருவரும் சண்டையைத் தொடராமல் நண்பர்களாக இருக்கும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு அடையாளமாக அவர்கள் எல்லா மாணவர்களின் முன்னிலையிலும் கைகுலுக்கினர். ஒரு ரோஷமான குத்துச் சண்டைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய 'டாம்—வில்லியம்ஸ் சண்டை'யைப் பற்றிப் பல நாட்கள் சிறுவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

நான்கு ஆண்டுகள் முடிந்தன. டாமுக்கு அது ரக்பியில் கடைசி ஆண்டு. அநேக சிறுவர்கள் விடுமுறையைக் கழிக்கத் தத்தம் வீடுகளுக்குச் சென்று விட்டனர். ரக்பி நகரில் வசித்த மாணவர்களும், விளையாட்டு வீரர்களும் மட்டுமே இன்னும் தங்கியிருந்தனர். இரண்டு முக்கிய கிரிக்கெட் ஆட்டங்கள் ரக்பியில் நடைபெற இருந்தன. முதலில் வெல்ஸ்பர்ன் கிரிக்கெட் குழுவினருக்கும், ரக்பி குழுவினருக்கும் ஆட்டம் நடந்தது. அதில் ரக்பி வெற்றி பெற்றது. அடுத்த சில நாட்களில் மேரில்போன் கிரிக்கெட் குழுவினர் ஆட வந்தனர். ரக்பி விழாக்கோலம் பூண்டது. புகழ் பெற்ற இரு குழுக்களின் ஆட்டத்தைக் காண மக்கள் குழுமியிருந்தனர்.

ரக்பி கிரிக்கெட் குழுவின் தலைவன் டாம். அவனுக்கு வயது பத்தொன்

பது ஆகியிருந்தது. அவன் பெரியவனுகக் காணப்பட்டான். ஆர்தரும் ரக்பி குழுவில் ஆடினுன். அவனும் நன்கு வளர்ந்திருந்தான்.

மேரில்போன் குழுத் தலைவன் ஜான்சனும், ரக்பி குழுத் தலைவன் டாமும் தங்கள் ஆட்டக்காரர்களின் முழுத் திறமைகள் பளிச்சிட ஆடினர். அது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம். எந்தக் குழுவுக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

விளையாட்டு ஆசிரியர் டாமையும் ஆர்தரையும் ஒரு தேநீர் விருந்துக்கு அழைத்தார். ஆர்தருக்கு வேறு நிகழ்ச்சி இருந்ததால் அவன் போகவில்லை. டாம் மட்டும் சென்றுன். முதலில் கிரிக்கெட் ஆட்டத்தையும், பிறகு மற்ற விஷயங்களையும் பற்றி டாமும், ஆசிரியரும் உரையாடினர்.

''ஆர்தரின் நட்புக் கிடைத்ததால் தான் என்னுடைய பள்ளி நாட்கள் இனிமையாகக் கழிந்தன. அது என்னுடைய அதிர்ஷ்டமே'' என்றுன் டாம்.

ஆசிரியர் சிரித்துக் கொண்டே, ''அதிர்ஷ்டம் என்று உலகத்தில் எதுவுமே இல்லை. 'டாக்டர் ஆர்னல்டு உன் வாழ்க்கையில் உண்டாக்கிய மாற்றமே அது'' என்று பதிலளித்தார். டாமுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

ஆசிரியர் தொடர்ந்து, ''பள்ளி விதிகளை அடிக்கடி மீறுவது என்னும் குறைபாடு உன்னிடம் இருந்தது. உன்னேடு சேர்ந்துகொண்டு ஈஸ்ட்டும் அப்படிச் செய்தான். உங்களை நல்வழிப் படுத்தவும், உங்கள் சக்திகளைப் பிறருக்கு உதவுவதில் திருப்பிவிடவும் அவர் உன்னை ஈஸ்ட்டிடமிருந்து பிரித்தார். ஆர்தரை உன்னுடன் இணைத்தார். பிறகு உன்னுடைய வளர்ச்சியை அவர் கண்காணித்தார். இதைப் போலவே, மற்ற சிறுவர்களுடைய நலனிலும் அவர் அக்கறை காட்டி அவர்களைச் செம்மைப் படுத்தியிருப்பதை நான் அறிவேன்'' என்று கூறினுர்.

அந்தச் செய்தி டாமுக்கு வியப்பாக இருந்தது. டாக்டர் ஆர்னல்டு பாடங்களை நன்றுகக் கற்பிக்கும் ஒரு நல்ல ஆசிரியர் என்று மட்டுமே அவன் எண்ணியிருந்தான். ஒவ்வொரு பிள்ளையையும் திருத்துவதற்காக அவர் எடுத்துக்கொண்ட அன்பான முயற்சிகளை அறிந்தபோது டாமின் மனத்தில் அவர் ஒரு தெய்வமாகக் காட்சி அளித்தார்.

அடுத்த நாள் டாமின் ரக்பி பள்ளி வாழ்க்கை முடிவடைந்தது. ஆசிரியர்களிடமும், தோழர்களிடமும் விடைபெற்றுன். எதிர்காலப் பிரச்னைகளைச் சமாளிக்கக் கூடிய திடமான மனத்துடன் ரக்பியை விட்டுப் புறப்பட்டான்.

டாம் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பிரபலமானுன். டாக்டர் ஆர்னல்டின் மாணவன் என்று சொல்லுவதே அவனுக்குப் பெருமையாக இருந்தது. விடுமுறையைக் கழிப்பதற்காக அவன் தன் நண்பர்களுடன் ஸ்காட்லாந்தின் ஏரிப் பகுதிக்குச் சென்றுன். அவனுடைய நண்பன் ஒரு பழைய செய்தித் தாளைக் கொண்டு வந்தான். ''ரக்பி பள்ளியின் புகழ்பெற்ற தலைமை ஆசிரியர் டாக்டர் ஆர்னல்டு காலமானுர்'' என்ற செய்தி அதில் அச்சாகியிருந்தது.

அதைக் கண்டு டாம் அதிர்ந்து போனுன். சிறிதுநேரத்திற்கு ஒன்றும் புரியவில்லை. டாமுக்கு உடம்பு நடுங்கியது. தலை சுற்றியது. அவனுல் அந்தத் துயரச் செய்தியைத் தாங்க முடியவில்லை.

டாம் ஸ்காட்லாந்துப் பயணத்தை ரத்து செய்து, ரக்பி பள்ளியை நோக்கி விரைந்தான். ரக்பி பள்ளியின் ஆலயத்திலேயே டாக்டர் ஆர்னல்டின் உடலை அடக்கம் செய்திருந்தனர்.

டாம் பள்ளியில் சேர்ந்தது முதல் விலகியது வரையில் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றுக நிழற் படம்போல அவனுடைய மனத்திரையில் தோன்றி மறைந்தன. எப்போதும் போல அறைக் கதவைத் திறந்து கொண்டு டாக்டர் ஆர்னல்டின் அன்பு உருவம் வெளி வராதா என்று அவன் ஏங்கினுன்.

டாம் இனி டாக்டரைப் பார்க்க முடியாது. அவரை எவ்வளவு நேசிக்கிறுன் என்று அவரிடம் சொல்ல முடியாது. டாக்டர் ஆர்னல்டின் அருமையைச் சில பிள்ளைகள் விரைவிலேயே புரிந்துகொண்டு அவரிடம் அன்பு செலுத்தினர். ஆனுல், டாமுக்கு அது புரிவதற்கு எட்டு ஆண்டுகள் ஆயின. டாக்டர் ஆர்னல்டுக்காக அவன் இறைவனை வேண்டி மௌன அஞ்சலி செலுத்தினுன்.

THOMAS HUGHES ஆங்கிலத்தில் எழுதிய TOM BROWN'S SCHOOL DAYS என்ற கதையின் சுருக்கமே இது.

வெற்றிவேல் வீரவேல் 12

கதை: சுகிசிவம்

படம்: வினு




நம்பிராஜன் வேடருடன் வர முருகன் தவக்கிழவர் வடிவு கொண்டு கோல் ஊன்றி நின்றார்.
சிவநெறிச் செல்வரே! ஏது இவ்வளவு தொலைவு?
இமயத்தில் புறப்பட்டேன். தென் குமரி காண வந்தேன். இந்தா திருநீறு!
பெண்ணே! பசி! பசி!
அம்மா வள்ளி! இந்தா தேன், தினை மாவு. மறக்காமல் சாப்பிடு. அடிக்கடி உன்னைப் பற்றிய கவலை வருகிறது. அடிக்கடி இங்கே வரவேண்டி இருக்கிறது.
தேனும் தினைமாவும் தந்த உடனேயே உமக்குப் பசிக்கும். ம்.. சேர்த்து பிசைந்து தருகிறேன் கையைப் பிடியும்.
ஐயா! இத்தனை வெயிலில் யாத்திரை எதற்கு? ஏன் மகளுக்குத் துணையாக இங்கே இருக்கலாமே!
அதுவும் நல்லதுதான்.
சீ! என்ன இது?
நீதானே கையைப் பிடி என்றாய்.. பசி! பசி! தினைமாவு தா!


கிழவர் தினை மாவை அள்ளி வாயில் திணித்தார். தொண்டை அடைத்தது.
ஆ! தாகம்! தாகம்!
இங்கே ஏது தண்ணீர்? ஏழு மலை தாண்டிப் போனால் ஒரு சுனை உண்டு. போய் வாரும். எனக்கு இருக்கு மதி.
வழி தெரியாதே! நடக்க முடியாதே! நீயும் வாயேன் துணையாக
அப்பாடா! தாகம் தீர்ந்தது. ஆசை மோகம் வந்தது. வள்ளி நீதான் அதனையும் தீர்க்க வேண்டும்.
சீ! வயதுக்குரிய பண்பு இல்லையே!
தள்ளாத கிழவர் என்று துணைக்கு வந்தேன். ஆசைகளை அடக்காத கிழவர்.. போகாத கிழவர்.
ஐயோ! ஒற்றை யானை! கிழவரே காப்பாற்றும்!
தப்பி ஓடுகிறேன்! அன்பு அண்ணனே! ஆனைமுக அண்ணனே! தடை நீக்கும் தலைவரே! துணை வந்து காக்கவும்.
நீங்களா?
இப்போதாவது என்னைப் புரிந்ததா?



அதன் பின்...
அவர் இன்றி நான் இல்லை.
வள்ளி இல்லாமல் வாழ முடியாதே!
நாயும் பேயும் தூங்கும் நள்ளிரவில், வள்ளியின் இருப்பிடம் வந்து, தோழி துணையாக அவளை அழைத்துக் கொண்டு முருகன் புறப்பட்டான். சோலை ஒன்றில் இரவு தங்கி காலையில் கண் விழித்த நம்பிராஜன் மகளைக் காணாது மருண்டான். படையுடன் தேடுகிறான்.
வள்ளி! உன் உற்றார் உறவினர் நம்மைக் கொல்ல வந்தனர். உனக்கு யார் வேண்டும்? நானா? அவர்களா?
சுவாமி! எனக்கு நீங்கள் தான் வேண்டும்.
அப்படியானால் அனைவரும் அழியட்டும் என்று சாபம் கொடு
எதிர்த்து வந்தோர் எல்லோரும் அழியட்டும்.
வேடர்கள் மாண்டனர். நாரதர் வந்து முருகனை வேண்டினார். நம்பிராஜனையும் வேடுவரையும் கண்விழிக்க அந்தக் கருணை வள்ளல் உயிர்ப்பித்தான்.
வழிகாட்டிய தெய்வம் தலைவன் அல்லவா நாங்கள். மன்னனோடு தேடிப் பெற்றுள் மகளை மணக்கிறான்.
களவுத் திருமணத்தை விளக்கவே இந்த விளையாட்டு.
வெற்றிவேல் வீரவேல்
வள்ளியை மணம் புரிந்தான் முருகப் பெருமான். வலப்புறம் வள்ளியும் இடப்புறம் தெய்வயானையும் மார்பில் வேலுமாகக் காட்சி தந்தான். சேவல், கொடியின் கீழ், மயில், வாகனம் ஆக அருளாட்சி செய்கிறான் முருகன். வாழ வரும் அடியார்கள் கோடி கோடி இங்கு என்றும் தேடித் தேடி அருள் புரியும் தெய்வமாக நின்றான்.

சுகி சிவம் சொல்லுகிறார்...



அன்புத் தம்பிகளே,
அருமைத் தங்கைகளே,

நல்வாழ்த்துக்கள். 'வெற்றிவேல், வீரவேல்' தொடர் கதையைப் படித்து இன்புற்ற உங்களுக்கு முருகப் பெருமான் கருணையால் கல்வியும் செல்வமும் எல்லா நலன்களும் அமையட்டும்.

இந்தக் கதைக்குள்ளே ஒரு பேருண்மை ஒளிந்து கொண்டிருக்கிறது. இதில் வரும் சூரன், சிங்கமுகன் போன்றவர்கள் வெறும் கற்பனைப் பாத்திரங்கள் அல்லர்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மூன்று வகையான குற்றங்கள் உண்டு. 'நான்' என்னும் கர்வம் — 'நான்' என்னும் நினைப்பு — முதல் குற்றம். இதற்கு அகங்காரம், ஆணவம் என்று பெயர். அந்த ஆணவத்தின் உருவம் தான் சூரபன்மன்.

இப்போது நாம் பிறந்திருப்பது போலவே இதற்கு முன்னரும் பல முறை பிறந்திருக்கிறோம். அந்தப் பிறவிகளில் செய்த தீமைகள் தீவினையாகவும் (பாவம்), நன்மைகள் நல்வினையாகவும் (புண்ணியம்) நம்மை அடுத்தடுத்த பிறவிகளில் தொடரும். இதற்குக் கர்மவினை என்று பெயர். அந்தக் கர்ம வினையின் உருவம் சிங்கமுகன்.

இந்த உலகில் பிறந்த நமக்குக் குழப்பங்களும் மயக்கங்களும் நிறைய உண்டு. இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து நாம் ஏமாந்து போவது உண்டு. அதற்கு மாயை என்று பெயர். அந்த மாயை உருவம் தாரகன்.

இந்த ஆணவம், கர்மம், மாயை என்னும் குற்றங்களை நல் அறிவு— என்னும் ஞானம்தான் வெல்லும். ஞானமாகிய முருகன், சூரனையும் சிங்கமுகனையும். தாரகனையும் வென்ற வரலாறு இந்த உண்மையை விளக்கும்.

இவ்வாறு குற்றங்கள் நீங்கியதும் உயிர்கள் (மனிதன்) கடவுளை அடையும். கடவுளை உயிர் வந்து அடைவது தெய்வயானை முருகனைத் தேடி மணந்து கொண்டதால் விளங்கும்.

கடவுளைத் தேடி வராத உயிர்களைக் கடவுள் தேடி வருவார். இந்த உண்மையை முருகன் வள்ளியைத் தேடி வந்து மணம் புரிந்த செயல் விளக்கும்.

இந்த உண்மைகளைப் புரிந்து கொள்ள நாட்கள் ஆகலாம். என்றாலும் தெரிந்து வைத்திருங்கள்: பின்னர் புரியும்.

வீட்டில் பழைய பெட்டி ஒன்று கிடைக்கிறது. உள்ளே செல்வம் இருப்பது புரிகிறது. சாவி இல்லை என்பதற்காகப் பெட்டியைத் தூக்கி எறிவோமா? சாவி கிடைக்கும் வரை காத்திருப்போம் அல்லவா? பொறுத்திருங்கள்: உண்மை புரியும்.

கந்தபுராணத்தைக் கற்ற என் கண்மணிகளே! உங்களுக்கும், கோகுலம் ஆசிரியர் குழுவினர்க்கும், உயிர்ஓவியம் வரைந்த திரு. வினு அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றி. கந்தவேள் கருணை உங்களைக் காக்கட்டும்.

முடிந்தால், அருணகிரிநாதர் என்ற பெருமுனிவர் அருளிய வேல் வகுப்பு என்ற பாடலை மனப்பாடம் செய்யுங்கள். உங்கள் வாழ்வு வளம் பெறும்.

வெற்றிவேல் அழகனுக்கு,
வீரவேல் முருகனுக்கு,
அரோகரா!

அன்புள்ள,
சுகி. சிவம்



பழைய மாணவன்

எஸ்.ரங்கநாதன்

சென்னை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ் கோயம்புத்தூர் சந்திப்பில் வந்து நின்றது.

உடனே அந்த வண்டியின் முதல் வகுப்பு கம்பார்ட்மெண்டை நோக்கி ஒரு சிறு கூட்டம் விரைந்தது. அக்கூட்டத்திலிருந்த மனிதர்கள் யாவருமே வசதி படைத்தவர்கள் போலக் காணப்பட்டனர்.

ஆம், அவர்கள் அந்த வண்டியில் பிரயாணம் செய்யும் 'இந்தோ— ஜப்பான் எக்ஸ்போர்ட்ஸ்' கம்பெனியின் நிர்வாகி சோமசுந்தரத்தைக் காணவந்திருந்தனர்.

அவர்களுக்குச் சற்று விலகி, ஓய்வு பெற்ற ஆசிரியர் கணபதியும் நின்று கொண்டிருந்தார்.

அவரது துவைத்துக் கட்டிய வேஷ்டியும், பழைய கோட்டும், அவர் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்பதை அறிவித்தன.

கணபதியின் பழைய மாணவர்களில் சோமசுந்தரமும் ஒருவர். சோமசுந்தரம் அதிகமாகப் படிக்கா விட்டாலும், ஏதோ வியாபாரங்கள் செய்து, தற்சமயம் தில்லியில் 'இந்தோ— ஜப்பான் எக்ஸ்போர்ட்ஸ்' என்ற கம்பெனியை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார்.

ஆசிரியர் கணபதிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பி. எஸ்ஸியை முதல் வகுப்பில் பாஸ் செய்துவிட்டு, வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். கணபதிக்கும், தம் மகன் சம்பாதித்தால்தான் குடும்பம் நடத்த முடியும் என்ற நிலை.

சோமசுந்தரம் கோவை வழியாகச் சென்னை செல்வதை அவருடைய நண்பர்கள் மூலம் அறிந்த கணபதி, அவரது உதவியை நாடினால் தம் பிள்ளைக்கு ஏதாவது வேலை கிடைக்கலாம் என்ற ஆசையில் வந்திருந்தார். தம்முடைய பழைய மாணவன் உதவுவான் என்கிற நம்பிக்கை அவருக்கு.

சோமசுந்தரத்தை ஒவ்வொருவராகப் போய்ப் பார்த்து வந்தனர். கணபதியும் மெதுவாக உள்ளே சென்று, தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு, தம்முடைய பழைய மாணவன் நல்ல நிலையிலிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகச் சொன்னார்.

சோமசுந்தரத்திற்குத் தம்முடைய பழைய ஆசிரியரைக் கண்டதில் மகிழ்ச்சி ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவர் ஏதோ பேசினார். பேசும் பொழுது அவரிடமிருந்து வந்த வாடை அவர் மதுவின் அணைப்பில் இருப்பதையும் அறிவித்தது.

அவரது பேச்சுக்கள், தாம் படிப்பினால் முன்னுக்கு வரவில்லையென்றும், சுயமுயற்சியினால் முன்னுக்கு வந்ததாகக் கூறுவது போலவும் தோன்றின. தாம் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்தவன் என்ற தொனியில் பேசினார் அவர்.

கடைசியாக ஆசிரியர் கணபதி, தம்முடைய பிள்ளைக்கு வேலை தேவையென்பதையும் நாசூக்காக வெளிப்படுத்தினார். சோமசுந்தரம் அவரைச் சிறிதுகூட மதிக்கவில்லை. அவர் சொன்னதையும் பொருட்படுத்தவில்லை.

கணபதி தம்மை நொந்தவாறே பிளாட்பாரத்தில் இறங்கி நடந்தார்.

அவர் சற்றுத் தூரம் போயிருப்பார்.

'சாம்பார் சாதம், தயிர் சாதம்' என விற்றுக் கொண்டிருந்த ஒரு வாலிபன் அவரையே உற்று நோக்கினான்.

பிறகு அவரிடம் ஓடி வந்தான்.

''சார்! சார்! நீங்கள் கணபதி சார் தானே? என்னைத் தெரிகிறதா, சார், நான்தான் சுந்தரம். உங்களிடம் எட்டாவது 'டி' செக்ஷனில் படித்தேன், சார்! ராம் நகரிலிருந்து வருவேன்! வீட்டுக் கணக்குப் போடவில்லையென்று எத்தனை தரம் பெஞ்சு மேலே நிற்க வைத்தீர்கள், சார்! அப்பொழுதெல்லாம் கேட்கவில்லை. நீங்கள் இங்கிலீஷ் பாடம் நடத்தினால் நானெல்லாம் கேட்கலாம், சார்! அப்போது புத்தியில்லை, சார்! இப்போது கஷ்டப்படறேன்! உங்களை நினைக்காத நாளே கிடையாது, சார்!'' எனப் பொரிந்து தள்ளினான், அந்தச் சாம்பார்ச் சாதம் விற்கும் இளைஞன்.

அடுத்து வந்த ஆசிரியர் கணபதி, இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்! அங்கே சுகபோகத்திலிருக்கும் ஒரு பழைய மாணவன், 'உங்கள் பாடம் எனக்கு உதவவில்லை; நானாக முன்னுக்கு வந்தேன்' என்கிறான்.

இங்கேயோ, 'நீங்கள் சொன்னதைக் கேட்கவில்லை; முன்னுக்கு வராமல் போனேன்' என்கிறான்.

''என்ன உலகமடா? ஒருவேளை இரண்டு பேருக்குமே, நான் கற்பித்த கல்வி பயன்படாமல் போய்விட்டதோ!'' என எண்ணினார்.

ஆ ஒ ஓ ம், ''வருத்தப்படாதே, சுந்தரம். உனக்கும் கடவுள் ஒரு வழி விடுவார்'' என்று அந்த இளைஞனுக்கு ஆறுதல் கூறினார்.

''சரி சார்! எங்கே இப்படி ஏதாவது ஊருக்குப் போகிறீர்களா?'' எனக் கேட்டான் சுந்தரம்.

இவ்வளவு அன்போடு பேசும் அவனிடம் உள்ளதைச் சொன்னால் என்ன, என்று நினைத்த ஆசிரியர் கணபதி, நடந்தது யாவற்றையும் கூறினார். சுந்தரம் தன்னை மறக்காமல்



ஓடிவந்து பேசியதற்காக மகிழ்ச்சியையும் தெரிவித்தார்.

இதைக் கேட்ட சுந்தரம், ''கவலைப் படாதீங்க சார்! என்னால் முடிந்த ஓர் உதவியைச் செய்கிறேன்! நான் அதோ அந்த ஐ. ஆர். ரூமில் வேலை செய்கிறேன். அங்கே தினம் ஒரு தாத்தா சாயங்காலம் வந்து கணக்கு எழுதுவார். கடைக்கான சாமான்களும் வாங்கி வருவார். அவர் சமீபத்தில் இறந்துவிட்டார். இன்னும் வேறு ஆள் போடவில்லை. எங்கள் முதலாளிக்கு உடனே யாராவது நம்பிக்கையான ஆள் தேவை. நீங்க வாங்க சார்! நான் அவரிடம் கெஞ்சிக் கேட்கிறேன். மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் தருவார். அதோடு ஒரு வேளை சாப்பிட்டுக்கலாம். உங்க பையனை இங்கு வந்து ஓட்டிக்கொண்டாலும், பிறகு யாராவது தெரிந்தவங்களைப் பிடித்து, வேறு வேலைக்குப் போயிடலாம், சார், நீங்க வேலைக்கு வந்த பிறகு, நான் ஒழிந்த நேரத்தில் உங்களிடம் படித்து மெட்ரிக் எழுதி, முன்பு படிக்காத குறையைப் போக்கிக்குவேன் சார்!'' என்று கூறிக்கொண்டே சுந்தரம், தன் ஆசிரியர் கணபதியைய, கையைப் பற்றி, அழைத்துக் கொண்டு போனான்.

''சுந்தரம். எனக்கு வேலை கிடைத்தாலும், கிடைக்காது போனாலும், உனக்கு ஓய்விருக்கும் போது நான் பாடம் சொல்லித் தாரேன்'' என்று கூறிக்கொண்டே, அன்பினால் கட்டுண்ட ஆசிரியர் கணபதி, அவன் பின்னே சென்றார்.

கல்வி கற்காது கழித்து விட்ட இளமையை நினைத்து வருந்தும் சுந்தரத்திற்கு, மீண்டும் கல்வி கற்பிக்கத் தமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறதே என எண்ணி மகிழ்ந்தார் ஆசிரியர் கணபதி.



கண் தெரியாதவர்களுக்குக் கண் தெரியாதவர் கண்டுபிடித்த கல்வி முறை!

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர் லூயி பிரேல் என்பவர். இவருக்கு மூன்று வயது வரை கண்கள் நன்றாகத் தெரிந்தன. பிறகு இவர் பார்வை இழந்து விட்டார்!

இவரது பெற்றோர் இவரை பாரிசில் இருந்த கண் தெரியாதவருக்கான கல்விக் கூடத்திலே கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அங்கு அப்போது சார்லஸ் பார்பியர் என்பவர் கண்டுபிடித்த முறைப்படி கல்வி கற்றுக்கொடுத்தார்கள். லூயி பிரேல் அந்த முறைப்படி கல்வி கற்றார். பிறகு, அங்கேயே ஆசிரியரானார்!

இவர் கற்ற முறையிலே பல குறைகள் இருந்தன. அவற்றையெல்லாம் இவர் அகற்றித் திருத்தி அமைத்தார். இப்போது கண் தெரியாதவர்கள் படிப்பதற்கு ஏற்றவாறு பலவகை எழுத்து முறைகள் இருக்கின்றன. ஆனாலும், உலகிலுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் பிரேல் கண்டுபிடித்த முறையையே சிறந்த முறை என்று அதையே பின்பற்றுகிறார்கள். அதற்கு 'பிரேல் முறை' என்றும் பெயர் வைத்து விட்டார்கள்!



நிழலும் நிஜமும்

வீ.ர.வசந்தன்

முருகன் அவசர அவசரமாக உடை மாற்றிக் கொண்டிருந்தான்.

''டேய் முருகா, பால் கறந்து வச்சிருக்கேன். கொண்டு போய் டீக் கடைக்கு ஊத்திட்டு வா!'' என்றாள் அவன் தாய்.

''அட போம்மா, எனக்கு சினிமாவுக்கு நேரமாச்சு, நான் மாட்டேன்'' என்று ஒரே குதியாகக் குதித்து வெளியே ஓடிப் போனான், முருகன். சற்று முன்புதான் கூலி வேலைக்குப் போய் விட்டுக் களைப்புடன் வீட்டுக்கு வந்திருந்த அவனுடைய தாயார், ஒரு பெருமூச்சுடன் பாலை எடுத்துக் கொண்டு டீக்கடையை நோக்கி நடந்தாள்.

முருகன் தெருக்கோடிக்கு வந்த போது அவனுக்காக அவன் நண்பர்கள் காத்திருந்தனர். அவர்களோடு சேர்ந்து கொண்டு உல்லாசமாகச் சீட்டியடித்துக் களித்தவாறு திரை அரங்கை நோக்கிச் சென்றான்.

அவன் மிகவும் விரும்புகிற நடிகரின் படம் அன்றுதான் திரையிடப்பட்டிருந்தது. முதல்நாளே போய்ப் பார்க்காவிட்டால் முருகனுக்குத் தலையே வெடித்துவிடுவது போலிருக்கும். அந்த நடிகரிடம் அவனுக்குப் பெரும் பக்தியே வளர்ந்திருந்தது. அவர் பாய்ந்து பாய்ந்து சண்டையிடுவதையும், நூறு மைல் வேகத்தில் ஓடுகிற ரயிலிலிருந்து ஆற்றில் குதிப்பதையும், வீரக்குரலில் கர்ஜிப்பதையும், தேனிலும் இனிய குரலில் பாடுவதையும் பார்த்துப் பார்த்துப் பரவச மடைந்து போவான் முருகன்.

அவர் திரையில் பேசுகிற வசனத்தை அப்படியே மனப்பாடம் செய்து நண்பர்களிடம் பேசிக் காட்டுவான். அவர் பாடிய பாடல்கள் ரேடியோவில் ஒலிபரப்பாகிற தென்றால் அப்படியே சலனமற்று நின்று மெய் மறந்து போவான். வாய் எப்போதும் அவரது படத்தில் இடம் பெற்ற பாடல்களையே முணுமுணுத்துக்கொண்டிருக்கும். வீட்டின் சுவர்களில் எல்லாம் அவரது படங்களைத் தினசரிகளில் இருந்து சேகரித்து ஒட்டி வைத்திருப்பான். அவரைப் பற்றி யாராவது குறைத்துப் பேசினால் 'உண்டு, இல்லை' என்று ஆக்கி விடுவான். அப்படியொரு பரமபக்தி!

நண்பர்களோடு சேர்ந்து டிக்கெட் வாங்கிக்கொண்டு திரையரங்கினுள் நுழைந்தான் முருகன். படம் ஆரம்பமாவது வரையிலும் அவனுக்குப் பொறுமையில்லை. சுவரொட்டியில் காணப்பட்ட விளம்பரப் படங்களைப் பற்றிய தன் யூகத்தைச் சொல்லிச் சொல்லி ஆனந்தித்தான். படம் ஆரம்பமாயிற்று. அதோ! அவனது மனம் கவர்ந்த நடிகர் திரையில் தோன்றி விட்டார்! அவரை வரவேற்க, கைகளைத் தட்டி விசிலடித்து ஆரவாரித்தான் முருகன்.


அடுத்த காட்சியில் ஒரு பெரும் வண்டி நிறையக் கற்களை ஏற்றிக் கொண்டு தன்னந் தனியே இழுத்து வருகிறார் நடிகர். உச்சி வெயிலில் இழுக்க முடியாமல் இழுத்து, நடை தள்ளாடி வருகிற அந்தக் காட்சியைப் பார்த்ததும் முருகன் அப்படியே உருகிப் போனான். அவன் கண்களில் கண்ணீர் வழியலாயிற்று. அவர் சோர்ந்து மயங்கிச் சாலையிலேயே விழுந்து விட, இவன் அப்படியே ஸ்தம்பித்துப் போனான்.

முருகனின் தாயும், தகப்பனும் பரம ஏழைகள். அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பை நடத்தி வந்தார்கள். முருகனை எப்படியாவது படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்று அயராது மழையிலும் வெயிலிலும் உழைத்து அவனைப் படிக்க வைத்தார்கள். ஆனால்,

முருகன் ஒழுங்காகப் படிப்பதில்லை. நண்பர்களோடு சேர்ந்து சினிமாவுக்குப் போவதும், ஊர் சுற்றுவதுமாக இருந்தான். இதனால் அவர்கள் மனம் மிகவும் வேதனையடைந்தது. அவனுடைய பள்ளி ஆசிரியரிடம் சொல்லி வருத்தப்பட்டார்கள். அவரும் எத்தனையோ எடுத்துச் சொல்லியும் முருகன் திருந்துவதாக இல்லை.

அன்று முருகன் பள்ளிக்கூடம் வரவில்லை. மாலை மணிநான்கு. பள்ளிமுடிந்து வீடு திரும்பிய ஆசிரியர் மழைவரும் போலிருக்கவே, விரைவாக வீட்டையடைந்து விடலாம் என்று குறுக்கு வழியில் புகுந்து விரைந்து நடந்தார். வழியில் இருந்த கோயில் மண்டபத்தின் அருகில் வரும்போது உள்ளே முருகனின் குரல் கேட்டது. அவர் ஓரமாக மறைந்து நின்று கவனித்துக் கேட்டார்.

முருகன் தன் நண்பர்களுக்கு, நேற்றுப் பார்த்த திரைப்படக் காட்சிகளை நடித்துக் காட்டிக் கொண்டிருந்தான். ''அப்போ பாருடா, பார வண்டியை இழுத்துக்கிட்டு உடம்பெல்லாம் பதறப் பதற வெய்யிலிலே நடந்து வராரு. எனக்கு அப்படியே ஓடிப் போய்க் கை கொடுக்கலாம்னு தோணிச்சுதுடா. அப்படியே மயங்கிப் போய் விழுந்துட்டாரு! ரோட்டில ஒருத்தர்கூடத் திரும்பிப் பார்க்கல்லே. அனாதையா கெடக்காரு. எல்லாம் எதுக்குத் தெரியுமா? தன்னுடைய தம்பியைக் காலேஜிலே படிக்க வைக்க.





ஆனால், அந்தத் தம்பி அப்போது அங்கே தன்னுடைய நண்பனின் காரிலே வரான். கொஞ்சம்கூட நன்றி யில்லாமே, அவரை அண்ணன் என்று சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு பேசாமப் போயிடறான்''.... முருகன் உள்ளே குரல் தழுதழுக்கக் கதை சொல்லிக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் கழித்து வெளியே வந்த முருகனும் நண்பர்களும் தங்கள் வகுப்பு ஆசிரியர் வெளியே நிற்பதைப் பார்த்துத் திடுக்கிட்டு விழித்தனர்.

''ஏண்டா முருகா, இன்றைக்குப் பள்ளிக்கூடம் வரவில்லே?'' என்றார் ஆசிரியர் கடுமையாக.

''சார், வந்து, வந்து... தலைவலி'' என்று உளறினன் முருகன்.

''சரி, நீ என்னோடு வா'' என்று அவனை அழைத்துக் கொண்டு முன்னே நடந்தார் ஆசிரியர்.

சற்று தூரம் போனதும் அங்கு உருவாகிக் கொண்டிருந்த ஒரு பல மாடிக் கட்டிடத்தைச் சுட்டிக்காட்டி ''அங்கே பார்'' என்றார். முருகன் ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டு நின்றான். அங்கே ஆண்களும் பெண் களும் சாரம் வழியாகக் கற்களைத் தலையில் சுமந்துகொண்டு மேலே ஏறுவதும் இறங்குவதுமாகத் தங்கள் உயிரையே பணயம் வைத்து வேலை செய்து கொண்டிருந்தனர்.

''அதோ மேலே உச்சியில் நீலச் சட்டையணிந்த ஒரு ஆள், ஒற்றைக் கையால் ஏணியைப் பிடித்தவாறு கற்களைத் தலையில் வைத்து ஏறுகிறார் பார். அவர் யார் தெரிகிறதா?'' என்று கேட்டார் ஆசிரியர்.

முருகன் அந்த மனிதரை உற்றுப் பார்த்ததும், அவனுக்குச் 'சுரீர்' என்றது.

அது வேறு யாருமல்ல; அவ னுடைய தகப்பனரேதான்!

''அங்கே சிமெண்ட் கலவையைத் தலையில் சுமந்தவாறு ஓடுகிற பெண் மணி யாரென்று பார்த்தாயா?'' என்றார் ஆசிரியர்.

முருகன் திரும்பிப் பார்த்தான். அது அவன் தாய்!


''முருகா, பல லட்ச ரூபாய்களை, ஊதியமாக வாங்கிக்கொண்டு, அட்டைப் பெட்டிகளைக் கல்லைப் போல் அடுக்கி வைத்துக் கஷ்டப்படுவது போல ஒருவர் நடிக்கிறார். அந்த நடிப்புக்காக உருகி அழுதாயே! அதோ உன்னைப் படிக்க வைக்க, உன் தகப்ப னும், தாயும், உண்மையிலே படுகிற கஷ்டத்தைப் பார். அதோ உச்சியில் நிற்கிறாரே உன தகப்பனர், அவர் கைநழுவினல் அடுத்த விநாடி என்ன ஆகும்? யோசித்தாயா? இதுவெல் லாம் உனக்காகத்தானே! உன்னைப் படிக்க வைக்க, உன்னை முன்னுக்குக் கொண்டு வரத்தானே! ஆனல், நீ ஒழுங்காகப் படிக்காமல் ஊரைச் சுற்றுவதும் போலியான நடிப்பைப் பார்த்து மயங்கி, அதனலேயே பள் ளிக்கு வராமல் மண்டபத்தில் பொழு தைப் போக்குவதுமாக இருக்கிறாய். இனிமேல் இப்படிச் செய்யாதே!'' என்றார் ஆசிரியர்.

முருகன் தலைகுனிந்து நின்றிருந் தான். அவர் அவன் தலையை உயர்த் தியபோது கண்களில் இருந்து கண் ணீர் வழிந்து கொண்டிருந்தது.



''ஐயா, என்னை மன்னிச் சுடுங்க. நடிப்பைப் பெரிசா நினைச் சிருந்த நான், உண்மையிலேயே அந்த வேதனையை அனுபவிக்கிற என் தகப்பனரையும், தாயாரை யும் மறந்துட்டேன். இனி, சத்தியமா நான் ஒழுங்கா படிப் பேன். படித்துப் பெரிய ஆளா வருவேன். என்னை நம்புங்க ஐயா'' என்று அழுதான் முருகன்.

அவன் எடுத்துக் கொண்ட உறுதி கண்ணீரில் நன்றாகத் தெரிந் தது. அவனைத் தட்டிக் கொடுத்து, அவன் கண்களை, தம் மேலங்கியால் துடைத்து விட்டார் அவனுடைய ஆசிரியர்.



யானையின் கதை

ஆப்பிரிக்காக் கண்டம் என்றதுமே நமக்கு நினைவுக்கு வருபவை அதில் உள்ள அடர்ந்த காடுகளும், மலைகளும், மிருகங்களும்தான்! மிருகங்களின் தாய் வீடான ஆப்பிரிக்கக் காடுகளில் வாழ்ந்த ஒரு யானைக் குடும்பத்தின் உண்மைக் கதைதான் இப்பொழுது நீங்கள் படிக்கப் போவதாகும்.

கென்யா என்ற தாய் யானையும், முச்சங்கா, டான்சா என்ற இரண்டு ஆண் யானைக் குட்டிகளும், சலான் என்ற பெண் குட்டியும், முட்டோடோ என்ற குழந்தை யானையும் காட்டில் இருந்தன. இவையெல்லாம் மழை இல்லாததால் நீர்த் தேக்கங்களைத் தேடிப் போய்க் கொண்டிருந்தன. இப்படித் தண்ணீர் தேடிப் பயணமாகிக் கொண்டிருந்த அவைகளின் வாழ்க்கையில் விதி விளையாடத் தொடங்கியது.

திருட்டுத்தனமாகக் காட்டில் புகுந்த வேட்டைக்காரர்கள், யானைகளைக் கொல்வதும், அல்லது மயக்க மருந்து தடவிய அம்புகளால் குறிபார்த்து எய்துவதுமாக இருந்தனர். பல யானைகள் இறந்தன. பல உணர்ச்சி இழந்து தடுமாறின. 'நான்கு லட்சமாக இருந்த யானைகளின் எண்ணிக்கை நாலாயிரமாகக் குறைந்தது.

யானைகளுக்கு நீர் நிலைகளை மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகம். நீர்நிலையைத் தேடிப் போய்க் கொண்டிருந்த தாய் யானை கென்யாவை வேட்டைக்காரர்கள் சுட்டுக் கொல்ல முயன்றார்கள். மயக்கமடைந்த கென்யா, வேட்டைக்காரர்களின்பார்வையிலிருந்து தப்ப நீண்ட தூரம் ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது. தாய்ப்பாசம் பெருக்கெடுக்கத் தன் அருமைக் குழந்தைகளையும் செல்லமாகப் பார்த்துக்கொண்டே ஓடியது. குட்டிகளும் அதைப் பின் தொடர்ந்தன.

முச்சங்காவுக்குப் பன்னிரண்டு வயது நிரம்பி விட்டது. யானைக் குடும்பங்களின் வழக்கப்படி அது தன் தாயை விட்டுப் பிரிய வேண்டிய நேரம் வந்து விட்டது. இந்த வயதுக்குப் பிறகு யானைகள் குழந்தைப் பருவத்திலிருந்து பக்குவ நிலைக்கு வருவதால் அவைகள், தங்களைப் பார்த்துக் கொள்ளத் தனித்துச் செல்ல வேண்டும் என்று நியதியாம். முச்சங்காவுக்குத் தாயை விட்டுப் போக மனமில்லாமல் அழுகையே வந்து விட்டது. திரும்பித் திரும்பித் தாயையும், சகோதர, சகோதரிகளையும் பார்த்துக் கொண்டே கண்ணீருடன் விடை பெற்றது.

கென்யா ஓர் அழகான ஆண் குட்டியைப் பெற்றது. டாம்டாம் என்று பெயர் சூட்டி அதை எல்லா யானைகளும் வரவேற்றன. மீண்டும் சோதனை வரத் தொடங்கியது. மிகவும் நலிந்த கென்யா, குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமல் அவதிப்பட்டது. மற்றொரு பெண் யானை டாம்டாமுக்குப் பால் கொடுத்தது. உயிர் வாழ்வது எப்படி என்று குட்டிகளுக்குக் கற்றுக் கொடுத்து விட்டு, கென்யா இறந்துவிட்டது. யானைகள் இயற்கை தந்த அறிவினால் வளரத் தொடங்கின.

இந்த உண்மைச் சம்பவத்தை 'ஒரு யானையின் கதை' என்ற பெயரில் ஜப்பானியர்கள் படமாக்கியுள்ளார்கள். கடுமையான ஆப்பிரிக்கக் காடுகளில் ஜப்பானியர்கள் படமெடுப்பது இதில் முக்கியமான சிறப்பு. இதற்கு அறுநூறு கோடி யென்கள் (ஜப்பான் நாணயம்)செலவாகியுள்ளன! படமெடுக்கும் போது திரைப்படக் குழுவுக்குப் பல சிக்கல்கள், அபாயங்கள் ஏற்பட்டன. இதில் ஒருவர் உயிர் இழந்தார். இயற்கைக்கும், மனிதவேட்டைக்காரர்களுக்குச்சவால்விட்டபடியானைகள் வாழும் வாழ்க்கை முறை எல்லோருக்குமே ஒரு பாடமாகும். விரைவில் தேவி தியேட்டரில் சென்னைக்கு வரப் போகும் இந்தப் படம் யானைகளின் வாழ்க்கையைப் பற்றித் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும்!

—''சிக்கி''

இளமையில் இவர்கள்...

நேர்மைக்காகப் போராடியவர்

நம் தேச விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர் சர்தார் வல்லபபாய் படேல். நம் தேசம் விடுதலை பெற்றபோது மைசூர், திருவாங்கூர், பரோடா, ஹைதராபாத், புதுக்கோட்டை, என்று 565 சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. அவற்றையெல்லாம் இந்தியாவுடன் இணைத்து, நாட்டின் ஒருமைப்பாட்டைக் காத்தவர் வல்லபபாய் பட்டேல். அதனால்தான் அவரை 'இரும்பு மனிதர்' என்று எல்லாரும் போற்றுகிறார்கள்.

அவர் சிறிய வயதிலே மிகவும் துணிச்சல் உள்ளவராகவும், நேர்மைக்காகப் பாடுபடுபவராகவும் இருந்தார்.

அவர் பிறந்த நடியத் என்ற கிராமத்திலே அக்காலத்தில் பள்ளிக்கூடம் இல்லை. ஆறு மைல் தூரத்திலிருந்த வேறொரு கிராமத்திற்கு அவரும் அவரது கிராமச் சிறுவர்கள் சிலரும் சேர்ந்து சென்று படித்து வந்தார்கள்.

ஒருநாள் மாலையில் அவர்கள் வீடு திரும்பும்போது, எல்லோரும் வழக்கம் போலப் பேசிக்கொண்டே நடந்தார்கள். அப்போது ஒருவன், "எங்கே நம் வல்லபபாய்? நம்மோடுதானே வந்தான்? இப்போது அவனைக் காணோமே!" என்று கேட்டான்.



அப்போதுதான் தங்களுடன் வந்த வல்லபபாயைக் காணோம் என்பது மற்றவர்களுக்கும் தெரிந்தது. உடனே வல்லபபாயைத் தேடத் தொடங்கினார்கள்.

அப்போது அவர்களில் ஒருவன், "டேய், அதோ வல்லபபாய்! உட்கார்ந்து என்னவோ செய்து கொண்டிருக்கிறான்?" என்றான்.

உடனே எல்லோரும் அவர் அருகிலே ஓடினார்கள். என்ன செய்கிறார் என்று பார்த்தார்கள்.

அங்கே வழியிலே ஒரு முளை அடித்திருந்தது. அதை ஆட்டி ஆட்டி வல்லபபாய் பிடுங்குவதற்கு முயன்று கொண்டிருந்தார்.

"என்னடா இது, நிலத்தின் எல்லை தெரிவதற்காக யாரோ இந்த முளையை அடித்து வைத்திருக்கிறார்கள். இதைப் போய்ப் பிடுங்கப் பார்க்கிறாயே!" என்று கேட்டான் ஒருவன்.

"இப்படித்தான் நடக்கும் பாதையின் நடுவிலே முளையை அடித்து வைப்பதோ! பகலில் நடக்கும்போதே காலை இடறிவிடும். இரவிலே கேட்கவேண்டுமா? பிறருக்கு இடைஞ்சலாக இருக்கும் இதைப் பிடுங்கி எறியாமல் வரமாட்டேன்!" என்று கூறி, பல்லைக் கடித்துக்கொண்டு பலமாக ஆட்டி ஆட்டி அந்த முளையைப் பிடுங்கினார்; ஓர் ஓரமாகத் தூக்கி எறிந்துவிட்டு முன்னால் நடந்தார். எல்லாரும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

ஒருநாள் அவருடைய வகுப்பு ஆசிரியர், குறித்த நேரத்திற்கு வகுப்பிற்கு வரவில்லை. அலுவலக அறையில் உட்கார்ந்து, வேறு சில ஆசிரியர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்.

ஆசிரியர் வராததால், மாணவர்களில் சிலர் பேசிக்கொண்டும், பாடிக்கொண்டும் இருந்தார்கள். நேரம் ஆக ஆக, அவர்களின் இரைச்

வேண்டுமென்று ஆசைப்பட்டார். அதற்கு வேண்டிய வசதிகளை இவருடைய அப்பா செய்து கொடுத்தார். இளம் வயதிலே இவர் ஆங்கிலம், ரஷ்யன், ஜெர்மன், இத்தாலி ஆகிய மொழிகளைக் கற்றுக் கொண்டார்.

புத்தகங்கள் படிப்பதோடு இவர் நிற்கவில்லை; கவிதைகள் எழுதினார்; கதைகள் எழுதினார்; நாடகங்களும் எழுதினார்; புகழ்பெற்ற ஆசிரியர்கள் எழுதிய சில கவிதைகளை ஒருமொழியிலிருந்து இன்னொரு மொழியில் மொழி பெயர்த்தார். அவற்றுடன் விஞ்ஞான சோதனைகளையும் இவர் அடிக்கடி செய்து பார்த்தார்.

இளமையிலே இவர் பல மொழிகளில் கவிதைகள் எழுதினாராயினும், பிற்காலத்தில் அக்கவிதைகளெல்லாம் இவருக்குப் பிடிக்கவில்லை. ஒரு சில ஆங்கிலக் கவிதைகளைமட்டும் வைத்துக் கொண்டு, மற்றவற்றைத் தம் கைகளாலே நெருப்பில் போட்டு எரித்து விட்டார்.

இவருடைய தந்தையார் நடத்தி வந்த தொழிற்சாலையில், இவர் சில ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். நைட்ரோ கிளிசரின் என்னும் பொருளை கீசல்குர் என்னும் களிமண்ணுடன் கலந்து அதற்கு டைனமைட் என்று பெயர் வைத்தார். அதனால் எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்பதையும் நிரூபித்தார். அதைவிட சக்திவாய்ந்த சில வெடி மருந்துகளையும் இவர் கண்டுபிடித்தார். இவற்றை விற்றுக் கோடி கோடியாகப் பணம் சேர்த்தார்.

இவர் கண்டுபிடித்த நைட்ரோ கிளிசரினால் பல விபத்துக்கள் ஏற்பட்டன. ஆட்சேதமும், பொருட்சேதமும் அதிகமாயின. ஆக்க வேலைகளுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட அது போர் முதலிய அழிவு வேலைகளுக்குப் பயன் பட்டது.

'ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டார்கள்; பல்லாயிரக்கணக்கான பவுன் மதிப்புள்ள சொத்துக்கள் அழிந்தன' என்பதை அறிந்த நோபல் 'ஏன்தான் இதை நான் கண்டுபிடித்தேனோ!' என்று கண்ணீர் விட்டுக் கலங்கித் தவித்தார். தம்முடைய தொழிற்சாலையில் மிஞ்சியிருந்த நைட்ரோ கிளிசரின் முழுவதையும் மண்ணுக்கு அடியிலே புதைத்தார். அபாயமில்லாத டைனமைட்டைப் பயன்படுத்தும்படி அறிக்கை வெளியிட்டார்.

தாம் சம்பாதித்த மிகப் பெரும் செல்வத்தில் பெரும் பகுதியைப் பரிசுகளுக்காக எழுதி வைத்தார். அந்தப் பரிசுகள்தான் ஆண்டு தோறும் நல்ல காரியங்களுக்காக 1901—ஆம் ஆண்டு முதல் வழங்கப் படுகிறது.

காரிருளில் காளிகோயில் சென்றவர்!

முன்பு, திருச்சிக்குப், பக்கத்திலே வரகனேரி என்ற ஒரு சிறிய ஊர்



இருந்தது. பிறகு, திருச்சி நகரம் விரிவடைய, விரிவடைய அந்த ஊர் நகரத்தின் ஒரு பகுதியாகி விட்டது!

அந்த வரகனேரியில் வெங்கடேச ஐயர் என்று ஒருவர் இருந்தார். அவர் தெய்வ பக்தி மிக்கவர். இந்து மதத்தின் பெருமையை அவர் அடிக்கடி எடுத்துக் கூறுவார். துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து வீடுவீடாகக் கொடுப்பார்.

இளமையிலிருந்தே இந்து மதத்தின் சிறப்பை எல்லோரும் உணர வேண்டும் என்பது அவரது ஆசை. அதற்காகச் சிறுவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு, இதிகாசக் கதைகளையும், புராணக் கதைகளையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவார். அவர்களை அழைத்துக் கொண்டு திருவானைக் கோயில், ஸ்ரீரங்கம் முதலிய புண்ணிய இடங்களுக்கு நடந்து செல்வார். பட்டாணிக் கடலையை நிறைய வாங்கி வைத்து, வழி நடந்து வரும் சிறுவர்களுக்கு அவ்வப்போது கொடுப்பார். அலுப்புத் தெரியாமல் இருக்க வழியிலெல்லாம் பக்திப் பாடல்களை அவர்கள் பாடிக்கொண்டே செல்வார்கள்.

அந்தக் கூட்டத்தில் அவருடைய மகனாகிய மணி என்ற சிறுவனும் உற்சாகமாக நடந்து வருவான்.

அப்பா சொல்லும் கதைகளில் வரும் வீரர்களின் வீரதீரச் செயல்களும், இலட்சிய மனப்பான்மையும் மணியின் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டன. தானும் ஒரு பெரிய வீரனாக விளங்க வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான்.

சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு மணி, நாடகங்கள் நடத்துவான். நாடகத்துக்கு வேண்டிய வசனங்களை அவனே எழுதுவான். வில், அம்புகளையெல்லாம் அவனே தயாரிப்பான். ராமர், அர்ச்சுனர் போன்ற வேடங்களில் வந்து அவனது நடிப்புத் திறமையால் எல்லோரையும் மகிழச் செய்வான்.

வீரனாக வேண்டுமானால், நாடகத்தில் வீரனாக இருந்தால் மட்டும் போதுமா? தினமும் தேகப் பயிற்சி செய்வான். தண்டால், பஸ்கி, கர்லாக் கட்டை சுற்றுதல், நீந்துதல்-இப்படிப் பல பயிற்சிகளில் ஈடுபட்டான். மிகவும் துணிச்சல் உள்ளவனாக வளர்ந்தான்.

ஒருநாள், மணியினுடைய தைரியத்தைச் சோதிக்க விரும்பினார்கள் அவனுடைய நண்பர்களில் சிலர். ''மணி, உன்னை எல்லோரும் தைரியசாலி என்கிறார்களே, உன்னால் நள்ளிரவில் நம் ஊருக்குக் கடைசியில் உள்ள இளங்காளியம்மன் கோயிலுக்குத் தனியாகச் சென்று வர முடியுமா?'' என்று கேட்டார்கள்.

''ஏன் முடியாது? எனக்கென்ன பயம்?''

''ஆனால், அங்கே போய்ச் சும்மா திரும்பி வரக் கூடாது. காளியம்மன் கோயில் கதவிலே உள்ள குங்குமத்தையும், காளியின் எதிரில் இருக்கும் பலி பீடத்திலிருந்து எண்ணெய்க் கரியையும் எடுத்து வர வேண்டும். நன்றாக யோசித்துச் சொல்'' என்றார்கள்.

''ஓ! அப்படியே செய்கிறேன்!'' என்றான் மணி.

மறுநாள் நள்ளிரவிலே கும்மிருட்டிலே புறப்பட்டுச் சென்றான் மணி.

காளியம்மன் கோயில் ஒரு வாய்க்காலுக்கு அப்பால் புதர்கள் நிறைந்த இடத்தில் இருந்தது. இரவிலே அங்கு நரிகள் ஊளையிடும். பாம்புகள் குறுக்கும் நெடுக்குமாக ஊர்ந்து செல்லும். மணி அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. தைரியமாகச் சென்றான். வாய்க்காலைத் தாண்டி, புதர்களைக் கடந்து, காளிகோயில் குங்குமத்தையும், பலிபீடக் கரியையும் எடுத்து வந்தான். அவன் நண்பர்களிடம் காட்டினான். எல்லாரும் அவனுடைய வீரத்தைப் பாராட்டினார்கள்.

அந்த மணியின் முழுப் பெயர் வ. வெ. சுப்பிரமணியன். பெரியவனானதும், வ. வெ. சுப்பிரமணிய ஐயர் என்றார்கள். ஆனாலும், வ. வெ. சு. ஐயர் என்றால்தான் எல்லாருக்கும் தெரியும்.

பாரிஸ்டர் பட்டம் பெற லண்டனுக்குச் சென்ற வ. வெ. சு. ஐயர், பெரிய புரட்சி வீரராக மாறினார். ஆனாலும், மகாத்மா காந்தியைச் சந்தித்த பிறகு, பரம சாதுவாக மாறி, காந்தி வழியிலே பணியாற்றினார்.

அவர் பெரிய தேசபக்தர் மட்டுமல்ல; சிறந்த தமிழறிஞராகவும் அவர் விளங்கினார். தமிழில் முதல் முதலாகச் சிறுகதைகள் எழுதி வெளியிட்டவர் அவர்தான். கம்பராமாயணம், திருக்குறள் இரண்டையும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து அகிலமெல்லாம் அறியச் செய்தார்.



எப்படித் தடுக்கலாம்?

ஆசிரியர்: பேருந்துகள் ஒன்றை ஒன்று மோதாமல் தடுக்க என்ன செய்யலாம்?

மாணவன்: சேரன், சோழன், பாண்டியன் என்ற மன்னர்களின் பெயர்களுக்குப் பதிலாக, புத்தர், ஏசு, காந்தி என்ற பெயர்களை வைப்பதன் மூலம் தடுக்கலாம், சார்.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்



கேசவன் கதை எழுதுகிறான்!

பூதலூர் முத்து

மீனாட்சி தன் கணவர் கலைக்கோவனிடம் மகிழ்ச்சியோடு ஓடி வந்தாள்.

''என்ன மீனாட்சி,இவ்வளவு மகிழ்ச்சியாக வருகிறாய்?'' என்றார் அவர்.

''நம் பிள்ளை கேசவன் கதை எழுதுகிறானுங்க. பாடம் படிக்கிறான்; தேவையான அளவுக்கு விளையாட்டிலேயும் ஆர்வம் காட்டுகிறான். அப்புறம் கிடைத்த நேரத்திலே நோட்டையும் பேனாவையும் எடுத்துக்கொண்டு மாடிக்குப் போய் விடுகிறான். என்ன செய்கிறான் என்று கவனித்தேன். நல்லா அழகா கதை எழுதுகிறான்!''

''அவன் எழுதியதை வாங்கிப் பார்த்தாயா? ஓரளவுக்காவது எழுதுகிற திறமை இருக்கிறதா?''

''அவனிடம்'கேசவா, எங்கே நோட்டைக் காட்டு. நீ எழுதியதைப் பார்க்கலாம்' என்றால் தரமாட்டேன் என்கிறான். 'பத்திரிகைக்கு அனுப்பி வெளி வந்த பின்னால் பத்திரிகையைக் காட்டுகிறேன்' என்கிறான்.''

''சரி, அவனுடைய ஆர்வத்தைத் தடை செய்ய வேண்டாம். அவன் போக்கில் எழுத விடு. ஆனால், படிப்பிலும் அவனது ஆர்வம் குறையாத படி பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார் அவர்.

கேசவ்ன் பாடங்களைப் படிப்பான்; விளையாடுவான். அதற்குப் பின் மாடிக்கு ஓடி அமைதியான சூழ்நிலையில் எழுதத் தொடங்கிவிடுவான். மீனாட்சி தன் பிள்ளையின் ஆர்வத்தையும் சுறுசுறுப்பையும் கண்டு மிகவும் மகிழ்ந்தாள்.

கலைக்கோவன் வீட்டுத் திண்ணையில் செய்தித் தாளைப் படித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

தபால்காரர் வீட்டு வாசலில் வந்து நின்று மணியடித்தார். அவர் கொடுத்த கவரைக் கலைக்கோவன் பெற்றுக்கொண்டார்.

''போதிய தபால்தலை ஒட்டாததால் கவர் திரும்பி வந்திருக்கிறது. நீங்கள் இருபது காசு கொடுங்கள்'' என்றார் தபால்காரர்.

இருபது காசைக் கொடுத்துவிட்டு, மீனாட்சியைக் கூப்பிட்டார் கலைக்கோவன்.

''மீனாட்சி, 'பிருந்தாவனம்' பத்திரிகையிலிருந்து கேசவனுக்குத் தபால் வந்திருக்கிறது.''

''என்னங்க... கேசவனுடைய கதை பிரசுரம் ஆகிவிட்டதா என்று பாருங்கள்...''

''நீ வேறு... இவன் அனுப்பிய கதையினுடைய கவரில் தேவையான தபால்தலை ஒட்டாததால் 'பிருந்தாவனம்' அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளாமல் இவனுக்கே திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.''

''ஐயோ பாவம்... பிள்ளை ஏமாந்து விடப் போகிறான். நீங்கள் சரியான தபால் தலையை ஒட்டி போஸ்ட் ஆபீஸில் போட்டுவிட்டு வந்துவிடுங்கள். கதை திரும்பி வந்த விஷயம் அவனுக்குத் தெரிய வேண்டாம்.''

''அப்படியே செய்துவிடுவோம். இதைப் பிரித்து வேறு கவரில்தான் போட்டு அனுப்ப வேண்டும். அதுசரி, கேசவன்தான் வீட்டில் இல்லையே... அவனுடைய படைப்பை நாம் கொஞ்சம் படித்துப் பார்ப்போமே! நம் பிள்ளையின் இலக்கியத் திறமையைத் தெரிந்து கொள்ளலாம். என்ன எழுதியிருக்கிறான் என்று பார்க்க ஆசையாக இருக்கிறது. அவன் இருக்கும் போது படித்தால் கூச்சப்படுவான்...'' என்றார் கலைக்கோவன்.

''ஆமாங்க. எனக்கும் ஆசையாக இருக்கிறது... எடுத்துப் படியுங்க: பார்க்கலாம்'' என்றாள் மீனாட்சி.

கவரைப் பிரித்து, கதைத் தாள்களை வெளியே எடுத்துப் படிக்கத் தொடங்கினர்.

முதல் பத்தியைப் படித்தவுடனே அவருக்கு விஷயம் விளங்கி விட்டது; முகம் சுருங்கி விட்டது. இருந்தாலும் வருத்தத்தை மீனாட்சியிடம் காட்டிக் கொள்ளாமல்,

''மீனாட்சி... கேசவன் என்ன செய்கிறான் தெரியுமா? ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன் பத்திரிகையில் வேறு ஒருவர் எழுதிய கதையை அந்தப் பத்திரிகையைப் பார்த்து அப்படியே அச்சுப் பிசகாமல் எழுதி அனுப்பியிருக்கிறான். காப்பிக் கதை!''

''அட... இப்படியா செய்வான்? இது நல்ல பழக்கம் இல்லையே...! இதனால் பெயர் அல்லவா கெடும்? நல்ல பெயரும் புகழும் மகிழ்ச்சியும் கிடைக்கத்தானே பத்திரிகைக்கு எழுதுவார்கள்!'' என்றாள் மீனாட்சி.


''சரியாகச் சொன்னாய் மீனாட்சி'' என்றார் கலைக்கோவன்.

''அது சரி. இது காப்பிக் கதை என்று எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?'' என்றாள் அவள்.

''மிகவும் சுலபமாகக் கண்டுபிடித்து விட்டேன். காரணம், 'எழில்' பத்திரிகையில் 'கனிவேலன்' என்ற புனை பெயரில் பத்தாண்டுகளுக்கு முன் நான் எழுதிய கதையாயிற்றே இது!'' என்றார் அவர், சிரித்துக் கொண்டே.

''இது இன்னும் ரொம்ப வேடிக்கையாக இருக்குதுங்க. அப்பாவின் கதையைப் பிள்ளையே காப்பியடித்துப் 'புரட்சி' செய்துவிட்டான் கேசவன்! தொடக்கத்தில் 'கனிவேலன்' என்ற புனைபெயரில் நீங்கள் எழுதியது அவனுக்குத் தெரியாமல் போய்விட்டது. நீங்கள்தான் பிறகு சொந்தப் பெயரிலேயே எழுதத் தொடங்கி விட்டீர்களே!''

''தெரிந்து மட்டும் என்ன? இதை விட்டுவிட்டு வேறு யாருடைய



கதையையாவது பார்த்து எழுதப் போயிருப்பான். இந்தப் பழக்கமே தவறல்லவா?'' என்றார் கலைக்கோவன்.

''அவன் வந்த பின்னால் உள்ளத்தில் படும்படி சொல்லுங்கள்'' என்றாள் மீனாட்சி.

''அது வரைக்கும் பரவாயில்லை. போதிய தபால்தலை ஒட்டாமல் விட்டான். கதை பிரசுரமாகி யிருந்தால் பிரச்சினையாகியிருக்கும். கேசவன் பெயர் கெடும். நம் வருத்தமும் அதிகமாகி யிருக்கும்'' என்றார் அவர்.

“கேசவா இங்கே வா. இந்தக் கதையைப் படி'' என்று அவன் கையில், அவர் பிரமப்பட்டு மாடியிலிருந்து தேடியெடுத்த பழைய 'எழில்' பிரதி ஒன்றைக் கொடுத்தார்.

'இந்தக் கதையை ஏன் அப்பா படிக்கச் சொல்கிறார்' என்று எண்ணிய அவனுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. தயங்கித் தயங்கிப் படித்தான்.

''முயல்' காட்டிய வழி — கனிவேலன்... ஒரு காட்டில்...''

''ஏன்டா தயங்குகிறாய்...? பயப்படாதே! இது நான் 'கனிவேலன்' என்ற பெயரில் குழந்தைகளுக்கு எழுதிய கதை. பத்திரிகை ஆசிரியர் இந்தக் கதையை அழகான வண்ணப் படங்களோடு வெளியிட்டிருக்கிறார், பார்... படத்தைப் பார்த்ததுமே கதையைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வருமே!'' என்றார் கலைக்கோவன்.

தான் செய்துவிட்ட தவறு எவ்வளவு பெரியது என்பதை, கேசவன் அப்போதே உணர்ந்துவிட்டான். 'பேந்தப் பேந்த' விழித்துக் கொண்டிருந்தான். கதையை அவனால் மேலே படிக்க முடியவில்லை.

அவன் 'பிருந்தாவனம்' பத்திரிகைக்கு அனுப்பித் திரும்பி வந்த கதை அடங்கிய கவரை அவனிடம் கொடுத்தார் கலைக்கோவன்.

கேசவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

''கேசவா... நீ நிறைய நூல்களைத் தொடர்ந்து படி. நல்ல காட்சிகளைப் பார்... பள்ளியில் நடக்கும் நிகழ்ச்சிகளை உற்றுக் கவனி. ஒருநாள் சொந்தமாக நீயே எழுதத் துவங்கி விடுவாய். எழுதுவது ஒரு வரியோ... இரண்டு வரியோ... அதைப் பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. அது உன்னுடைய சிந்தனையில் தோன்றியதாக இருக்க வேண்டும். அடுத்தவர் எழுதியதைப் பார்த்து நீ எழுதுவதில் உனக்குப் பெருமை ஏது? அது திருட்டுக்குச் சமம். நீ சொந்தமாக எழுது. முயற்சி செய்; பலன் கிடைக்கும். அதில்தான் பெருமை இருக்கிறது. உன் படைப்பும் ஒருநாள் பத்திரிகையில் பிரசுரமாகும்'' என்று அவனுடைய உள்ளத்தில் பதியுமாறு அன்பாகப் புத்திமதி கூறினார் கலைக்கோவன்.

கேசவனுடைய உள்ளத்தில் தெளிவு பிறந்துவிட்டது!

திருக்குறள் புதிர் - விடை

புதிர்–15

அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்

தமரின் தனிமை தலை. **(814)**

போர் இல்லாத காலத்தில் வீரனைச் சுமந்து சென்று, போர் நடக்கும் காலத்தில் போர்க் களத்திலே அவனைக் கீழே தள்ளிவிட்டு ஓடுகிறது அறிவில்லாத ஒரு குதிரை. அதைப் போன்றவர்களின் நட்பைப் பெறுவதை விடத் தனிமையாக இருப்பதே மேல்.


புதிர்–16

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை. **(55)**


ஒரு பெண், தெய்வத்தை வணங்காது போனாலும், தன் கணவனையே தெய்வமாக நினைத்து வணங்கி வருவாளானால், 'மழையே, பெய்' என்று அவள் சொன்னவுடனே மழை பெய்யும்!

குட்டிக்
கரணம்
போடும்






2




3


குட்டிப்
பாப்பா!



4



5



6




7


போட்டோ:
என். ராமகிருஷ்ணா

தந்திரக் காட்சி!


சற்று கனமான ஒரு அட்டைக் காகிதத்தை இரண்டாக மடித்து படத்தில் காட்டியுள்ளபடி அம்புக் குறியொன்றை அதில் வரையுங்கள்



பின்னர் அதன் முன்புறமாக காலி கண்ணாடி டம்ளர் ஒன்றை நிறுத்தி வைத்து தந்திரத்தின் மூலம் அம்புக் குறியை இடம் மாற்றிக் காட்டுவதாகக் கூறி நண்பர்களைக் கூப்பிடுங்கள்.



பின்னர் காலி கண்ணாடி டம்ளரைத் தண்ணீரால் நிரப்புங்கள். இப்போது பாருங்கள். இடதுபுறம் நோக்கி நீங்கள் வரைந்திருந்த அம்புக்குறி வலதுபுறம் நோக்கி திரும்பியிருக்கும்



மாஜிக் டாய்ஸ் ட்ரிக்ஸ் அண்ட் இல்யூஷன்ஸ் புத்தகத்திலிருந்து

அ.குமார்

புதிர் மன்றம்

கடத்தூர் நெடுமிடல்

புதிர் 1:

எங்கள் வீட்டில் பணம் காய்ச்சி மரம் ஒன்று இருக்கிறது. எங்களுடைய முப்பாட்டனார் நட்டு வைத்த தாம் அது. நூறாண்டுகளுக்கு ஒரு முறைதான் காய்க்கும். அந்த மரம் சென்ற மாதம் காய்ப்பு விட்டது. முதல்நாள் ஒரு ரூபாய் காய்த்தது. இரண்டாவது நாள் இரண்டு ரூபாய் காய்த்தது. மூன்றாவது நாள் 4 ரூபாய் காய்த்தது. நான்காவது நாள் 8 ரூபாய். ஐந்தாவது நாள் 16 ரூபாய். ஆறாவது நாள் 32 ரூபாய்.

இப்படி ஒவ்வொரு நாளும் அதற்கு முந்தைய நாள் காய்த்ததைப் போல இரு மடங்கு பணம் அந்த மரத்தில் காய்த்தது. 24 நாட்கள் இப்படியே பெருகிப் பெருகிக் காய்த்த பிறகு, காய்ப்பு நின்றுவிட்டது. இன்னும் நூறாண்டுகள் கழிந்த பிறகுதான் மீண்டும் காய்க்கும். இந்த அறுவடையில் எங்களுக்குக் கிடைத்த மொத்தப் பணம் எவ்வளவு? கொஞ்சம் கணக்கிட்டுச் சொல்லுங்கள். நாங்கள் எண்ணிச் சரிபார்க்க வேண்டும்.




விடை:
பணம் காய்ச்சி மரம் காய்த்த மொத்தப் பணம் ரூ. 1,67,77,215.

புதிர் 2:

ஒரு பள்ளியில் ஆறும் வகுப்பில் 200 மாணவர்களும், ஏழாம் வகுப்பில் 160 மாணவர்களும், எட்டாம் வகுப்பில் 120 மாணவர்களும் உள்ளனர். வெவ்வேறு வகுப்பு மாணவர்களைக் கலக்காமல் இவர்களைச் சம எண்ணிக்கையுள்ள அணிகளாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வோர் அணியிலும் எத்தனை மாணவர்கள் இருப்பர்

விடை:— 40 மாணவர்கள் இருப்பர்.



புதிர் 3:

ஒரு வண்டியில் வந்த மாம்பழங்களை, கூடைக்கு 72 அல்லது 108 அல்லது 144 எனப் போடலாம். எல்லாக் கூடைகளிலும் சம எண்ணிக்கையாக இருக்குமாறு அந்த மாம்பழங்கள் கூடைகளில் போடப்பட்டன என்றால் குறைந்த அளவு எத்தனை மாம்பழங்கள் வண்டியில் வந்திருக்கும்?

விடை: 432 மாம்பழங்கள்.

புதிர் 4:

சொறுக்கையூர் காரி நாயனார் என்பவர் எழுதிய ''கணக்கதிகாரம்'' என்னும் பழந்தமிழ் நூலில் ஓர் ஒளுன் கணக்கு, செய்யுளாகப் பாடப்பட்டுள்ளது. அதன் பொருள்: ''32 முழம் உயரம் உள்ள பனைமரத்தில்

ஓர் ஒணான் நாளொன்றுக்கு 1 சாண் ஏறி, 4 விரற்கிடை சறுக்கி, பிறகு ஏறுகின்றது. அந்த மரத்தை ஏறி முடிக்க அதற்கு எத்தனை நாள் ஆகும்?''
(12 விரற்கிடை: 1 சாண், 2 சாண்: 1 முழம்.)

முப்பத்திரண்டு முழம் உளமுட் பனையைத் தப்பாமல்
ஒந்தி தவழ்ந்தேறிச் – செப்பமுடன்
சாணேறி நான்கு விரற்கிழியும் என்பரே
நாணு ளொருநாள் நகர்ந்து.

விடை: 95 நாள்.

புதிர் 5:

ஒருவர் தம் மகனைப் போல் எட்டு மடங்கு வயதுடையவர். 3 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் தம் மகனைப் போல் 15 மடங்கு வயதுடையவராக இருந்தார். இப்பொழுது தந்தை, மகன் இவர்களின் வயதுகளைக் கண்டு சொல்லுங்கள்.

விடை: தந்தையின் வயது 48. மகனின் வயது 6.

புதிர் 6:

செப்டம்பர் மாதத்தில் என் தாத்தாவிடம் கொஞ்சம் பணம் இருந்தது. அதில் நூறு ரூபாயை எடுத்து என் அண்ணனுக்குக் கொடுத்து விட்டார். மீதிப் பணம் அவரிடமே இருந்தது.

அக்டோபர் மாத ஓய்வூதியம் வந்த போது மீதிப்பணத்துடன், அதைப்போல மூன்றில் ஒரு பங்கு பணத்தைச்சேர்த்துச் சேமித்து வைத்தார். அந்த மாதம் என் அக்கா சுற்றுப்பயணம் போவதற்காக நூறு ரூபாய் கொடுத்து விட்டார். மீதிப் பணத்தை அவரே வைத்துக் கொண்டார்.

நவம்பர் மாதம் ஓய்வூதியம் கிடைத்தது. தன்னிடமிருந்த மீதிப் பணத்துடன், அதைப்போல மூன்றில் ஒரு பங்கு பணத்தைப் போட்டுச் சேர்த்து வைத்துக்கொண்டார். நான் கடிகாரம் வாங்கவேண்டும் என்று பணம் கேட்டேன். எனக்கும் நூறு ரூபாய் கொடுத்தார்.

மீதிப்பணத்தை அவரே வைத்திருந்து, டிசம்பர் மாத ஓய்வூதியம் கிடைத்தவுடன், மீதிப் பணத்தைப் போல மூன்றில் ஒரு பங்கு பணத்தை மீதிப் பணத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டார்.

இப்பொழுது அவரிடம் உள்ள மொத்தத் தொகை, செப்டம்பர் மாதத்தில் அவர் வைத்திருந்ததை விட இருமடங்கு ஆகும். அந்தத் தொகை எவ்வளவு?

விடை: டிசம்பர் மாதத்தில் மீதித் தொகை ரூ. 2960.




அதற்காக அழவில்லை!

பணக்காரர் ஒருவரிடம் மாடசாமி என்பவன் சமையற்காரனாக இருந்தான். ஒருநாள் விலை உயர்ந்த கண்ணாடிக் கோப்பைகளையும் பீங்கான் தட்டுக்களையும் அவன் கழுவி அடுக்கிக் கொண்டிருந்தான். அப்போது அவனது கால் இடறி அவ்வளவும் உடைந்து நொறுங்கிவிட்டன. அதைக் கண்டு கேவிக் கேவி அழுதான் மாடசாமி.

அப்போது அங்கே வந்த பணக்காரர், ''இவை உடைந்ததற்காகவா அழுகிறாய்? பரவாயில்லை. அழாதே!'' என்று ஆறுதல் கூறினார்.

மாடசாமியோ அப்போதும் அழுகையை நிறுத்தவில்லை. ''எஜமான், இவை எல்லாம் உடைந்ததற்காக நான் அழவில்லை. இப்படி உடைந்து விடும் என்பது முன்பே தெரிந்திருந்தால் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கழுவி வைத்திருக்க மாட்டேனே! அதை நினைத்துத்தான் அழுகிறேன்'' என்று கூறினான்.

–ஏ. எஸ். ராமு



யானையும் குதிரையும்

கெ.முருகசாமி

பழங்காலப் போரில் யானைப் படையும், குதிரைப்படையும் ஒரே மாதிரி சிறந்த இடங்களைப் பெற்றிருந்தன. யானை பலத்திற்கும், குதிரை ஓட்டத்திற்கும் சிறப்பானவை என்பது பொதுவாகக் கூறப்படும் கருத்து. இருந்தாலும் யானையின் கொம்பு (தந்தம்) மிகமிகச் சிறப்பானது. விலை மதிப்புடையது என்பதால் குதிரையைக் காட்டிலும், யானைக்குப் பெருமை அதிகம்! இப்படிப்பட்ட யானைகளும் குதிரைகளும் ஒரு நாட்டில் மிகுதியாக இருப்பது அந்த நாட்டிற்குச் சிறப்பைத் தருவதாகும்.

ஒருநாள் அந்த இரண்டு மிருகங்களும் தங்களுக்குள் பெருமை பேசிக் கொண்டன. என்னென்ன பேசின என்பதை ஒட்டுக்கேட்டு இதோ உங்களுக்குக் கூறுகிறேன்:

குதிரை: யானையே! நீ பெரிய மிருகமாக இருந்தாலும் எனக்குரிய மதிப்புத்தான் உனக்கு இருக்கிறது.

யானை: அது எப்படி?

கு: 'யானை படுத்தால் குதிரைமட்டம்' என்ற பழமொழியை நீ கேட்டதில்லையா? நீ படுத்தால் என் உயரந்தானே இருப்பாயாம்!

யா: ஐயோ குதிரையே! நான் படுத்தால் உன் உயரம் இருப்பேன் என்று கூறுவதிலிருந்தே உனக்கு ஒன்று தெரிந்திருக்க வேண்டுமே!

கு: என்ன அது?

யா: நீ நிற்பதும், நான் படுத்திருப்பதும் சமம் என்றால், என்ன பொருள்? நான் நிற்கும் போது உன்னை விட உயரமாயிருக்கிறேன். இது உனக்கு விளங்கவில்லையா?

கு: ஆமாம்...!

யா: மேலும், நான் படுத்தால் உன் உயரமிருப்பேன். ஆனால் நீ படுத்தால்...?

கு: சரி! சரி! நமக்குள் எதற்கு இந்த வாய்ச் சண்டை. இரண்டு பேரும் சமம்தான்...!

[குதிரைக்கு ஏதோ உள்ளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. சற்று நேரத்திற்குப் பிறகு குதிரை தன் உள்ளக் குமுறலை வெளிக்காட்டுவது போலக் கனைத்துவிட்டு, யானையிடம் கூறத் தொடங்கியது.]

கு: யானையே, உனக்கு இருப்பது இரண்டு கொம்புதான். ஆனால், தேவலோகத்தில் இந்திரனது யானைக்கு எத்தனை கொம்புகள் தெரியுமா? நான்கு! அதைப் பார்க்கும் போது உன்னை எப்படி உயர்ந்தவன் என்று சொல்ல முடியும்?

யா: கொம்பு கூடுதலாக இருந்தால் மதிப்பு உயர்ந்து விடுமா? கொம்பு

குறைவாக இருப்பதுதான் மதிப்பு....!

கு: அது எப்படி?

யா: யானைமுகக் கடவுள் என்று உலகம் தொழுகிறதே, அந்த விநாயகருக்கு எத்தனை கொம்பு?

கு: இரண்டு!

யா: அதுதான் இல்லை! அவருக்கு ஒன்றரைக் கொம்பு.

கு: அரைக் கொம்பு எப்படி வந்தது?

யா: மகாபாரதக் கதையை வியாசர் சொல்லிக்கொண்டே வந்தாராம். விநாயகக் கடவுள் மேரு மலையையே ஏடாக வைத்து எழுதினாராம். எதனால் எழுதினார், தெரியுமா? தன் கொம்பிலே பாதியை ஒடித்து அதையே எழுத்தாணி போல் எழுதப் பயன்படுத்தினாராம். அதனால் என் முகங் கொண்ட கடவுளுக்கு ஒன்றரைக் கொம்புதான்! அந்த ஒன்றரைக் கொம்புள்ள யானை முகத்து இறைவனை எல்லா இடங்களிலும் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து வழிபடுகிறார்கள். கடவுள்களில் முதல் வழிபாடே யானை முகனுக்குத்தான். எனவே கொம்பு குறையக் குறைய மதிப்பு கூடுகிறதல்லவா? ஒன்றரைக் கொம்புடைய விநாயகருக்கு மிகுந்த மதிப்பு என்றால், இரண்டு கொம்புடைய எனக்கு விநாயகருக்கு அடுத்த படியான மதிப்பு. நாலு கொம்புடைய இந்திரனின் ஐராவதம் என்ற யானைக்கு என்னைவிடக் குறைந்த மதிப்புத்தானே? என்ன சொல்கிறாய்?

கு: சரிதான்.

யா: அதுசரி, குதிரையே! நீ எப்பொழுதும் சும்மா இருக்கிறாயே?

கு: ஏன் அப்படிச் சொல்கிறாய்?

யா: சூரியனுடைய குதிரைகள் உன் இனந்தானே?

கு: ஆமாம்!

யா: அவைகளைப் பார்! எப்பொழுதும் ஓய்வின்றி ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் சூரியனுடைய தேரை இழுத்தபடி ஓடிக்கொண்டே இருக்கின்றனவே! நீ அப்படியா?

கு: அது மட்டுந்தான் உனக்குத் தெரிகிறது. அந்தக் குதிரைகள் ஓய்வில்லாமல் ஓடுவதில் ஒரு ரகசியம் இருக்கிறதே! அது உனக்குத் தெரியுமா?

யா: அது என்ன ரகசியம்?

கு: சூரியனுடைய தேரில் எத்தனை சக்கரங்கள்?

யா: ஒன்றே ஒன்றுதான்.

கு: அந்த ஒற்றைச் சக்கரத் தேரை எத்தனை குதிரைகள் இழுக்கின்றன?

யா: ஏழு!

கு: ஒரு சக்கரத் தேரை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. ஆனால், இரண்டு சக்கரமுடைய நம் நாட்டு வண்டியை நான் மட்டுமே இழுத்துச் செல்கிறேன் என்பது உனக்குத் தெரிந்ததுதானே?

யா: ஆமாம்.

கு: ஒரு சக்கரத்திற்கு ஏழு குதிரைகள் என்றால், இரண்டு சக்கரத்திற்கு 14 குதிரைகள் வேண்டுமல்லவா? பதினான்கு குதிரைகள் சேர்ந்து இழுக்க வேண்டிய பாரத்தை நான் ஒருவன் மட்டுமே இழுப்பதால், சூரியனுடைய குதிரைகள் செய்யும் வேலையைவிட நான் பல மடங்கு வேலை செய்கிறேனே, தெரியவில்லையா?

யா: பல மடங்கா?

கு: ஆம், ஒரு சக்கரத்தின் ஓட்டத்தை ஏழு பேர் பகிர்ந்து கொள்ளும் போது, ஒரு குதிரை 1/7 பங்கு வேலையைச் செய்கிறது. ஆனால் நானோ எத்தனை மடங்கு வேலையைச் செய்கிறேன் என்பதை நீயே உணர்வாய் என நம்புகிறேன்!


[யானை சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தது. 'நம்முடைய முகத்தைப் பெற்றது யானைமுகக் கடவுள். அவரைப் போலவே, திருமால், குதிரை முகமுடைய 'கல்கி' அவதாரம் எடுத்திருப்பதை இக்குதிரை கூறிவிடுமோ?' என்ற அச்சம் ஏற்பட்டது. ஆகையால், குதிரையுடன் சமாதானம் பேசத் தொடங்கி விட்டது.]


யா: சரி! சரி! நமக்குள் ஏன் இந்த வேறுபாடு! நாம் எல்லோரும் எப்பொழுதும் போல் ஒற்றுமையாகவே இருப்போம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மையல்லவா?


இந்த யானையும் குதிரையும் பேசிக் கொண்டதாகக் கூறப்படும் கற்பனைக்கு மூலம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் எழுதிய 'பிரபுலிங்க லீலை என்ற நூலில் காணப்படும் ஒரு பாடலே யாகும்.

'ஈச னளித்த ஒருகோட்டி' என்று தொடங்குகிறது அந்தப் பாடல்.

ஓவியராகலாம்!







நீலாக்கண்ணு

ஆழி. வே. ராமசாமி

இந்துவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

மூக்கை உறிஞ்சினாள்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தங்கை நீலாவைத்தான் பிடிக்கும் போலிருக்கிறது.

அப்பா, ஆபீஸிலிருந்து வருகிறபோதே, ''நீலாக் கண்ணு...!'' என்று பிரியத்துடன் கூப்பிட்டுக்கொண்டேதான் வருவார், தின்பண்டங்கள் வாங்கிவந்தால் அவள் கையில்தான் கொடுப்பார்.

''நீலாக்கண்ணு பிறந்த பிறகுதான் எனக்கு உத்தியோக உயர்வு கிடைத்தது'' என்பார் அப்பா.

நீலாவைப் பார்க்கப் பார்க்க இந்துவுக்கு எரிச்சலாக இருக்கும்.

சில சமயங்களில், இந்துவின் புத்தகப் பையை நீலா எடுத்து, புத்தகங்களையெல்லாம் கீழே வீசி விடுவாள்.

''பார் அம்மா, உன் செல்லப் பொண்ணு நீலாவை!'' என்று கத்துவாள் இந்து.

நீலாவை அம்மா கண்டிக்க மாட்டாள். பதிலாக, ''நீ அவளுக்கு எட்டாத இடத்திலே புத்தகப் பையை மாட்ட வேண்டியதுதானேடீ, இந்து!'' என்று இவளைத்தான் திருப்பிப் பிடிப்பாள்.

நீலா செய்யும் குறும்புக்காக இந்து எப்போதாவது அவளை ஒரு தட்டுத் தட்டி விட்டால் போதும், ''அம்மா.. அம்மா... இந்து அக்கா என்னை அடிக்கிறா?'' என்று அழுது புரள ஆரம்பித்து விடுவாள் நீலா.

அம்மாவுக்குக் கோபம் வந்துவிடும்.

''ஏண்டி, அவள் சின்னக் குழந்தைதானே...? அவளை எதுக்கு நீ அடிக்கிறே? பெரியவளான உனக்கே இன்னும் நல்லது கெட்டது தெரியலே. நீ அவளைப்போய் அடிக்கிறே...?'' என்று திட்டுவாள்.

ஒருநாள், இந்துவையும் நீலாவையும் கடைத் தெருவுக்கு அழைத்துக் கொண்டு போனாள் அம்மா.

''அம்மா, என் பேனா சரியா எழுத மாட்டேங்குது. புதுசா ஒரு பேனா வாங்கிக் கொடும்மா!'' என்று கேட்டாள் இந்து.

''இதுக்குத்தாண்டி உன்னைக் கடைத் தெருவுக்கெல்லாம் அழைச்சுக்கிட்டு வரக் கூடாது. வேணுமானால் புதுசா நிப்பு வாங்கித் தாரேன். அந்தப் பேனாவையே வச்சு எழுது, போதும். அப்புறம் பார்த்துக்கலாம்!'' என்றாள் அம்மா.

இந்துவுக்கு முகம் சோர்ந்துவிட்டது.

ஆனால், சிறிது நேரத்திற்கெல்லாம் கடையில் தொங்கிய ஒரு பொம்மையைப் பார்த்துவிட்டு, ''அந்தப் பொம்மை வேணும்... அந்தப்

பொம்மை வேணும்...'' என்று அழத் தொடங்கினாள் நீலா.

''அப்பாகிட்டே சொல்லி வாங்கித் தரச் சொல்றேன்'' என்றாள் அம்மா.

''மாட்டேன் போ. இப்பத்தான் வேணும்'' என்று அடம் பிடித்தாள் நீலா.

கடைசியில் அந்தப் பொம்மையை வாங்கிக் கொடுத்த பிறகுதான் அவளது அழுகை நின்றது!

இந்துவுக்கு வருத்தம் தாங்க முடியவில்லை.

''நான் பேனா கேட்டப்போ, வாங்கித் தரமாட்டேன்னுட்டு, இப்போ அவளுக்கு மட்டும் பொம்மை வாங்கித் தர்றியே அம்மா! அவ மட்டும் உனக்கு ரொம்ப உசத்தியாம்மா!'' என்றாள்.

உண்மையிலேயே இதற்கு உடனே பதில் சொல்ல அம்மா திணறினாள். பிறகு, ''நீ அவளை விடப் பெரியவள். சொன்னா கேட்டுக்குவே. அவள் கேட்கமாட்டாள். இன்னிக்கு முழுக்க அழுதுகிட்டே இருப்பாள்'' என்றாள்.

கையில் புதுப் பொம்மையுடன் இந்துவைப் பார்த்துச் சிரித்தாள் நீலா.



இந்து 'வவ்வவ்வே' என்றாள்.

''பாரும்மா, அக்கா என்னைப் பழிச்சுக் காட்டறா'' என்று சிணுங்கினாள் நீலா.

''இந்து, நீ சும்மா வரமாட்டே?'' என்று அதட்டினாள் அம்மா.

வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் நீலாவின் முதுகில் ஓங்கி ஓர் அறை விட்டால் தேவலாம் என்று நினைத்தாள் இந்து.

என்னவோ தெரியவில்லை, அன்று மறுநாள் இந்துவுக்குக் கடுமையான ஜுரம் வந்துவிட்டது.

ஊசி போட்டு, மருந்தெல்லாம் கொடுத்தாயிற்று; என்றாலும் ஜுரம் விடவில்லை.

போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு சுருண்டு படுத்துவிட்டாள் இந்து. 'அம்மா, அம்மா' என்று இரவு முழுவதும் முனகல்.

அப்பாவும், அம்மாவும் அவளைக் கவலையுடனும் அக்கறையுடனும் கவனித்துக் கொண்டார்கள்.

மாலை ஐந்து மணி இருக்கும். ஆபீஸிலிருந்து அப்பா இன்னும் வரவில்லை.

அம்மா பரபரப்புடன், ''நீலா.... நீலாக்கண்ணு... நீலா...! என்று கூப்பிட்டுக்கொண்டே அங்குமிங்கும் நீலாவைத் தேடினாள்.

ஆனால் நீலாவைக் காணோம்!

''அம்பிகே! நான் என்ன செய்வேன்! குழந்தையைக் காணோமே!'' என்று புலம்பிக் கொண்டே அக்கம் பக்கத்திலெல்லாம் தேடினாள் அம்மா.

நீலாவைக் காணவில்லை!

குழந்தை கழுத்தில் போடப்பட்டிருந்த சங்கிலிக்கு ஆசைப்பட்டு அவளை யாராவது தூக்கிக்கொண்டு போய்விட்டார்களோ என்று நினைத்த போது, பெற்ற வயிறு பகீர் என்றது. உடம்பு நடுநடுங்கியது.

படம் எடுக்கிறது!

பாம்பு படம் எடுக்கிறதுடா. ஸ்மைல் பிளீஸ்!

—கீதா



நீலாவைக் காணவில்லை என்றதும் இந்து படுக்கையிலிருந்து சிரமப்பட்டு எழுந்துவிட்டாள்.

''கடவுளே, நீலா கிடைச்சுடணும்'' என்று வேண்டிக் கொண்டாள். ஜுரத்துடன் அவளும் அங்குமிங்கும் தேட ஆரம்பித்தாள்.

சமையல் அறை, கொல்லைப் பக்கம், அப்பாவின் அறைப்பக்கம் — எங்கும் தேடியாயிற்று.

தற்செயலாகப் பூஜை அறையைத் திறந்து பார்த்த இந்து, ''அம்மா... அம்மா...! இதோ இருக்கா நீலா!'' என்று பரபரப்புடன் கத்தினாள்.

நீலா, பூஜை அறையின் மங்கலான இருளில், சுவாமி படத்தின் முன்னால் கண்களை மூடிக்கொண்டு, கைகளைக் குவித்து வைத்துக்கொண்டு, ஆடாமல், அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

''நீலா... நீலா...!'' என்று கூப்பிட்டபோதுகூட அவள் அசையவில்லை.

அம்மா ஓடிவந்து தூக்கியபோதுதான் அவள் கண் திறந்து பார்த்தாள்.

''நீலாக்கண்ணு, என் வயித்திலே பாலை வார்த்தியேடி! ஏண்டி இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறே? உன்னை எங்கெல்லாம் தேடறது?... கொஞ்ச நேரத்துக்குள்ளே என்னைக் கதிகலங்க அடிச்சுட்டியேடி!'' என்றாள் அம்மா.

நீலா மலங்க மலங்க விழித்தாள்.

''அம்மா, இந்து அக்காவுக்கு ஜுரமா இருக்கு. மேலத் தெரு பாமா அக்கா ஜுரம் வந்துதானே செத்துப் போச்சு! அதனாலே எனக்குப் பயமா இருந்திச்சு. 'சாமி, சாமி, எங்க இந்து அக்காவுக்கு ஜுரம் போயிடணும். அது பொழச்சுக்கணும். என்கூட விளையாடணும்'னு சாமிக்கிட்டே வேண்டிக்கிட்டிருந்தேன். அதனால்தான் நீ கூப்பிட்டதுகூட என் காதிலே விழலேம்மா!'' என்றாள்.

'அட, இந்த நீலாவையா நான் வெறுத்தேன்?' என்று வருத்தப்பட்டாள் இந்து.

''அடி என் சமர்த்து நீலாக் கண்ணு!'' என்று கண்ணீருடன் அவளை அள்ளி அணைத்துக் கொண்டாள். அப்பொழுதே அவளுக்கு ஜுரம் விட்டுப் போனது போல் ஆயிற்று.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, நீலாவை இந்து வெறுப்பதேயில்லை.

'நீலாக் கண்ணுக்கு என் மேலே எவ்வளவு பிரியம்!' என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து போவாள்.

கங்காதரன்

(வேடிக்கையான ஒரு நாடோடிக்கதை)

எஸ். மாதவன்



ஓர் ஊரில் சலவைத் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவர் கங்காதரன் என்ற ஒரு கழுதையை வளர்த்து வந்தார். சலவைத் தொழிலாளியின் மனைவி அதை மிக அன்புடன் வளர்த்தாள். அவர்களுக்குக் குழந்தை இல்லாததால் கங்காதரனை மிகவும் உயிராக நேசித்தனர்.

ஒரு தினம் கங்காதரன் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டது. தன் குழந்தையாகவே எண்ணி வளர்த்த சலவைத் தொழிலாளியின் மனைவி துக்கம் தாங்காமல் அலறி அழுதாள்.

''ஐயோ, கங்காதரா, எங்களை விட்டு விட்டுப் போயிட்டியே'', என்று புலம்பினாள். அவள் அழுவதைக் கண்ட அவள் கணவனும் தன் மனைவி அழுவதைத் தாங்காமல் வீறிட்டு அழுதான்.

ஊரார் அவர்கள் அழுவதைக் கண்டதும் துக்கம் கொண்டு, அவர்களும் அழ ஆரம்பித்தனர். ஊரே அங்கு கூடிவிட்டது. எல்லோரும் ''கங்காதரா, போயிட்டியே!'' என்று புலம்பினர்.

அந்தச் சமயம் அந்தப் பக்கமாக வந்த சில அரண்மனைச் சேவகர்கள், ''என்ன விஷயம்? ஏன் இங்கே ஊரே கூடியிருக்கிறது?'' என்று அதட்டிக் கேட்டனர்.

கூடியிருந்த ஜனங்கள், 'ஓ'வென்று அழுதவாறு 'கங்காதரன்' செத்துப் போனதாகக் கூறினார்கள்.

சேவகர்கள், ''ஓ! கங்காதரன் என்ற பெரிய மனிதர் இறந்து விட்டார் போலும். இத்தனை கும்பல் இருப்பதால், அவர் பெரிய மனிதராகத்தான் இருக்க வேண்டும். இதை உடனே அரண்மனைக்குச் சென்று தெரிவிக்க வேண்டும்'' என்று அவர்களும் கண்ணீர் விட்டுக் கதறியபடி அரண்மனைக்குச் சென்று அங்குள்ள மந்திரி, சேனாதிபதி, மற்றும் எல்லா அதிகாரிகளிடமும் விஷயத்தைச் சொல்லி அழுதனர்.

மந்திரி உடனே அலறி அழுதபடி ராஜாவிடம் ஓடினார். மற்றும் அரண்மனையில் உள்ள எல்லோருமே துக்கத்துடன் கண்ணீர் வடிப்பதைக் கண்டு, ''என்ன விஷயம்?'' என்று அரசர் வினவினார். இத்தனை பேரும் கண்ணீர் வடிப்பதைக் கண்டு பயந்தார்.

''ஐயோ! அரசே... கங்காதரன் இறந்து போய் விட்டார்'' என்று அவர்கள் அழுதபடி கூறினார்கள்.

அரசருக்கு ''கங்காதரன் யார்?'' என்று வினவ ஆசை. ஆனால், 'இது கூட அரசருக்குத் தெரியவில்லையே!' என்று மற்றவர்கள் நினைத்து விட்டால், என்ன செய்வது என்ற எண்ணத்துடன், ''ஐயோ! கங்காதரன் போய்விட்டாரா?'' என்று தலைமேல் கைவைத்தபடி அவரும் அழ ஆரம்பித்தார். அப்போது அங்கே வந்த ராணி அரசர் அழுவதைக் கண்டாள். உடனே அவளும் அழுதாள். அரண்மனை முழுவதும் அழுகை ஒலிதான்! அரசர் அழுவதைக் கண்டு அழாதவர்களும் அழுதனர்.

திடீரென்று அழுகையை நிறுத்திய ராஜா, ராணியை நோக்கி ''நீ ஏன் அழுகிறாய்?'' என்றார். ''நீங்கள் அழுவதைக் கண்டு வருந்தி நான் அழுகிறேன்'' என்றாள் ராணி. உடனே அரசர் மந்திரியைக் கூப்பிட்டு, ''யார் அந்தக் கங்காதரன்?'' என்று வினவினார். மந்திரி விழித்தபடி அரண்மனையில் உள்ளவர்களை விசாரித்தார். அவர்கள் புரியாமல் சேவகர்களிடம் விசாரிக்க ஓடினார்கள்.

சேவகர்கள் சலவைத் தொழிலாளியின் வீட்டிற்கு ஓடினார்கள்.

''இங்கு கங்காதரன் என்பது யார்?' என்று கேட்டனர். பிறகுதான் சலவைத் தொழிலாளி அன்புடன் வளர்த்த கழுதைதான் கங்காதரன் என்பது தெரிந்தது. முன்பின் விவரம் கேட்காமல் இருந்ததற்கு வருந்தி அரசரிடம் வந்து விஷயத்தைச் சொன்னார்கள்.

ஒரு கழுதை இறந்ததற்காக ஊரே அழுததுடன், தானும், ராணியும் சேர்ந்து அழுததை நினைத்து வெட்கித் தலைகுனிந்தார் அரசர்.



கையில் எத்தனை கை?

-'டயானா'

நம் இரு கைகளைத் தவிர அன்றாடம் எத்தனை ''கை''களைப் பார்க்கிறோம். கொடுக்கப்பட்ட குறிப்புகள் துணை கொண்டு சரியான ''கை''யைக் கண்டுபிடியுங்கள்.


(உ—ம்) முதல் குறிப்புக்கு விடை புகை.

1. நெருப்பில் இருக்கும் கை. —கை
2. தலையில் வளரும் கை, —கை
3. ஆதிமனிதன் வசித்த கை, —கை
4. எதிரியிடம் வளர்க்கும் கை —கை
5. பெண்கள் அணியும் கை —கை
6. மயிலிடம் உள்ள கை, —கை
7. வீரர்கள் சூடும் கை, —கை
8. தமிழ்ப் பாட்டில் வரும் கை —கை
9. காலில் அணியும் கை, —கை
10. அண்ணனின் அன்புக்கை —கை
11. உதட்டில் தவழும் கை —கை
12. பூசாரி வைத்திருக்கும் கை —கை
13. நாடகத்திற்குமுன்போடும்கை —கை

விடைகள்:—

1. புகை.
2. சிகை.
3. குகை.
4. பகை.
5. நகை.
6. தோகை.
7. வாகை.
8. எதுகை.
9. பாதுகை.
10. தங்கை.
11. புன்னகை.
12. உடுக்கை.
13. ஒத்திகை.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543) Editor: K. Rajendran



டாக்டர் ஜாகிர் உசேன்

பிறந்தநாள்- பிப்ரவரி.18

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

